

கல்கி
KALKI 26-4-81 ரூ. 1.20


வாழ்வின் இணையிலா இனிமைகள்
அவை என்றென்றும் புதுமைகள்
Pond's
நீங்கள் எப்போதும்
விரும்பும் சுகந்த மணம்

HTM-PIL-2133

பந்துக்குள்..... பந்துக்குள்.....

● சிற்பச் சிங்கத்தின் திறந்த வாய்க்குள் பந்து சுழல்வதை நீங்கள் பார்த்திருக்கலாம். ஒரே கல்லில் சிங்கத்தையும் வடித்து அதன் வாய்க்குள் ஒரு பந்தும் சுழலும்படி செய்த சிற்பியின் திறன் கண்டு வியந்திருக்கலாம்.

இதோ படத்தில் இருப்பது அற்புதமான சுழல் பந்து. 15 செ.மீ. விட்டமுள்ள இந்தப் பந்து தந்தத்தில் கடையப்பட்டு வேலைப் பாடுகள் நிரம்பியதாய் உருவாக்கப்பட்டது. ஒன்றுக்குள் ஒன்றாகத் தனித் தனியே சுழன்று வரும்படி 44 அடுக்குகள் இதில் உள்ளன!

''நிலவுக்கு'' என்கிற பெயர் பூண்ட இந்தக் கலைப் படைப்பை உருவாக்கியுள்ள வெங் ரொங்பியாவ், இந்தச் சுழல் பந்து தயாரிப்பில் 44 வருட அனுபவம் பெற்றவர். சென்னையைச் சேர்ந்தவர். அவருடைய தந்தையாரிடம் பதினோராவது வயதிலேயே இந்தக் கலையைக் கற்றுக் கொண்டாராம்.

ரொங்பியாவின் தந்தை 28 அடுக்குகள் அமைந்த சுழல் பந்துகளைச் செய்தார்.

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் குவாங்செள நகரத்தில் முதன் முதலாய், இரட்டை அடுக்குச் சுழல் பந்துகளைச் செய்தார்கள். அதன் பின்னர், ரொங்பியாவின் கொள்ளுத் தாத்தா பல அடுக்குகளில் சுழலும் தந்தப் பந்துகளைச் செதுக்கினார். அடுக்குகளின் எண்ணிக்கை அடுத்தடுத்த பரம்பரையில் அதிகரித்து இன்று அதிகபட்சமாக 44ல் நிற்கிறது!

நுனியில் சற்றே வளைந்த கத்திகளின் மூலம் உட்புறப் பந்துகளை, மேல் அடுக்குகளை விட்டுப் பிரித்துச் செதுக்க வேண்டும். அடுக்குச் சுவர் 2 மி.மீ. கனம் உடையது. ஒவ்வொரு அடுக்குக்கும் இடையே மயிரிழை இடைவெளிதான் இருக்க வேண்டும். துல்லியமாய், ஒரே சீரான முறையில் அடுக்குகள் செதுக்கப்படாவிட்டால் உட்புற அடுக்குகள் சுழலாமல் போய்விடும்.

கத்தி, வேலை செய்து கொண்டிருப்பதை வெளிப்புறம் இருந்து பார்க்க முடியாது. வெறும் உணர்வுகள், கருவி உள்ளே செதுக்கும்போது ஏற்படுகிற ஓசை இவற்றை வைத்துத்தான் காரியம் செம்மையாக நடைபெறுகிறதா, அல்லது தவறு நேர்கிறதா என்பதை அறிந்து கொள்ள முடியும்.

வெங் ரொங்பியாவ், இந்த மாதிரியான 30 முதல் 40 அடுக்குச் சுழல் பந்துகளைச் செதுக்கி முடிக்கச் சாதாரணமாய் முப்பது மணி நேரம் எடுத்துக் கொள்கிறார்.

நன்றி: 'சைனு பிக்டோரியல்'

— சுப்ரபாலன்





பந்துக்குள்... பந்து !

அத்தகாரு ரொம்பக் கண்டிப்பானவர்!



"**நா**ன் சென்னையில் வந்து இறங்கியவுடன் தங்கியிருந்தது ஆந்திர மகிளா சபாவில்தான். முதலில் சேர்ந்தது டாக்டர் பத்மா சுப்பிரமணியத்தின் நாட்டியப் பள்ளியில். நாட்டியத்துக்குப் பிறகு நேரம் நிறைய இருந்ததால் தபால் வழியே ஆந்திரா பல்கலைக் கழகத்தில் எம்.ஏ. பட்டம் படிக்க ஆரம்பித்தேன். இச்சமயத்தில்தான் எனக்குத் திரைப்பட அழைப்பு வந்தது: நான் நடித்த முதல் தெலுங்குப் படம் 'மார்ப்பு'.

"நான் நடிக்கிறேன் என்பதே பலருக்கு அப்போது தெரியாது. "நன்றாக வந்து விட்டால் சொல்லலாம்; இல்லாவிடில்பேசாமலிருந்து விடலாம்" என்று நினைத்துத்தான் சொல்லாமலிருந்தேன்."

இப்படி ரூபா கூறிக் கொண்டிருக்கையிலேயே ஆந்திர மகிளா சபா வந்து சேர்ந்து விட்டோம்.

வயதான ஒரு மூதாட்டி வெள்ளை உடையில் வந்து வரவேற்றார். "அத்தகாரு! சௌக்கியமா?" எனக் கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தார் ரூபா. மூன்று வருடங்களுக்கு முன்பு இருந்த இடத்தைச் சுற்றிப் பார்ப்பதில் ஒரு குழந்தையைப் போல் மகிழ்ச்சியடைந்து அத்தகாருவிடம் ஏகமாகக் கேள்விகள்: "நீங்க நல்லா இருக்கீங்களா? என் பழைய தோழிகள் எல்லாம் இருக்காங்களா? புதுசா என்னென்ன வசதிகள் செஞ்சிருக்கீங்க?...."

அடுத்தடுத்து வந்த கேள்விக் கணைகளின் தாக்குதலில் அத்தகாரு பிரமித்து விட்டார். அவரது பிரமிப்பு நீங்குவதற்குள்ளாகவே, என் பக்கம் திரும்பிய ரூபா, "அத்தகாரு என்றால் தெலுங்கில் 'மாமியார்' என அர்த்தம்!" என்றார்.

பல வருடங்களுக்கு முன்பு யாரோ ஒருவர் இவரை விளையாட்டாக "அத்தகாரு" எனக் கூப்பிட அப்பெயரே அவருக்கு நிலைத்து விட்டதாம்! "சில மாமியார்கள் கூட ரொம்பத் தாராளமாக இருப்பாங்க; ஆனா இவர் ரொம்ப 'ஸ்ட்ரிக்ட்!' நான் இங்கு இருந்த பொழுது எனக்கு உறவினர்கள் அதிகமாதலால் நிறைய டெலிபோன் வரும். "யார் உனக்குச் சும்மா சும்மா போன் பண்றாங்க?" எனக் கேட்பார். நான் இந்த இடத்தை விட்டுப் போகும்போது கூட "நீங்களெல்லாம் பெண்களாச்சேன்னு நான் கொஞ்சம் ஸ்டிரிக்டா இருந்திருப்பேன் இல்லையா?" எனக் கேட்டார். அப்போதுதான் எனக்குத் தெரிந்தது அது எவ்வளவு அவசியம் என்று."

ரூபா என்னிடம் தமிழில் சொன்னதைப் புரிந்து கொண்டாரோ என்னவோ அத்தகாரு, "இப்பொழுதெல்லாம் ஆறு மணிக்குள்ளாகவே எல்லோரும் அறைகளுக்குத் திரும்பி விட வேண்டும். புதுசாக டீவி வாங்கி இருக்கிறோம் பிள்ளைகள் பார்ப்பதற்காக; கவனிச்சியா?" என்றார். தொடர்ந்து, "புதிதாக ஒரு வரவேற்பறையும் கட்டினோம். அதில்தான் நீ இப்போ உட்கார்ந்திருக்கிறாய்" என்று சொன்னவுடன் ரூபா சுற்று முற்றும் பார்த்தார்.

"ரொம்ப நன்றாக இருக்கிறது" எனச் சொல்லிக்கொண்டே எழுந்து, தாம் முன்பு இருந்த அறையை நோக்கி நடந்தார். போகும் பொழுதே, "இப்பொழுது என் அறையில் யார் இருக்கிறார்கள்? மாலினி எந்த அறையில் இருக்கிறாள்?" எனக் கேட்டார். "நீ இருந்த அறைக்குப் பக்கத்து அறையில்தான் மாலினி இருக்கிறாள்" என அத்தகாரு கூறவும் "வா பிரேமா எவ்வளவு நாளாச்சு பார்த்து!" என்று மாலினி தன் அறை வாசலுக்கு வந்து வரவேற்றார். எனக்கு ஷாக்!


⌘ தோழி மாலினியுடன் பிரேமா!



''பிரேமாவா? யாரது?'' என்றேன்.

ரூபாதான் அந்தப்புதிரை விடுவித்தார். ''என் உண்மைப் பெயர் பிரேமாதான். ரூபா என் சினிமாப் பெயர்'' என்று கூறிவிட்டு மாலினியுடன் பேச ஆரம்பித்தார். பெண்களுக்கே சுவாரஸ்யமளிக்கும் கிசுகிசுப்புகள், சினிமா, புடவை எனப் பல்வேறு அம்சங்களுக்குள் புகுந்து வெளியேறினார்கள்.

இதற்குள் ரூபா வந்திருக்கிறார் என்ற செய்தி மாணவிகளிடையே பரவிக் கூட்டம் கூட்டமாகக் கொலு பார்ப்பது போல் வந்து பார்த்துச் சென்றார்கள் ரூபாவை. அவர்



⌘ அத்தகாருவுடன் ரூபா



⌘ மாணவியருக்கு மத்தியில்

களின் ஆர்வத்தைப் பார்த்த நான், ஹாலிலேயே எல்லோரையும் உட்காரச் செய்து நடுவே ரூபாவை உட்கார வேண்டினேன். அவ்வளவுதான். கலகலவென்று எல்லாரும் கேள்விகள் கேட்க ஆரம்பித்து விட்டார்கள்.

''இப்போ என்ன படம் நடிக்கிறீர்கள்? மொத்தம் எத்தனைபடம் நடித்திருக்கிறீர்கள்? ரவீந்தர் பிடிக்குமா, சங்கர் பிடிக்குமா?'' இத்யாதி, இத்யாதி.

எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொல்லாமல் சில கேள்விகளுக்குப் பதில்; சில கேள்வி

ரூபா. எம். ஏ. படித்தவராயிற்றே! கையெழுத்து வேட்டை ஆரம்பமாயிற்று. அத்தகாரு, ''ரூபாக்குக் காப்பி உண்டா?'' எனத் தெலுங்கில் கேட்க, ''ஓ! வரவேற்பு அறையில் எல்லாம் ரெடி'' எனப் பதில் வந்தது. காப்பி மட்டுமின்றி, உப்புமா, வாழைப் பழம் ஆகியவையும் காத்திருந்தன.

ஆந்திர மகிளா சபா மாணவிகள் மட்டுமின்றி அங்கு வேலை செய்யும் எல்லோருடனும் நின்று புகைப்படமெடுத்துக் கொண்டு ஒவ்வொருவரையும் தனித் தனியே விசாரித்து



வாங்க!.. வாங்க!..
தாச்சர்
கருத்து வேற்றுமைகள்



கொடி உங்களுக்குப் பிடிச்சிருக்கா?
அரிவாளை நீக்கிட்டா இன்னும் அழகா இருக்கும்!
வகுப்புக் கலவரம்
ராமநாதபுரம்
கண்ணீர் துடைக்க நான் இருக்கேன்! கவலைப்படாதே!

வாய்ப்பந்தலின் வெற்றி!

நேற்று சிறுவனாக இருந்தவன் இன்று வளர்ந்து வாலிபனாகிறான் என்பதற்கு அடையாளமாக மீசை முளைத்தால் மட்டும் போதுமா? வயதுக்கேற்ற உடல் வளர்ச்சி இருக்கிறதா என்று பார்க்கிறோம். இல்லையெனில் வைத்தியர் உதவியை நாடுகிறோம்.

அதுபோல...

சுதந்திரம் பெற்று 33 ஆண்டுகளில் தேசம் வளர்ச்சி அடைந்திருக்கிறது என்று சொன்னால் மட்டும் போதுமா? போதிய அளவு வளர்ச்சி இருக்கிறதா? தொழில், வர்த்தக முன்னேற்றத்தின் வேகம் திருப்தி அளிக்கிறதா என்றும் பார்க்க வேண்டுமல்லவா?

1960ல் நமது நாடு தொழில் வளர்ச்சியில் உலகில் 12வது ஸ்தானம் வகித்தது. 78ல் 23வது ஸ்தானத்திற்குத் தள்ளப்பட்டது! எப்படி வளர்ச்சி வேகம்?

வயதுக்கேற்ற வளர்ச்சியைச் சுதந்திர இந்தியா அடையாததற்குக் காரணம் 33 வருஷங்களாக அரசு கடைப்பிடித்து வரும் தவறான கொள்கைகள்தாம். இந்தக் கொள்கைகளுக்கு நேர் எதிரான ஆரோக்கியமான மாற்றுப் பொருளாதாரக் கொள்கைகளை உடைய கட்சியும் இன்று இங்கு இல்லை; இருந்தபோது மக்கள் அதற்கு ஆதரவும் தரவில்லை. இது நமது துரதிஷ்டம், அல்லது தலையெழுத்து, அல்லது விதி, அல்லது ஏதோ ஒன்று!

வர்த்தகத் துறையில் வழிகாட்டியாக விளங்கும் ஒருவர் ஆண்டுதோறும் அனந்தராமகிருஷ்ணன் நினைவு சொற்பொழிவு நிகழ்த்துவார். அப்போது அவரைக் கௌரவித்து ஞாபகார்த்தப் பரிசு வழங்குவார், அனந்தராமகிருஷ்ணனின் மகன் ஏ. சிவசைலம். இந்த ஆண்டு சொற்பொழிவாற்ற சென்னை வந்தவர் கிர்லோஸ்கர். அவர் அபார துணிச்சலுடன் ஒரு 14 அம்சத் திட்டத்தை விவரித்தார். அவற்றுள் சில:

★ சக்திக்கு மீறிய திட்டங்களைப் போட்டு எதையும் சரிவர நிறைவேற்றாமல் பொருளாதார சீர்குலைவுக்கு அடிப்படைக் காரணமாக விளங்கும் திட்டக் கமிஷனைக் கலைத்து விடவேண்டும். ★ சதா நஷ்டமே அடைந்துவரும் அரசுத் துறை நிறுவனங்கள் கைமாறித் தனியார் நிர்வாகத்துக்கு வரவேண்டும். மக்கள் நேரடி பங்குதாரர்களாக வேண்டும். ★ தொழில் வர்த்தகத்தில் எல்லாவித கண்ட்ரோல்களையும் நீக்கிவிட வேண்டும். ★ ஏகபோக்கியங்களைக் கட்டுப்படுத்துகிறோம் என்ற பெயரில் தொழில் விஸ்தரிப்புக்குத் தடையாக உள்ள சட்டங்களை ரத்து செய்துவிட வேண்டும். ★ குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தை இப்போதைக்கு மூட்டை கட்டி வைத்துவிட வேண்டும். இது புதிய தொழில்கள் தொடங்கவும் அதிகம் பேரை வேலைக்கு வைக்கவும் தடையாக இருந்து வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பெருக்குகிறது. ★ சமுதாய ரீதியிலும் தொழில் வர்த்தக ரீதியிலும் அரசு அடிப்படை அம்சங்களை மட்டும் கவனித்துக்கொண்டு மற்றவற்றை மக்களே செய்ய அனுமதிக்க வேண்டும். ★ இதனால் அரசின் செலவினங்கள் குறையுமாதலால் அரசு பலரக மறைமுக நேர்முக வரிகளை நீக்கவும் குறைக்கவும் வேண்டும். ★ பாங்குகள் வழங்கும் கடனுக்கு வட்டி விகிதம் குறைய வேண்டும். ★ வியாபாரத்தையும் தொழிலையும் பூரண சுதந்திரத்துடன் இயங்க அனுமதித்து விட்டால், அவை வேகமாக வளர்ச்சியுற்று, இயற்கை வளங்களை முழுமையாகப் பயன்படுத்தவும் அதிகபட்ச வேலை வாய்ப்பு ஏற்படவும் வழி

படுத்த அவசியமின்றி, தொழில் வர்த்தக வளர்ச்சியுடன் வேலைவாய்ப்பும் பெருகி ஏழைமை ஒழிப்பு இயல்பாகவே நடந்தேறிவிடும்.

ஆனால் நமது சோஷலிஸ வாய்பந்தல் வீரர்கள் என்ன செய்வார்கள்? கிர்லோஸ்கரின் யோசனைகளை, ''பண மூட்டையின் பிதற்றல்'' என்றும், ''சூழ்ச்சி'' என்றும் வர்ணிப்பார்கள். நமது அப்பாவி மக்களும் அதையே நம்புவார்கள். இந்தியா சீக்கிரமே 23வது ஸ்தானத்திலிருந்து 36வது இடத்துக்குத் தள்ளப்படும். ஏழைமை ஒழிப்பு கோஷம் தொடர்ந்து ஒலித்துக் கொண்டேயிருக்கும். நம்மைப் போன்ற பாக்கியசாலிகள் யார்?



வர்களுக்குக் கிடைப்பதில்லை என்றும் ஆற்றலிருந்தும் புதிய இளம் எழுத்தாளர்கள் முன்னுக்கு வர முடிவதில்லை என்றும் பரவலாக அடிக்கடி பேசப்படுகிற விஷயம்தான்.

இங்கு மட்டுமல்ல; அமெரிக்காவிலும் இத்தகைய சிரமம் உண்டு என்பதைச் சமீபத்திய செய்தி தெளிவாக்குகிறது. இன்று புலிட்ஸர் பரிசு பெற்றிருக்கும் நாவலை எழுதிய ஜான் கென்னடி டூல் இந்த நாவலைப் பிரசுரிப்பாரே இல்லாததால் மனமொடிந்து தற்கொலை செய்து கொண்டார் 1969ல். அவர் தாயாரின் விடாமுயற்சிதான் நாவல், நூல் வடிவம் பெற உதவியது. 1981ம் ஆண்டின் புலிட்ஸர் பரிசை இந்த நையாண்டி நாவல் பெற்றிருக்கிறது.

● ''நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே'' என்று கூறியவன் அந்நாளைய நக்கீரன். இன்றைய 'பைப்' பிடிக்கும் நக்கீரனோ குற்றம் சுமத்தினால் அதற்குப் பதில் கூறாது நழுவி, சம்பந்தமில்லாத வேறு எதையோ கூறி மழுப்பப் பார்க்கிறவர்.

அனிதா இங்கு நையாண்டி செய்து சுமத்திய குற்றத்துக்குப் பதில் கூறுவதை விட்டு, (பதில் இருந்தால்தானே?) ''கல்கி மாமிக்கு இளமை திரும்புகிறது... இடிக்கிறது, புடைக்கிறது'' என்று வழிகிறார்.

கல்கி இன்றைய இளைஞர் சமுதாயத்தைக் கவர எண்ணுவது என்ன மன்னிக்க முடியாத குற்றமா? அல்லது தமிழ் நாட்டின் இளைஞர்களைக் கவர்வதென்பது என்ன இதயம் அண்டு கோவின் ஏகபோக உரிமையா?

நக்கீரன் ஸார்! கல்கி இளைஞர்களைக் கவரத்தான் செய்கிறது; கெடுக்கவில்லை. பத்திரிகை சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்யவில்லை. அந்தச் சாமர்த்தியம் ஹிப்பாக்ரிஸி பற்றி நன்கு ஆராய்ந்து அறிந்திருப்பவர்களுக்கே உண்டு!

● ● ●

● இலக்கியச் சிந்தனை பரிசு, பாலகுமாரனுக்கும் (மெர்க்குரிப் பூக்கள்) கோமல் சுவாமிநாதனுக்கும் (தண்ணீர் தண்ணீர்) கிடைத்திருக்கிறது. ரூ. 5000 பரிசு பிரிக்கப்பட்டதால் கொஞ்சம் 'சப்'பென்று ஆகிவிட்டாலும் கிடைக்க வேண்டியவர்களுக்குப் பரிசு கிடைத்ததில் மகிழ்ச்சி. சென்ற ஆண்டின் சிறந்த சிறுகதைக்கான பரிசைத் திருப்பூர் கிருஷ்ணன் பெற்றுள்ளார்.


இலக்கியகர்த்தாக்களுக்கு என்று ஏற்பட்ட பரிசுகளும் விருதுகளும் கிடைக்க வேண்டிய

● ● ●

● விருதும் பரிசும் பாராட்டும் பெற எத்தனையோ பேர் ஆர்வமாக இருக்கிற தமிழ் நாட்டில்தான் கிடைத்த தாமிரப் பட்டயம், உதவித் தொகை ஆகியவற்றைத் திருப்பித் தந்த தியாகி குமாரசாமியும் வாழ்கிறார். ''எங்கும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு—இதற்காகவா நாங்கள் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டோம்?'' என்று மனம் நொந்து, தமது தாமிரப் பட்டயத்தைத் திருப்பித் தந்ததுடன் இனி பென்ஷன் பணமும் பெறப் போவதில்லை என அறிவித்து விட்டார் இவர். இவ்வளவுக்கும் அவர் இனிஷியல் என்ன தெரியுமா? ஓசி!

நம்மிடையே ஆன்மப் பரிசோதனையை வளர்க்க உதவும் ஓசி குமாரசாமியின் இன்றைய தியாகம், அவரது விடுதலைப் போராட்டக் காலத் தியாகத்தை விடச் சிறந்தது.

✖ கோமல் சுவாமிநாதன்




✖ பாலகுமாரன்



Only for those who like to be sure





The VIP label. Your guarantee of comfort and confidence. Confidence that your anatomy demands from scientifically designed underwear.

Made from the choicest fabric. With the softness, the smoothness... and the feel that gives the VIP feeling.

Durable underwear from VIP. A complete price range... because every person is important.

VIP®

சுவர்ணமுகி

ஸ்ரீ வேணுகோபாலன்

''கோரமண்டல் பிரதேசத்தில் தனவந்தர்கள் தங்கள் மனைவிகளைத் தவிர ஒவ்வொருவரும் இரண்டு மூன்று ஆசைக்கிழத்திகளை வைத்திருக்கிறார்கள்''
-ஜான் நியோஃப் (1664 AD)

4


ஒலாந்தியர் வான் கோயன்ஸும், பெட்ரியும் வியாபாரிகள். அவர்கள் சுவர்ணமுகியையும், பத்து வயதுச் சிறுவன் வேத நாராயணனையும் இழுத்துக் கொணர்ந்தனர்.

வெளியே பெரிய கோஷ்டி காத்துக் கிடந்தது. வான் கோயன்ஸின் வர்த்தகக் கோஷ்டி. அதில் பனிச்சென்று எண்ணெய்ச் சிலைபோல் கப்ரே என்ற ஆப்பிரிக்க நீக்ரோ சிப்பாய்கள் இவர் இருந்தார்கள்.

அவர்கள் இடுப்பில் வாளும், குழல் துப்பாக்கியும் இருந்தன.

அவர்களுக்குப் பின்னால் இரண்டு பல்லக்குகள் வெறுமையாக ஊர்ந்து சென்றன. வியாபாரிகள் இளைப்பாற விரும்பினால் பல்லக்கில் ஏறிப் படுத்துக் கொள்வார்கள்.

காலையில் ஐந்து நாழிகை தூரம் பிரயாணம் செய்து, களைப்புத் தட்டியவாறே, பெம்மப்பாளையம் சிற்றூர் அருகே தண்டு இறங்கி அங்கே இளைப்பாறத் தொடங்கினார்கள்.



அரும்பா என்ற முப்பத்தைந்து வயது சிப்பாய் அந்தப் புது அடிமைகளைக் கைப் பற்றி மாடுகளைப் போல் ஓட்டி ஏற்கனவே காத்திருந்த அடிமைக் கும்பலோடு சேர்த்து வைத்தான்.

மொத்தம் முப்பது அடிமைகள். அவர்களில் ஆறு பேர் இளம் பெண்கள். மீதியெல்லாம் ஆண்கள். எட்டு வயதிலிருந்து இருபது வயது வரை இருப்பார்கள்.

''ம், புறப்படலாம்'' என்று டச்சு மொழியில் பெட்ரி கூற, கும்பல் புறப்பட்டது.

பதினெட்டுப் பொதி மாடுகளின் மீது சாமான்கள், மாட்டுச் சொந்தக்காரர்கள், ஊழியர்கள், அடிமைகள் ஆக பெரிய வால் போல நீண்ட கோஷ்டி புறப்பட,

முன்னால் இரு அரபிக் குதிரைகளில் ஒலாந்தியர்கள் மெது நடையில் போனார்கள்.



பெரிய பூவரசஞ் சோலை அது. வறண்டு போன குளத்தின் ஓரத்தில் நெருக்கத்தோடு அண்டி இருந்தது.

சுவர்ணமுகி — வெய்யிலிலும் நடையிலும் துவண்டுபோய்ப் பெரிய அழற்சியுடன் கீழே அமர்ந்தாள்.

ஒரே தினத்துக்குள் நடந்த அத்தனை நிகழ்ச்சிகளும் அவளுக்குக் கனவு போலத் தோன்றின.

திடீரென விழித்துக் கொள்வோம். வேங்கடகிருஷ்ண விலாசத்தின் படுக்கை அறையில் இருப்போம் என்று பல முறை ஆசையோடு நினைத்தாள்.

இந்த ஒரு நாளில் அவள் பார்த்தது எல்லாம் அவளது அஸ்திவார எண்ணங்களை வெகுவாகக் கலைத்தன.

முதலில் அந்தப் பஞ்சம்!

நாட்டில் எவ்வளவு பெரிய பஞ்சம் தலை விரித்தாடுகிறது!

வரும் வழியில் ஒரு பச்சைப் புல்லைப் பார்க்கவில்லையே! ஒரு வயலிலும் பயிரைப் பார்க்க முடியவில்லையே! சொல்லப்போனால் ஜனங்களையே அதிகம் பார்க்க முடியவில்லையே! எல்லாரும் எங்கே போனார்கள்? வானம் ஏன் இவ்வளவு கொடூரமாக வறண்டு விட்டது?

ஒரு வேளை,

அவளது துர்ப்பாக்கியம்தான் உலகின் துர்ப்பாக்கியமாக மாறி இருக்கிறதோ!

அரச குடும்பத்தில் பிறந்தவள் அவள். வாரிசு முறைகள் பலாத்கார முறையில் பறிக்கப்படாமலிருந்தால் இன்று இந்தப் பிய்ந்து போன விஜயநகர ராஜ்யத்துக்கு இளவரசியாக இருக்க வேண்டியவள்!


இப்போது கல்லிலும், முள்ளிலும் நடந்து வெய்யிலைத் தலையில் தாங்கி, ஆடு மாடு போல் ஒரு அடிமைக் கூட்டத்தில் சேர்ந்து இந்தக் கடும் கோடையில் பிரயாணம் செய்ய வேண்டியிருக்கிறது!

திடுக்கென்று கண்ணீர் வர, ''அழாதேம்மா!'' என்றாள் மற்றொரு அடிமைப் பெண். அவளது கையைப் பிடித்து. ''என் பெயர் அபரஞ்சி! நான் கன்னடப் பெண்! தேவதாசி! என்னை என் அக்கா அடிமையாக விற்றுவிட்டாள்! வாழ்க்கையிலே பெண்ணாப் பிறந்தால் எங்கே போய் முடிவோம்னு தெரியாது. அழாதே. சகோதரி! இங்கே எல்லோருக்குமே சோகக் கதை இருக்கு!'' என்றாள்.

சுவர்ணமுகிக்கு நிறையக் கண்ணீர் வந்தது கண்களை மூடித் தேம்பினாள்.

அகிலன் மனம் அறிவேன்





போட்டி முடிவு

அகிலன் மனம் கவர்ந்த வரிகள்:

திடீரென்று ஆவேசம் வந்தவன் மாதிரி பேசினான். "இதோ பாரும்மா இனிமே நான் உன்னை அங்கே விட மாட்டேன்! நான் குடிக்கிற கஞ்சியை நீயும் குடி. குழந்தைகளைக் கூட்டி வந்து விடு!"

"அவங்க விட மாட்டாங்களே?"

"விவாகரத்து வாங்கு."

"ஆத்திரப்படாம யோசி அண்ணா! உன் குடும்பத்தைத் தாங்கவே உன்னாலே முடியல்லே. என்னையும் குழந்தைகளையும் வச்சி நீ என்ன செய்ய முடியும்?"

★ ★ ★

அகிலனின் மனம் கவர்ந்த மேற்படி வரிகளை முழுமையாக எழுதி அனுப்பியவர்கள் ஏழு பேர். இவர்கள் ரூ. 500 பரிசைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.

1. கே. ஆர். ராஜகோபாலன், குளுமணி, திருச்சி மா. வ.; 2. கே. சுப்ரமணியன், 59, அக்ரஹாரம், முசிறி, திருச்சி மா. வ.; 3. கணேஷ், 6, ராமதாஸ் தெரு, வெங்கடேச காலனி, பொள்ளாச்சி,; 4. பி. ஜெயபாலன், ராஜகணேசன் எண்டர்பிரைஸஸ், ராமன் நகர், போஸ்டு. மேட்டூர் அணை-636403; 5. டி. வி. சொர்ணகுமார், டெக்னீஷியன், தொலைபேசி நிலையம், கோவில்பட்டி-627701; 6. கே. ஏ. மீனாட்சி, 1/21, அக்ரஹாரம், குளுமணி கிராமம், திருச்சி மா. வ.-639 103; 7. ஆர். பி. சீனிவாசன், 120, பெரியகடை வீதி, பழனி.

(கதை: பலி ஆடுகள் — கிருஷ்ணகுரு)

"உன் பெயர் என்ன?" என்று தூண்டிக் கேட்டாள் அபரஞ்சி.

"கங்கணா!"

"உன்னை யார் வித்தாங்க? உன்னுடைய சொந்தக்காரங்களா?"

"இல்லே."

"புருஷனா?"

"எனக்குக் கல்யாணம் ஆகலே."

"பின்னே யார் விற்றது?"

"அடைக்கலம் தேடி என் சிநேகிதி வீட்டுக்குப் போனேன். அவள் புருஷன் வித்துட்டாரு."

அபரஞ்சியின் கண்கள் விரிந்தன. "இந்த அநியாயம் உண்டா? நாட்டிலே இப்படி ஒரு பஞ்சம் ஏற்படுமா? சொந்தப் பிள்ளைகளைப் பெற்றோருங்க விக்கறாங்களே!"

"கொடுமை! மழைபெய்யாத கொடுமை!" என்றாள் சுவர்ணமுகி.

"அது மட்டுமில்லே. ஆள்றவன் எல்லாம் வரியைப் பிடுங்கறான். சண்டைக்குப் போறேன், நகையைக் கொடுன்னு நிர்ப்பந்திக்கிறான். விவசாயம் பண்ணினா கதிரை அறுத்துட்டு ஓடறான். ஜனங்கள் அல்லாடிப் போச்சுது. நீ பாத்தியோ என்னவோ தெரியாது. நான் கேள்விப்பட்டேன்."

"என்னது?" என்றாள் சுவர்ணமுகி.

"மனுஷன் மனுஷனை அடிச்சுத் திங்கறானும் வடக்கே."

"கேவலமா இருக்கு!"

"படு கேவலம்."

இருவரும் சிறிது மௌனமானார்கள்.

"இப்போ நாம்ப எங்கே போறோம்?" என்று கவலையுடன் ஆரம்பித்தாள் சுவர்ணமுகி.

"கவலைப்படாம இரு! அன்னிய தேசம் போறோம்!"

"அன்னிய தேசமா?"

"ஆமா! நம்மைக் கொண்டு போய் வெள்ளைக்கார தேசத்திலே வித்தாலும் வித்துடுவான். இல்லாட்டி ஜாவகத்துக்குப் போய்க் கங்காணி கிட்டே தள்ளினாலும் தள்ளிடுவான்."

சுவர்ணமுகி பதறினாள்.

"தப்பிக்க முடியாதா?"

சிரித்தாள் அபரஞ்சி.

"தப்பிச்சு எங்கே போய்த் தங்கப்போறே? யார் உனக்குச் சோறு போடுவான்? அப்படிச் செய்ய முடியுமின்னு யாராவது நம்மை வித்திருப்பாங்களா?"

அவர்கள் பேச்சுத் திடீரென்று நின்றது.

கப்ரேக்களில் ஒருவன் விசித்திரமான பாஷையில் எதையோ சொல்ல, ஊழியர்கள் பெரிய பிரம்புக் கூடையிலிருந்து ரொட்டித் துண்டுகளை எடுத்து விநியோகிக்கத் தொடங்கினார்கள். ஒரு மூக்கறுந்தவன் புளிப்பும் இனிப்புமாக ஒரு கூழை ஒவ்வொருவருக்கும் சிறு இலைக் கரண்டியால் வழங்கிக்கொண்டிருந்தான். தொடர்ந்து சுட்ட மண் பாத்திரத்தில் அளவாகத் தண்ணீர் வழங்கினார்கள்.

அடிமைகளில் சிறுவர்கள் ஆரவாரமாக உண்டுவிட்டு மேலும் நாக்கை நீட்டிக் கொண்டே ரொட்டிகளைக் கேட்டார்கள். ஆனால் கிடைக்கவில்லை.

அங்கே அந்த உணவு வேளையில் எழுந்த சத்தங்களும், கூச்சல்களும் பிடிக்காமல் சுவர்ணமுகி கண்களை மூடித் தனியாக இருந்தாள்.

மதியம் தாண்டி வெய்யில் சரியும்போது மீண்டும் கப்ரேக்கள் சத்தம் போட எல்லோரும் தூக்கங்களிலிருந்து கலைந்து புழுதியான சாலையில் வடக்கு நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள்.

இரவில் முதல் ஜாமம் வரை நடந்து, ஒரு நிர்மானுஷ்ய சத்திரத்தில் தங்கி, மறு நாள் காலையில் மீண்டும் புறப்பட்டு மாலை நெருங்கினவாறே மயிலாப்பூரை நெருங்கினார்கள்.

அதற்குள் சுவர்ணமுகிக்கு எல்லா நம்பிக்கையும் போய்விட்டது. இனி யாரிடமிருந்தும் உதவி கிடைக்க வழியில்லை என்று நம்பினாள்.

மறுநாள் ஸாந்தோமேக்கு (ஸாந்தோம்) சென்று அவர்களைப் படகில் ஏற்றி கப்பலில் கொண்டுவிடுவார்கள் என்றும், கப்பல் மேற்கு நாடுகளுக்கு அவர்களை அழைத்துப் போகும் என்றும் அவர்களுக்குத் தெரிய வந்தது.

''கடவுளே! எனக்குத்தப்பிக்கவழி கிடைக்குமா?'' என்று மனம் வெதும்பி முறையிட்டாள் சுவர்ணமுகி.

இரு தினங்களுக்கு முன்பு...

திருப்பதி ஊருக்கு அருகில் தீ பொழியும் சாலையில் அந்த இளைஞன் பாதி உலகைத் துறந்தவனாகக் கிடந்தான்.

சீக்கிரத்தில் இறந்து விடுவோம் என்று அவனுக்குத் தெரியும்.

சாலையின் அசாத்திய வெட்கை அவன் உடம்பை வறுத்துக் கொண்டிருந்தது.

அதைவிடப்போரில்அவனது ஆட்கள் பட்ட அவமானம் அவன் மனத்தை வறுத்துக் கொண்டிருந்தது.

உடலில் விழுந்த காயங்கள் வேறு அங்கங்கே வெவ்வேறு சுவரங்களில் காந்திக் கொண்டிருந்தன.

தாயார் கங்கம்மாவை நினைத்தான்.

ஒரு தண்டல்நாயகனாகவோ, மண்டலாதிபதியாகவோ ஆகி அவளைக் குளிர வைக்க

வேண்டும் என்று எவ்வளவு கனவு கண்டிருக்கிறான்!

ஆனால் அதை நிறைவேற்று முன் இன்று அவன் இந்த உலகத்தை விட்டே போக வேண்டியிருக்கிறது.

குழப்பம், கோபம், விரக்தி, வேதனை எல்லாம் மாறி மாறி வரும்போது,

ஒரு துளி தேன் போல இனிமையாய் ஒரு எண்ணம் அவனை அடிக்கடி பற்றியது.

கங்கனை அவனைப் பார்த்தது. பேசியது அவனுக்குப் பணிவிடை செய்ய முன்வந்தது. அவனை மெல்ல இழுத்து நிழலில் கொண்டு விட்டது எல்லாமே அவனது வேதனை மிகுந்த கடைசி நேரத்திலும் துளிர்த்த தேன் சொட்டுக்கள்.

வாழ்க்கையில் அவன் பெண்களை ஸ்பரிசித்ததில்லை.

இப்போது இந்தப் பெண்ணின் ஸ்பரிசம் ஒரு அமிர்தம் போல் அவனை ஊடுருவியது.

வாசகர்களுக்குப் புத்தாண்டுப் பரிசு!

இரண்டு ஆண்டுகளுக்கு மங்கையர் மலர் பிரதிகளை நீங்கள் இலவசமாகப் பெற ஓர் அரிய வாய்ப்பு.

ரூ. 36 பெறுமானமுள்ள மங்கையர் மலர் இதழ்கள் மாதத்துக்கு ஒன்றாக இலவசமாக உங்கள் வீடு தேடி வரும்.

இந்தப் பரிசைப் பெற நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இது தான்: கல்கிக்கு இரண்டு ஆண்டு சந்தா ரூ. 120 செக், மணியார்டர் அல்லது டிராஃப்ட் மூலம் அனுப்புங்கள். வெளியூர் செக்கானால் பாங்க் கமிஷன் ரூ. 1 சேர்த்து அனுப்பவும்.

இதனால் நீங்கள் இரட்டிப்புப் பயனும் மகிழ்ச்சியும் அடைகிறீர்கள்.

1. இரண்டு வருஷத்துக்கு கல்கி இதழ்களை ஆனந்தமாகப் படிக்கலாம்.

2. இரண்டு ஆண்டுகளுக்கு மங்கையர் மலர் இதழ்களை இலவசமாகப் பெற்றுப் படித்து இன்புறலாம்.

ஏற்கனவே கல்கி சந்தாதாரராக இருப்பவர்களும் தங்கள் சந்தாவை மேலும் இரு ஆண்டுகளுக்கு நீடிக்

அவளது கருணை விழிகள் ஒரு மழைக்காலக் குளிரை அவன் மீது வீசின.

வேதனைகளுக்கு நடுவே இந்தத் துளித் துளி இனிமைகள் அவ்வப்போது அவன் உள்ளத்தில் கசிய,

மெள்ள ஆழ் நித்திரையை நோக்கி அவன் இறங்கிக் கொண்டிருந்தான்.

'ஒரு வேளை!' என்று கடைசியாக நினைத்தான் அவன். 'யாராவது என்னை இந்த நிலையில் எடுத்துப் போய் ஆதுர சாலையில் சேர்த்தால் பிழைத்தாலும் பிழைப்போம். யார் சேர்ப்பார்கள்? ஊரில் மனிதர்கள் ஏது? என்று நினைத்தான் அவன்.

அந்தகாரத்தில் எங்கேயோ முடங்கிக் கொண்டிருக்கும்போது யாரோ அவனைப் பலவந்தமாக உலுக்கும் முயற்சி தெரிந்தது.

அவனது நினைவு அவன் உணர்வோடு சரியாக ஒட்டிக் கொள்ளாததால் அந்த முயற்சி முக்காலும் ஒரு பிரமை போல் தோன்றியது.

ஆனால் யாரோ அவன் உடலை அங்குமிங்கும் புரட்டி எழுப்புவதைப் பார்த்ததும்

அவன் உணர்ச்சி மெள்ளச் சிலும்பி மேலே வந்தது.

''அர்ச்சுனா! அர்ச்சுனா!''

குரல்கூட செவியில் விழும் உணர்வு ஏற்பட்டது.

கண்களை விழிக்க முயன்றான். நங்கூர கனம் இருந்தது.

''அர்ச்சுனா! அர்ச்சுனா!''

மிகவும் பிரயாசை எடுத்துக் கண்களை விழிக்க, அங்கே நின்று கொண்டிருந்தது அவனது நண்பன் தோதா!

போர் ஆரம்பமான சிறிது நேரத்தில் இருவரும் பிரிந்தார்கள். இப்போது சந்திக்கிறார்கள்.

''அர்ச்சுனா! சொல்லு! சுவர்ணமுகியைப் பார்த்தாயா?''

அர்ச்சுனன் தன் பலத்தைத் திரட்டினான். வெகு பிரயாசையுடன் வாயைத் திறந்து ''சுவர்ணமுகியின் பல்லக்கையும், அவளது சேடியையும் பார்த்தேன்'' என்றான்.

''எப்படிப் போனார்கள்?'' என்றான்.

''இப்படி!'' என்று திசையைக்காட்டினான்.

''பல்லக்கில்தானே?''

''ஆமாம்.''


அடுத்த கணம் அங்கே நில்லாமல்

பறக்கும் மனிதன்

(SUPER MAN)







படத்தின் தயாரிப்புச்செலவு 35 மில்லியன் டாலர்! விண்வெளியில், கிரப்பான் கிரகம் வெடிக்கும் தறுவாயில் உள்ளது. அங்கு வசிக்கும் ஜோர்-எல் தம்முடைய கைக்குழந்தையை விண்கலத்தில் ஒரு படுக்கையில் இருத்தி, அதில் மாந்திரீக சக்தி வாய்ந்த ஒரு படிகத்தை வைத்து, தொலைவில் உள்ள பூமிக்கு அனுப்பி வைக்கிறார். குழந்தையின் ஆகர்ஷண சக்தி கோதுமை வயலில் டிராக்டரில் வந்து கொண்டிருந்த கெண்ட் தம்பதிகளைக் கவர்கிறது. குழந்தை சூப்பர்-மேன் வாலிபனாக வளர்கிறான். பல சாகசங்களை நிகழ்த்துகிறான். இறந்த தன் தந்தையின் ஆவியுடன் பேசுகிறான். அநீதி, அக்கிரமம், லஞ்சம் ஆகியவைகளை அழிக்கப் புறப்படுகிறான். சூப்பர்மேனை வெறுக்கும் லூதர் என்கிற வில்லன், பூமிக்கு 200 அடிக்குக் கீழே உள்ள ஒரு பாதாள ரயில் ஸ்டேஷனில் இருந்து கொண்டு தன்னிடமுள்ள அசுர இயந்திரத்தினால் சூப்பர்மேனை அச்சுறுத்துகிறான். அவனை சூப்பர்மேன் வெற்றிகொள்கிறான். ''தி ஓமன்'' படப் புகழ் இயக்குனர் ரிச்சர்ட் டான்னர் ஒரு சுவையான படமாக சிருஷ்டித்துவிட்டார். ''ஸ்டார் வார்ஸ்'' — ''ஜாஸ்'' படங்களில் புகழ் பெற்ற இசையமைப்பாளர் ஜான் வில்லியம்ஸ் அற்புதமாக இப்படத்துக்கும் இசை அமைத்துள்ளார். குழந்தைகளுக்கு ஹாலிடே ஸ்பெஷல்!

-டி. எம். ஆர்.

இந்த நாளில் தமிழகத்தின் பல ஊர்களில் கம்பருக்குப் பெரிய பெரிய விழாக்கள் நடக்கின்றன. பல அறிஞர்கள் கம்பரை ஆராய்கிறார்கள். மிகவும் மகிழ்ச்சி அடைய வேண்டிய இலக்கியப் பணிகளே இவை! ஆனால் இந்த ஆராய்ச்சி விசாரணைகளுக்கும் டி.கே.சி. கம்பரை அனுபவித்த அனுபவத்துக்கும் அடிப்படையிலேயே வித்தியாசம் உண்டு!

இன்றைய ஆராய்ச்சிகளிலே பெரும்பாலும் ராமாயணக் கதையைப் பற்றிய ஆய்வுகளே அதிகம். சண்டைகள் மோதல்கள் எதிர் மோதல்கள் என்பதாக வெளு வெளு என்று வெளுப்பதெல்லாம் கதையைத்தான்! இந்த விழாக்கள் எல்லாம் கதை விழாக்களா அல்லது கவிதை விழாக்களா என்பதை எண்ணிப் பார்க்கும்போதுதான் அங்கே டி.கே.சி. வருகிறார்!

கம்பர்ராம கதையைக் கவிதையிலே பாடாமல், உரைநடையிலே எழுதியிருந்தாலே போதும். இந்த இத்தனை ஆராய்ச்சிகளுக்கும் அங்கே இடமுண்டு! ஆனால், ஒரு கவிஞனுக்கு, ஒரு மகா கவிஞனுக்கு, தமிழகத்தின் கவிச் சக்கரவர்த்திக்கு உரிய கவிதா முத்திரையை இத்தகைய ஆராய்ச்சிகளுக்குள்ளே நம்மில் பலரும் மறந்து விடுகிறோமே!

டி.கே.சி. சொல்லுவார், கதையும், பாத்திரங்களும் ஒரு கவிஞனுடைய கருவிகளே! எதற்காக? கவிதையை உருவாக்குவதற்காக!

இந்த இடத்திலேதான் டி.கே.சி.க்கும் அந்த ரசிகமணிக்கும், மற்ற ஆராய்ச்சியாளருக்கும் வேறுபாடு; காவிய நோக்கின் அடிப்படையிலேயே வேறுபாடு! ராம அவதாரம் என்றால் அது கவிதையின் அவதாரத்துக்குரிய கருவி என்பார் டி.கே.சி. சீதா கல்யாணம் என்றால் அது சொல்லுக்கும் உணர்ச்சிக்கும் நடைபெறுகிற கவித் திருமணம்! கூனி, இராவணன், விபீஷணன், சத்ருக்னன், பரதன், ஏன் இராமனே கூடக் கவிதையின் -கதையின் அல்ல- கவிதையின் அங்கங்கள்! கம்ப ராமாயணம் என்பது ஒரு நாவல், ஒரு நெடுங்கதையல்ல! அது கவிதை! காவிய தரிசனத்தோடு அதைக் காண வேண்டும் — இதுவே டி.கே.சியின் தனிப் பார்வை.

கதைக்குள்ளேயே போய் மண்டையை உடைத்துக் கொள்கிற மனிதர்களை நோக்கி, வழிப் பாதையிலேயே நிற்கிறீர்களே, ஊருக்கு வாருங்கள் என்று கவிஉலகுக்குள் அழைக்கிற ஒப்பற்ற ரசிகமணிக் குரலே டி.கே.சி.!

இப்படிப்பட்ட ஒரு கவிதா நோக்கு, ஒரு கவிப் பார்வை, விஷயங்களையும் கதைகளையும் தாண்டித் தமிழ் மொழியின் உல்லாசங்களுக்குள்ளே செல்கிற கவி தரிசனம் டி.கே.சிக்கு எப்படி ஏற்பட்டது?

விளாத்திகுளத்திலிருந்து ஊருக்குத் திரும்பிய புது மாப்பிள்ளை டி.கே.சி. நெல்லை வண்ணார்பேட்டையில் தமது வக்கீல் தொழிலைத் தொடங்கினார். அந்த முகூர்த்தம், அவருக்குக் கடுமையான மலேரியா ஜுரம் கண்டது! பல நாட்கள் படுத்த படுக்கையாகவே இருந்தார். காய்ச்சல் அதிகமாகும் போதெல்லாம் எழுந்து வந்து பச்சைத் தண் கம்பர் அவருக்குத் துணையாகப் படுக்கையிலே வந்து இருந்து கொண்டார்!

மலேரியாவிலே படுத்துக் கொண்டே கம்பரைப் படிக்க ஆரம்பித்தார் டி.கே.சி. எப்படி? அவரே ஒரு கடிதத்தில் இதைப் பற்றிச் சொல்கிறார்:

''முதலில் ஏதோ ஒரு படலத்தை (ஆரம்பத்தை அல்ல) எடுத்துப் படிக்கத் தொடங்கினேன். சில பாகங்கள் மிகவும் மட்டமாக இருந்தன. சில பாகங்கள் பிரமாதமாக இருந்தன. ஏன் இப்படிப் பெருத்த வித்தியாசம் இருக்கிறது என்று ஓர் எண்ணம் உண்டாயிற்று! துணிச்சலாய் ஒரு யுக்தி செய்தேன். தள்ள வேண்டியதை யெல்லாம் தள்ளி, நல்ல பாகங்களை மாத்திரம் வைத்துக் கொண்டு ஒரு படலம் பூராவையும் முறையாய்ப் படித்தேன். கதையின் கட்டுக்கோப்பு பாட்டுகளின் ஒழுங்கான கதி பாவம் இவைகளெல்லாம் மேலே மேலே ஆகாயத்தை நோக்கி ஏறுவது மாதிரி இருந்தது. கம்பரது கவிதா சக்தி மனசில் பட்டுவிட்டது. ஆகவே இதே மாதிரிப் பல படலங்களையும் தள்ளுவதைத் தள்ளிக் கொள்ளுவதைக் கொண்டு படித்தபோது, பொன்மயமானதோர்கோபுரத்தில் அநேக பாகங்கள் இடிந்தும் தகர்ந்தும் போயிற்று என்றும் அப்படி இடிந்து தகர்ந்த பாகங்களை ஏதோ ஒரு வகைச் சாந்தினால் மறுபடியும் கட்டுவதற்குச் சிலர் முயன்றிருக்கிறார்கள் என்றும் இன்னும் சிலர் புதிய புதிய சுவர்களையே எழுப்பிக் கோபுரத்தின் உண்மையான அழகையே கெடுக்கப் பார்த்திருக்கிறார்கள் என்றும் தெரிய வந்தது. காரணம் பல பாடல்கள் சிதைந்தும் விட்டுப் போனதும் தான்! அத்துடன் செருகி வைக்கப்பட்ட கவிகளுக்கும் குறைவில்லைதான்! இப்படியாகவெல்லாம் கம்பரை இனம் கண்ட பிறகு அவரே தனித்த முறையில் தனித்த குரலோடு நம்மிடம் பேசுகிறார் என்ற உணர்ச்சி எனக்கு வந்தது!''

இவ்வாறு தொடக்கத்திலேயே கதை நிகழ்ச்சிகளுக்குள்ளேயே சிக்கிவிடாமல், கவிதையின் மொழி வடிவத்துக்குள்ளே புகுந்த காரணத்தால், கம்பருடைய ''தனித்த'' குரலும் தனித்த முறையில் கம்பர் பேசுகிற தனியான உயர்தனிக் கவிப் பண்பும், டி.கே.சி.யை ஆட்கொண்டன! கம்பருடைய காவியத்தில் கம்பரின் குரலுக்கு நடுவிலே வேறு பல போலிக் குரல்கள் கேட்பதை அவரால் இனம் தெரிந்து கொள்ள முடிந்தது!

''அணுகு முறை'' என்று ஒன்று இருக்கிறதல்லவா? டி.கே.சி.யினுடைய அணுகுமுறையின் அடிப்படையே கவியின்பந்தான்! கதை, பாத்திரங்கள், நிகழ்ச்சிப் பின்னல்கள் எல்லாம் கவிதைக்குரிய ஜன்ம பூமி! அவையல்ல கவிதை! கவிஞன் பிறந்த ஊர் வேறு, கவிஞன் வேறு அல்லவா?

இந்த அடிப்படையிலே நின்றவர் டி.கே.சி. இந்த ஒரு காரணத்தால் பிறர் செய்யத் துணியாத சில செயல்களையும் அவர் செய்தார்! அவருடைய நூற்றாண்டு


கம்பனோடு
கலந்தவர்



நடிகை: 17வது பிறந்த நாளுக்குக் கட்டாயம் வந்துடுங்க.

நிருபர்: அடேப்பா! உங்களுக்கு அதற்குள் வயது 17 ஆகிவிட்டதா?

நடிகை: அட எனக்கில்லையா. எங்க அம்மாவுக்கு!

—இ. சி. லட்சுமி

மார்ச் 17ந் தேதி அயர்லாந்து தேசிய தினம். மே 17ந் தேதி நார்வே தேசத்தின் தேசிய தினம்; ஜூலை 17ந் தேதி ஆப்கானிஸ்தான் குடியரசு தினம்; ஆகஸ்ட் 17ந் தேதி இந்தோனேஷியா சுதந்திர தினம்; டிசம்பர் 17ந் தேதி பூட்டான் தேசிய தினம்.

தங்க. ராதாகிருஷ்ணன்



சூடாத புது மலராய்
சுற்றிவரும் வயது பதினேழு
ஆடிக் கொண்டிருக்கும் நாகபதை
அடிமிதிக்கும் வயது பதினேழு
வாடாத ஆசைகளை வளர்த்து
வரும் வயது பதினேழு
கூடாத சோம்பலையெல்லாம்
கூட்டி உதறும் வயதுபதினேழு.

வெற்றியை என்றும் நாடும்
வீழாத வயது பதினேழு
சுற்றித் திரியும் எண்ணமதை
சுத்தமாய் விடும் வயதுபதினேழு
வற்றிய பாசம் தன்னை
வளர்த்துவிடும் வயது பதினேழு
பற்றிய ஆசை பலவற்றை
பாங்காய் நிறுத்தும் வயதுபதினேழு.

விண்ணுடாய் உலகை ஆக்க
விரும்புகின்ற வயது பதினேழு
உணவை விரும்பி உண்ணாமலே
உறுதி வாய்ந்த வயதுபதினேழு
கண்ணும் பூசிறப்போல்
சுத்தமேனியாய்த்திகழும் பதினேழு
எண்ணமாய் விளங்கும் வயது பதினேழு
வாழிய வாழிய வாழியவே.

—பி. வத்சலா தேவி

கார் வியாபாரி தன் பதினேழு அம்பாஸிடர் கார்களைத் தன் மூன்று மகன்களுக்கும் பங்கிட்டுக் கொள்ள உயில் எழுதி வைத்து விட்டு இறந்து விட்டான். உயிலின்படி மூத்த மகனுக்கு கார்களில் பாதி எண்ணிக்கையும், இரண்டாவது மகனுக்கு மூன்றில் ஒரு பங்கு எண்ணிக்கையுள்ள கார்களும், மூன்றாவது மகனுக்கு ஒன்பதில் ஒரு பங்கு எண்ணிக்கையுள்ள கார்களும் கிடைக்கும்.

மூவரும் உயிலின்படி கார்களை எப்படிப் பங்கிட்டுக் கொள்வது என்று புரியாமல் அவ்வூர்த் தலைவனிடம் சென்று கேட்டார்கள்.

அவர் பதினேழு கார்களையும் தம் வீட்டின் முன் கொண்டு வந்து நிறுத்தச் சொன்னார். பிறகு தம் காரையும் அதனுடன் நிறுத்தி 18 ஆக்கினார். பிறகு உயிலின்படி 18 கார்களில் பாதி எண்ணிக்கையான ஒன்பது கார்களை மூத்த மகனுக்கும், மூன்றில் ஒரு பங்காகிய ஆறு கார்களை இரண்டாவது மகனுக்கும், ஒன்பதில் ஒரு பங்காகிய இரண்டு கார்களை மூன்றாவது மகனுக்கும் கொடுத்தார். மூவருக்கும் பதினேழு கார்களைக் கொடுத்த பிறகு மீதிமுள்ள தன்னுடைய காரைத் தானே எடுத்துக் கொண்டார்!



கேள்வி: 17க்கும் ரேஷன் கடைக்கும் இடையில் உள்ள தொடர்பு என்ன?

பதில்: ஆங்கில எழுத்து வரிசையில் 17ம் எழுத்து.

—ெ. சாரங்கன்

14

ஹார்ஷன் அப்போதுதான் கவனித்தான். முன் அறை மேஜை மேல் எப்போதும் வைக்கு மிடத்தில் அவன் பெயருக்கு வந்த கடிதங்களை மாதங்கி ஒழுங்காக அடுக்கி, பிளாஸ்டிக் கூடைக்குள் வைத்திருந்தாள். சாதாரணமாக அவனுக்கு வரும் கடிதங்கள் அனைத்தும் கம்பெனி முகவரிக்கே வந்துவிடும்.

நெருங்கிய நண்பர்கள் யாராவதுதான் அவனது வீட்டு முகவரிக்கு எழுதுவது வழக்கம்.

அநேகமாக அவனுக்கு வீட்டைத் தேடி வருபவை எல்லாம் அவனுக்குப் பழக்கமான 'டிரை கிளீனிங்' கடை 'பில்'தான்.

சில நண்பர்களின் கடிதங்கள், திருமண அழைப்பிதழ்கள், நிதி திரட்டும் சங்கங்கள் விடுக்கும் வேண்டுகோள் கடிதங்கள் ஆகியவற்றைப் பிரித்துப் படித்துவிட்டு அப்பால் வைத்த பின், அந்தப் பழுப்பு வண்ண உறையைக் கையில் எடுத்தான். அவனுக்கு வியப்பு மேலிட்டது.

பழக்கமில்லாத கையெழுத்து — அவசரமாகப் பென்சிலால் கிறுக்கி விட்டது போன்ற முகவரி.

யாராக இருக்கலாம்?

உறையைப் பரபரப்புடன் பிரித்துக் கடிதத்தை எடுத்தான். அவனது ஊகம் ஓரளவுக்குச் சரியாகவே இருந்தது.

கையெழுத்தில்லாத ஒரு மொட்டைக் கடிதம்.

''அன்புள்ள நண்பரே!

உங்கள் நன்மையைக் கருதி உங்களுக்கு ஓர் உண்மையைத் தெரிவிக்க விரும்புகிறேன். உங்களை மணந்து கொண்டிருக்கும் மாதங்கி என்ற பெண், எனது நண்பனால் காதலித்துக் கைவிடப்பட்டவள். கல்லூரி நாட்களிலேயே இருவருக்குள்ளும் நெருங்கிய தொடர்பிருந்தது. என் நண்பன் அவள் மீது மட்டற்ற அன்பு வைத்திருந்தது உண்மை. ஆனால் அவள் தனக்குத் துரோகம் செய்வதை உணர்ந்து, மனம் வெகுண்டுபோய், ஒரேயடியாக உதறிவிட்டான்.

பலருடன் பழகிவிட்ட போதிலும் ஒன்றுமறியாத சாது போல் நடிப்பதில் அவள் கைதேர்ந்தவள். நீங்கள் நல்ல பெண் என்று நம்பி ஏமாந்து போகிறீர்களே என்று எண்ணும்போது வேதனையாக இருக்கிறது. உங்களை எச்சரிக்கவே இந்தச் சில வரிகள்.

உங்களது நலம் கோரும் நல்லதொரு
நண்பன்.''

உடல் முழுவதும் 'ஜில்'லென்று ஆத்திரம் அனலாகப் பரவியதை உணர்ந்தான் ஹார்ஷன்.

மொட்டைக் கடிதத்தை நம்புவதா? ஏன் நம்பக் கூடாது? முப்பத்தைந்து பைசா செலவழித்துக் கடும் சிரத்தையாக ஒருத்தன் காரணம் இல்லாமல் எழுதுவானா?

தயானந்தருடைய குடும்பத்தில் எவருமே ஒழுங்கானவர்கள் இல்லையா?

மூத்தவள் காதலனுடன் கல்யாண சமயத்தில் ஓடிப்போனாள். அதை ஈடுகட்டத்தான், இந்த மனிதன் தன் தம்பி மகளை என் தலையில் கட்டி விட்டிருக்கிறாரோ? அயோக்கியப் பதர்....



இந்த அம்மாவும் ஒரு படு முட்டாள். சிரித்துக் குழந்தை போல் பேசி, ஓடியாடி உழைக்கிறாளே மருமகள் என்று, அவள் போடும் வேஷத்தை நம்பி ஏமாந்து கொண்டிருக்கிறாளே!

கோவிலருகில் ஒரு நிமிஷம் என்னையே மயக்கப் பார்த்தாளே... சாகசக்காரி!

நல்ல சமயம் பார்த்துத்தான் இந்தக் கடிதம் வந்து சேர்ந்திருக்கிறது. இல்லாவிட்டால் நானும் ஏமாந்து போயிருப்பேனே!

பற்களைக் கடித்துக் கொண்டான். கடிதத்தை மடித்துச்சட்டைப் பையில் வைத்துக் கொண்டான்.



விழுந்த மாலை... லக்ஷ்மி...

''சாப்பாடு தயார். மேஜை மேல் எல்லாம் எடுத்து வைத்திருக்கிறேன். சாப்பிட வாப்பா'' – அம்மா அழைத்தபோதுஉள்ளே எட்டிப் பார்த்தான்.

சாப்பாட்டறை மேஜை மீது புத்தம் புதிய தொரு வெண் விரிப்பின் மேல் ஒரு புறம் பளபளத்த ஸ்டீல் பாத்திரங்களில் விதம், விதமான உணவு வகைகள் வைக்கப்பட்டிருந்தன. ஓரத்தில் மூன்று பேருக்குச் சாப்பிடத் தட்டுகள் தயாராக இருந்தன.

வண்ணக் கண்ணாடி கூஜாவில் நீர், மூன்று வண்ணக் கண்ணாடித் தம்ளர்கள் – நடுவே பீங்கான் ஜாடிக்குள் ஒரு பெரிய கொத்து ரோஜா மலர்கள்.

பூஜை அறைக் கதவைத் திறந்து வைத்திருந்தாள் கஸ்தூரி. அதனின்றும் கமழ்ந்த ஊதுவத்தியின் நறுமணத்துடன் கலந்து மல்லிகைப்பூ வாசம் வீட்டையே தூக்கிக் கொண்டிருந்தது.

''இப்படி விமரிசையாகப் பிறந்த நாள் ஒரு கேடா இந்தக் கெட்டழிந்து போன மாதங்கிக்கு?'' ஆத்திரத்துடன் அவன் கொதித்தான்.

''அங்கேயே ஏன் நிக்கறே? உள்ளே வந்து கை கழுவிட்டு உட்காரு. சாப்பாடு சூடா இருக்கு. ஆறிப் போறதுக்கு முந்திச் சாப்பிடலாம். உனக்குப் பிடிச்ச பால் பாயசம் வச்சிருக்கேன்'' – அம்மா புன்முறுவலுடன் மகனைப் பார்த்தாள்.

''பாயசத்தை உன் மருமகள் தலையில் கொட்டி அபிஷேகம் செய். எனக்கொண்ணும் தேவையில்லே. நான் வெளியில் சாப்பிட்டுக்கொள்ளப் போறேன்'' எரிச்சலுடன் கத்திவிட்டு, வேகமாக வெளியே சென்று காரில் ஏறிக் கொண்டான்.

சில நொடிகளில் காரும் சீறிக்கொண்டு சென்றுவிட்டது. பிரமிப்புடன் நின்று விட்டாள் கஸ்தூரி.

மனைவியோடு ஜோடியாகப் பேசிய வண்ணம் வந்தவனுக்கு இப்போது திடீரென என்ன நேர்ந்து விட்டது? அவளுக்குள் ஒரே கலவரம்.

மாமியாருக்குக் கூட உதவ அருகில் வந்து நின்ற மாதங்கியும்,அவனது வார்த்தைகளைக் கேட்டுவிட்டாள்.

சற்று முன் தென்றல் போல் அன்பை அவள் பக்கம் அள்ளி வீசிய ஹர்ஷன் இப்படித் 'திடும்' என எரிமலையாக வெடிக்க என்ன காரணம் இருக்கக் கூடும்?

தாங்க முடியாது அவள் விசித்து விசித்து அழ ஆரம்பித்தாள். பிறந்த நாளுக்கு அழுகையும் கண்ணீரும்தான் அவளுக்குப் பரிசாகத் தர விரும்பினானா?

அவளை இப்படிச் சித்திரவதை செய்ய அவள் செய்த தவறுதான் என்ன? கஸ்தூரி

அக்மார்க் லேபிள்

பொட்டலங்களிலுள்ள பொருட்களின் பரிசுத்தம் மற்றும் தரத்திற்கு, இந்திய அரசளிக்கும் உத்திரவாதம்.

நம்பிக்கையுடன் வாங்குங்கள் அக்மார்க்கை நம்புங்கள்

நெய், வெண்ணெய், உணவெண்ணெய்கள், தேன், பருப்புக்கள் மசாலாப் பொடிகள் போன்றவற்றுக்கு, அனைத்து வசதிகளும் கொண்ட ஆராய்ச்சி சாலைகளில், விரிவாக பரிசோதிக்கப்பட்ட பின்னரே அக்மார்க் லேபிளளிக்கப்படுகிறது.

[redacted]

ஒரே எட்டில் மருமகளை அடைந்து, தன் மார்போடு அவளை அணைத்துக் கொண்டு சமாதானப்படுத்தினாள்.

''ஹர்ஷனுக்கு இப்படித் திடீர்னு கோபம் வர என்னவோ நடந்திருக்கணும். அது என்னன்னு முதல்லே நான் கண்டு பிடிக்க முயற்சி செய்யறேன். மாதங்கி! இதபாரு எனக்காக அதுவரைக்கும் கொஞ்சம் பொறுமையா இரும்மா'' — அவள் சொல்லி முடிக்கவில்லை.

மாதங்கி அவளது அன்புப் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு அருகிலிருந்த அவளது அறைக்குள் சென்று புகுந்து கொண்டாள்.

கஸ்தூரி குழப்பமும், துயரமுமாகச் சிறிது நேரம் சாப்பாட்டறையிலேயே ஒரு நாற்காலி மீது உட்கார்ந்திருந்தாள். வேகமாக இருட்டிக் கொண்டு வருவதை உணர்ந்து எழுந்து சென்று வாயிற் கதவை அடைத்து விட்டு வந்தாள்.

சாப்பாட்டறை விளக்கைப் போட்டாள். அவள் தன் உடல் அயர்ச்சியைப் பாராது வெகு கவனமாகத் தயாரித்திருந்த உணவு வகைகள் அப்படியே கைபடாது மேஜை மேல் இருந்தன.

படுக்கையறையிலிருந்து மாதங்கி விசும்பி அழும் சத்தம் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தது.

முன்னும் பின்னும் சிறிது நேரம் யோசனையுடன் கஸ்தூரி உலவினாள். அவளது பிள்ளையின் குணத்தைத் தெரிந்து கொண்டிருந்து, தாய்ப் பாசம் கண்ணை மறைக்க, அவள் செய்துவிட்ட தவறு... இப்போது ஒரு பெண்ணின் கண்ணீருக்குக் காரணமாகி விட்டதே? இது நிவர்த்திக்க முடியாத ஒரு சிக்கலாக ஆகிவிட்டதா?

பெற்று வளர்த்து ஆளாக்கி விட்டபோதிலும் அவளுக்குத் தன் மகனது உண்மை ஸ்வரூபம் இன்னும் பிடிபடவே யில்லை. உண்மையில் ஹர்ஷன் அவனது வாழ்க்கையில் மனைவி ஸ்தானத்தில் இருப்பவளிடம் எதை எதிர்பார்க்கிறான்? அவள் மனம் குழம்பித் தவித்தாள்.

சாப்பிடப் பிடிக்காதவளாய், கொஞ்சம் பாயசத்தைத் தம்ளரில் ஊற்றிஎடுத்துக் கொண்டாள். நேராக மருமகளைத் தேடிச் சென்றாள்.

மாதங்கி அருகில் உட்கார்ந்தாள். ''எழுந்திரும்மா. பிறந்த நாளும் அதுவுமா.. இப்படி அழக் கூடாது. இதையாவது

அருள்வாக்கு

அன்னை காட்டும் பரிவு

புத்தாண்டு பிறக்கப் போவதற்கு அறிகுறியாக இயற்கையன்னை தனது மர வர்க்கங்களின் அரச குழந்தைகளான அரசையும் வேம்பையும் முதலில் அடியோடு இலையுதிரச் செய்கிறாள். பிறகு பச்சைத் துளிர்களைத் தழைக்க வைக்கிறாள்.

அரசுக்கும் வேம்புக்கும் கல்யாணம்செய்து அதனடியே விநாயகரையும் நாகராஜனையும் பிரதிஷ்டை செய்வது தொன்று தொட்ட வழக்கு. பனிக் காலத்துக்குப் பின் இலை உதிரும்போது இந்த மரங்களைப் பார்த்தால் இலையே இருக்காது. பிள்ளையாரும் நாகராஜனும் மரத்தின் நிழற்குடை இல்லாமல் சூரிய வெளிச்சம் தங்கள் மேல் படுகிற மாதிரி இருப்பார்கள். இது இம்மாதிரி ஆகாசம் பார்க்க, சுக உஷ்ணமான சூரிய வெளிச்சத்தை ஆனந்தமாக அனுபவிக்கிற பருவ காலமாகவே இருக்கிறது. மழையிலே குடை வேண்டும். கொளுத்துகிற வெய்யிலில் குடை வேண்டும். கடும் பனிக் காலத்திலும் இரா



வேளையில் சூரியன் இல்லாதபோது ஆகாசம் பார்க்க உட்கார்ந்திருக்க முடியாது. ஆனால் அத்தனை பனியில்லாத இந்த இலையுதிர் காலத்தில் — சிவராத்திரியோடு குளிர் 'சிவசிவா' என்று போய்விடும் என்பார்கள். அப்படிப் பட்ட காலத்தில் — ஸுக உஷ்ணமாக சூரியன் இருக்கிற காலத்தில், பகல், இராப் பொழுது இரண்டிலும் ஆகாசம் பார்க்க உட்கார்ந்திருக்கலாம். இதை உணர்த்துகிறது போலவே இயற்கை அன்னை இந்தப் பருவத்தில் விக்னேச்வரருக்கும் நாகராஜனுக்கும் சூரியபூஜை செய்கிற மாதிரி மேலே இருக்கிற அரசு, வேம்பு மரங்களின் இலைகளை உதிர்த்து விடுகிறாள். நாகராஜனை சுப்பிரமணிய ஸ்வாமி என்றே சொல்லலாம். தெலுங்கர்கள் சுப்ரமணியர், பாம்பு இரண்டையும் 'சுப்பராயுடு' என்றே சொல்கிறார்கள். ஷஷ்டியில் நாகராஜ பூஜை செய்கிற பழக்க நம் தமிழ் தேசத்திலும் பிராசீனமாக இருந்து வந்திருக்கிறது.'' ஆதி தம்பதிகளின் முதல் குழந்தைகளான பிள்ளையார், குமாரஸ்வாமி இரண்டு பேருக்கும் இயற்கை அன்னை காட்டுகிற பரிவு, பார்வதி பரமேச்வரர்களின் குழந்தைகளான நம் அத்தனை பேரிடம் காட்டுகிற அன்புக்கு அடையாளமாக இருக்கிறது.

அது நிறைந்த பரிவாக இருக்கிறது. இப்போது சுகோஷ்ணமாக, மித வெப்பமாக இருப்பதால் இவர்களை இப்படிச் சூரிய ஒளியில் உட்கார்த்...

13 துரதிர்ஷ்டமான எண் என்று வழங்கப்படுகிறது; ஆனல் சிலருக்கு 13 அதிர்ஷ்டமானதாகவும் அமைந்துள்ளது; அந்த அதிர்ஷ்டசாலிகளில் சிலர்:-

ராஜ்கபூரின் 13 வது தயாரிப்பான 'பாபி' மாபெரும் வெற்றியைக் கொடுத்தது; கிரிக்கெட் உலகில் பிரபல காப்டனை வொரல், மேற்கு இந்திய தீவுகளின் கிரிகெட் குழுவின் 13 வது காப்டனுக விளையாடியவர்; கவிக்குயில் சரோஜினி நாயுடு தனது 13 வது வயதில் 1300 வரிகள் கொண்ட கவிதை ஒன்றை எழுதிப் புகழ் பெற்றுர்; பிரபல பாட்ஸ்மெனை கன்ஹாய் டெஸ்டுகளில் அதிக ரன்கள் எடுத்தது தன்னுடைய 13வது டெஸ்டில் தான்; அதுதான் அவருடைய முதல் மூன்று இலக்க டெஸ்ட் ஸ்கோர் ஆகும். பிரபல ஹாக்கி விளையாட்டு வீரரான பல்பீர்சிங் 13 எண் கொண்ட பனியனை அணிந்துகொண்டு அதிக கோல்களை ஒலிம்பிக் விளையாட்டுகளில் போட்டார்.

தொகுப்பு: -ஸ்ரீராஜ்



சாப்பிடும்மா'' வற்புறுத்தி உபசரித்தாள்.

மாமியாருக்கு மரியாதை கொடுக்கும் உத்தேசத்துடன் மாதங்கி, பாயசத்துடன் கண்ணீரையும் கலந்து விழுங்கினள்.

முகத்தைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தவள், எதையோ பேசத் துடிப்பதைப்போல உதடுகள் தவிப்பதைக் கண்ட கஸ்தூரி மனம் உருகிப் போனள்.

''மாதங்கி நீ மனசிலே நினைக்கிறதை வெளிப்படையாகவே சொல்லிடும்மா. பயப்படாதே'' அவளது கன்னத்தை மெல்ல வருடினள்.

''அத்தே! என்னைத் திருப்பிப் பெரியம்மா வீட்டுக்கே அனுப்பிடுங்க... அப்புறம்....'' மேலே பேச முடியாது அவள் விம்மினள்.

கஸ்தூரி வேதனையுடன் உதட்டைக் கடித்துக்கொண்டாள்.

''பிறகு உங்க பிள்ளைக்குப் பிடிச்ச பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் செய்துக்கட்டும் எனக்கு விவாக ரத்து வாங்கித் தந்திடுங்கன்னு சொல்ல நினைச்சே இல்லையா? பிறந்த நாள் அன்னிக்கு இப்படி விநோதமான ஒரு பரிசை மாமியார்கிட்டயே கேட்கிறுயேன்னு எனக்கு ரொம்பச் சங்கடமா இருக்கு... உன் நிலையை நினைச்சு நானும் ரொம்ப வருத்தப் படறேன்.''

மாதங்கி தலையைக் குனிந்து கொண்டாள்.

''எங்கேயாவது போய் உனக்குத் தனியே எங்களை விட்டு இருக்கணும்னு ஆசையா இருந்தா ஏற்பாடு செய்யறேன் மாதங்கி. ஆனல், மறுபடியும் உன் பெரியம்மா வீட்டுக்குத் திருப்பி அனுப்ப எனக்கு மனசு இல்லேம்மா. அங்கே போனல், நீ இன்னும் பல கஷ்டங்கள் அனுபவிக்க நேரும்னு தெரியும். எங்கிட்ட இருந்து உனக்கு அலுத்துப் போயிட்டிருக்கலாம். ஆனல், உன் பெரியம்மா கிட்ட நீ சிறுமைப்படறதை என் கற்பனையாலே கூட நினைச்சுப் பார்க்க முடியலேம்மா.''

''அத்தை! நீங்க என்னைத் தப்பாப் புரிஞ்சு கொள்ளக் கூடாது. உங்கள் மேலே நான் பெத்த தாய் போலப் பாசமும் நேசமும் வச்சிருக்கேன். ஆன நான் இங்கேஇருக்கறது ஒரு முள் போல உங்கள் பிள்ளைக்கு இடைஞ்சலா இருக்கு. மருமகள்னு நான் இந்த வீட்ல கால் வைச்சதுமே தாய்க்கும் பிள்ளைக்கும் இடையே என் வரவு பெரிய பிளவை உண்டாக்கிட்டதேன்னு ரொம்ப மன வருத்தப்படறேன். இத்தனையும் மனசில அடக்கி வச்சிக்கிட்டுப் பொறுமையா இருக்கத்தான் முயற்சி செய்தேன். முடியலே. மன்னிச்சுக்குங்கோ. உண்மையைக் கேட்டதுக்க சொல்லிட்டேன்.'' கட்டுக்கொள்ளாது 'ஓ'வென்று அழுதாள்.

''கவலைப்படாதேம்மா. உன் பிரியப்படி நீ வேறு எங்கேயாவது நிம்மதியாவாழும்படி ஒரு ஏற்பாடு செய்யறேன். இப்ப எழுந்துவந்து ஒரு வாய் சாப்பாடு, என்னேடு சாப்பிடும்மா. சமைச்ச மீதியை எடுத்து 'பிரிஜ்'ஜில் வச்சுட்டுச் சமையல் அறையை ஒழுங்கு படுத்திட்டுப் படுக்கப் போகலாம். ஹர்ஷன் வீட்டுக்கு எப்ப வேணுமானலும் வரட்டும். எனக்கு அக்கறை இல்லே. உன்னை அவன் இப்படி இம்சை செய்த பிறகு எனக்குப் பிள்ளை பிறக்கலேனு ஒதுக்கிடணும்னு மனசு விட்டுப் போச்சும்மா.''

''அத்தை!''

''வேண்டாம். அவனுக்காக நீ எதுவுமே பேசாதே. என் பிள்ளை மிகவும் அகம்பாவம் பிடிச்சவன்னு எனக்குத் தெரியும். எத்தனையோ பட்டும் இன்னமும் அவனுக்குப் புத்தி வரலே. எனக்கு உன் மேலே துளிக்கூட கோபமில்லே. ஒரு மாமியார் என்ற என் அதிகாரத்தை உபயோகித்து உன்னை நான் இங்கே வற்புறுத்தித் தங்க வைக்க மாட்டேன். ஆனல் கொஞ்ச நாள்தான் என்றாலும், இந்த வீடு நீ வந்ததும் கலகலப்பா இருந்தது. சுத்தமா, அழகா மாறிப் போனது. நீ போன பிறகு மறுபடியும் வீடு இருக்கப் போற நிலையை நினைச்சுப் பார்த்துக் கலங்கிப் போறேன். நான் கொடுத்து வச்சது அவ்வளவுதான்.'' துயரத்துடன் பெருமூச்செறிந்தாள் — அவளது கண்கள் கலங்கிப் போயின.


வெகு நேரம் தூங்காது படுத்திருந்தாள் மாதங்கி. நடு இரவைச் சமீபிக்கும் நேரம் வாயிற் கதவைத் தன் சாவி கொண்டு திறந்த ஹர்ஷன் உள்ளே வருவது தெரிந்தது.

பின்னர் மாடிப் படிகளின் மீது மெல்ல ஏறித் தன் அறையை அடைந்து கதவை மூடியதும் மிகத் தெளிவாகக் கேட்டது.

காலடி ஓசையைக் கேட்டு அவன் தன் கணவன் என்ற அளவுக்கு அவள் அவனைப் புரிந்து வைத்திருந்தாள். ஆனல் அவன்... அவளை ஏனே புரிந்து கொள்ள மறுக்கிறன். மெல்லக் கண்களைத் துடைத்துக் கொண்டு படுக்கையில் திரும்பிப் படுத்துக் கொண்டாள். அவளுக்கு வருங்காலம் என்று ஒன்று இருக்கிறதா? வேதனையினல் அவள் நெஞ்சு கனத்தது.

(தொடரும்)

3 மாதத்திற்குப் போதுமான இரும்புச்சத்துடன் குழந்தை பிறக்கிறது



3 மாதம் ஆனபின், குழந்தைக்குத் தேவையான இரும்புச்சத்து பாலில் மட்டுமே கிடைப்பதில்லை.

இரும்புச்சத்து அதிகமுள்ள **ஃபாரெக்ஸ்** கொடுங்கள்

"தாயிடமிருந்து ஏராளமான இரும்புச் சத்தைப் பெற்று குழந்தை பிறக்கிறது. பிறந்த பிறகு மெல்லமெல்ல இரும்புச் சத்தின் அளவுக் குறையத் தொடங்குகிறது. பால் நல்ல உணவாயிருப்பினும் இரும்புச் சத்துப் பற்றாக் குறையினால் அது முழுமையாவதில்லை. ஆகவே, குழந்தைக்கு இரும்புச் சத்து அடங்கிய திட உணவுத் தேவைப் படுகிறது."

—Dr. Subhash C. Arya "Infant & Childcare for the Indian mother".

டாக்டர்கள் ஃபாரெக்ஸ் சிபாரிசு செய்யக் காரணம்?

குழந்தைக்கு திட உணவைத் துவங்குவதற்கு தனிப்படத் தயாரிக்கப் பட்டது ஃபாரெக்ஸ்—குழந்தையின் இளம் ஜீரண சக்திக்கு ஏற்ப பக்குவம் செய்யப்பட்டது. இதில் விரைந்த வளர்ச்சிக்கான புரதச் சத்து; சக்திக்கான கார்போஹைட்ரேட், கொழுப்பு; எலும்புகளை திடமுடனும் பற்களை பலமுடனும் வளரச் செய்திடப் போதுமான கால்ஷியம், பாஸ்பரஸ், வைட்டமின்கள் உள்ளன. குழந்தையின் இரத்தத்திற்கும் உடல் ஆரோக்கியத்திற்கும் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் அவசியமான இரும்புச்சத்தும் ஏராளமாக அடங்கியது—ஃபாரெக்ஸ்.



இலவசம்! குழந்தையின் முதலாண்டு புத்தகத்திற்கு, 50 பைசா தபால் தலையுடன் எழுதுங்கள்.

த.பெ. எண் 19119,
(FAR 202 I),
பம்பாய்-400 025.

டாக்டர்கள் சிபாரிசு செய்வது ஃபாரெக்ஸ்
குழந்தையின் விரைந்த முழுவளர்ச்சிக்கு உன்னதமான திட உணவு

CASGLF-12-203 TAM



ஜூனியர் இன்ஸ்பெக்டர்....

வி.ஜயவண்ணன்

ஜீப்பை 522 ஸ்டார்ட் செய்ய அவரருகே இன்ஸ்பெக்டர் ராஜுவேல் தாவி ஏற, ஜீப் புறப்பட்டது.

''கோபிநாத் பங்களாவுக்குப் போ.''

''சரி ஸார்!''

அந்த மலைப் பாதையில் ஜீப் வளைந்து வளைந்து முன்னேறிச் செல்ல, இன்ஸ்பெக்டரின் நினைவுகள் சில தினங்களுக்கு முன் நடந்த அந்தச் சம்பவத்தை ஒரு முறை நினைத்துப் பார்த்தது.

நான்கு தினங்களுக்கு முன்....

போலீஸ் ஸ்டேஷன்.

சின்ன மருதூர் கொலை வழக்கின் ஃபைலை ஆராய்ந்து கொண்டிருந்தார் ராஜுவேல்.

ஒரு சிறு தடயம் கூடக் கிடைக்காமல் கொலைகாரன் வெகு சாமர்த்தியமாகச்செயல் பட்டிருப்பதை எண்ணி வியந்து கொண்டிருந்தபோதுதான் அந்தக் குரல் கேட்டது.

''இன்ஸ்பெக்டர்... இன்ஸ்பெக்டர்..... ரொம்ப அவசரம்... ப்ளீஸ்... உடனே வாங்க!'' என்றார் கோபிநாத்.

வெளியே நின்று கொண்டிருந்த ஜீப்பில் இருவரும் ஏறி அருகருகே அமர, சிறு உறுமலுடன் ஜீப் புறப்பட்டது.

''நடக்கக் கூடாதது நடந்துட்டுது இன்ஸ்பெக்டர்....''

''புரியும்படி சொல்லுங்கள்...''

''சொல்கிறேன்....'' என்ற கோபிநாத் தொடர்ந்தார்:''சுமார்ஒரு மணி நேரத்துக்கு முன்னாலே வழக்கம் போல நித்யா ஏரியிலே போட்டிங் போகணும்னு சொன்னா. 'சரி'னு சொன்ன நான் அவளையும் அழைச்சிக்கிட்டுப் படகிலே புறப்பட்டேன். நான்தான் துடுப்பை வலிச்சேன். எனக்கு எதிரே படகின் ஓரத்திலே நித்யா உட்கார்ந்திருந்தாள். படகு போய்க்கிட்டு இருக்கும்போதே குனிந்து ஒரு கையால் தண்ணியை அள்ளுவதும் பின் அதை இறைப்பதுமாக இருந்தாள். வழக்கமா படகு போகும்போதெல்லாம் சின்னப் பிள்ளையாட்டம் அவ இப்படித்தான் செய்வா. 'ஜாக்கிரதை... விழுந்துடாதே'ன்னு சொன்னேன். நான் எந்த நேரத்திலே அப்படிச் சொன்னேனோ, நான் சொன்னது நடந்துட்டுது.''

''நித்யாவுக்கு நீச்சல் தெரியாதா?''

''தெரியாது.''

''நீங்களாவது உடனே குதித்து அவளைக் காப்பாற்றியிருக்கலாமே!''

''இருக்கலாம். எனக்கு நீச்சல் தெரிஞ்சிருந்தா அப்படித்தான் செஞ்சிருப்பேன். சின்ன வயசிலே நீச்சல் கத்துக்காம இருந்தது எவ்வளவு பெரிய தப்புன்னு இப்பத்தானே புரியுது!''

''ஐ ஸீ...'' என்ற ராஜுவேல், ''அப்புறம் என்ன நடந்தது?'' என்று நிதானமாகக் கேட்டார்.

''அப்புறம் அவசரம் அவசரமாகக் கரைக்கு வந்தேன். சத்தம் போட்டுக் கூவினேன். பக்கத்தில் தேயிலைத் தோட்டத்தில் வேலை பார்த்துக்கிட்டு இருந்த நாலைந்து பேர் ஓடிவந்தாங்க. விஷயத்தைச் சொன்னேன். உடனே ஏரியிலே குதிச்சு உடலைத் தேடத் தொடங்கிட்டாங்க. நித்யா விழுந்த இடத்தை அவங்களுக்கு அடையாளம் காட்டிட்டுஉங்களைப் பார்க்க ஓடிவந்தேன்..''

தொலைவில் ஏரிக்கரை தெரிந்தது. அத்துடன் சிறு கூட்டமும் தெரிந்தது.

இன்ஸ்பெக்டர் வருவதைக் கண்டதும், கூட்டம் சற்றே விலகி ஒதுங்கி நிற்க, ராஜுவேலின் கண்கள் கோபிநாத்தின் அருகே தரையில் கிடந்த அந்தப் பெண்ணின் மேல் பதிந்தது!

அருகே சென்று அவள் நாசி அருகே விரலை வைத்துப் பார்த்தார்.

கதை முடிந்து விட்டது.

அவர் கண்கள் அந்தப் பெண்ணை மீண்டும் பார்த்தன.

வயது இருபதுக்குச் சற்று மேலே அல்லது கீழே இருக்கலாம். செல்வச் செழிப்பில் வளர்ந்திருந்ததால் சிற்பி செதுக்கியது போன்ற அளவான உடல்வாகு.

ராஜவேலின் கரத்தைப் பற்றிக்கொண்ட கோபிநாத், ''இன்ஸ்பெக்டர், என் நித்யா போயிட்டா ஸார். என்னை விட்டுட்டுப் போயிட்டா ஸார்...'' என்று கதறினான்.

அவரைத் தேற்றுவது பெரும் பாடாகி விட்டது ராஜவேலுக்கு.

கோபிநாத் ஓரளவு ஆறுதல் அடைந்த பின் இன்ஸ்பெக்டர் சொன்னார்: ''மிஸ்டர் கோபிநாத், இந்த விபத்து துரதிர்ஷ்டமானது. பாடியை போஸ்ட் மார்டம் செய்துட்டு அப்புறமா உங்ககிட்ட ஒப்படைக்கிறேன்...''

கோபிநாத் பதில் எதுவும் கூறாது சரியென்ற பாவனையில் மெல்லத் தலையசைத்தார்.

கோபிநாத்தின் அந்தப் பெரிய பங்களாவின் முன் ஜீப் நின்றது.

''ஒரு கேஸ் விஷயமா பக்கத்து ஊருக்குப் போயிட்டு வந்தேன். வர்ற வழியிலேதானே உங்க வீடு. அப்படியே பார்த்துட்டுப் போகலாம்னுதான் வந்தேன்....'' என்ற இன்ஸ்பெக்டரின் கண்கள் அந்தப் பங்களாவை ஆராய்ந்தன.

''இந்தப் பங்களாவின் ஒவ்வொரு அங்குலத்தையும் ரொம்பக் கவனத்தோட கட்டினார் என் அண்ணன். ஆனா, அவரு உயிரோட இருந்து இதை ஆளக் கொடுத்து வைக்கலே. போய்ச் சேர்ந்துட்டார்.''

''ஐ ஸீ...'' என்ற இன்ஸ்பெக்டர், ''அப்போ இது உங்க பங்களா இல்லையா?'' என்று வியப்போடு கேட்டார்.

''இல்லே. என் அண்ணனுக்கு முன்னே அண்ணி இறந்துட்டாங்க. அவங்களோட ஒரே பொண்ணுதான் நித்யா. என் அண்ணன் சாகிறதுக்கு முன்னாலே நித்யாவுக்கு என்னை கார்டியனா நியமனம் செஞ்சு உயில் எழுதிட்டார். நித்யாவுக்குக் கல்யாணம் ஆகிறவரைக்கும் உயில்படி நான்தான் அவள் கார்டியன். அதற்குப் பிறகு, எனக்கும் சொத்துக்கும் பாத்தியதை கிடையாது.''

''ஈஸ் இட்...'' என்று மீண்டும் வியந்த இன்ஸ்பெக்டர், ''நான் இதுவரைக்கும் நித்யா உங்க பெண்ணுன்னு நினைச்சுக்கிட்டு இருந்தேன்'' என்றார்.

''ரொம்பப் பேர் அப்படித்தான் நினைச்சுக்கிட்டு இருக்காங்க...''

''அப்போ, நித்யா இறந்ததாலே இந்தச் சொத்துக்கு நீங்கதான் வாரிசு ஒரே வாரிசு....''

''ஏன், இப்படிக்கூடக் கேட்கலாம் இன்ஸ்பெக்டர்!''

''எப்படி?''

''இந்த லட்சக் கணக்கான சொத்தை அடையறதுக்காக நான்தான் நித்யாவைக் கொலை செய்தேனுன்னு...''

பொட்டில் அடிபட்டது போல் தடுமாறிவிட்டார் இன்ஸ்பெக்டர்.

''ஆமாம் இன்ஸ்பெக்டர். சில பேர் அப்படித்தான் பேசிக்கிறாங்க. சந்தேகப்படறாங்க. ஆனா, நித்யா இறந்ததாலே என் மனசு படற வேதனை எனக்குத்தான் தெரியும்....''

''வாங்க போட்டிங் போயிட்டு வரலாம். மனசுக்கு ஆறுதலாக இருக்கும். நீங்க வேதனைப் படறதைப் பார்க்கும்போது எனக்கே ரொம்பச் சங்கடமா இருக்கு...'' என்றார் இன்ஸ்பெக்டர் வருந்தும் குரலில்.

''நீங்களாவது என்னைச் சரியாப் புரிஞ்சு வச்சிருக்கீங்களே, அது போதும் எனக்கு.'' என்ற கோபிநாத் இடத்தை விட்டு எழுந்து ''வாங்க, போகலாம்'' என்றார்.

இருவரும் ஏரிக் கரையை நோக்கி நடந்தனர்.

படகுத் துறையில் ஒரு படகை எடுத்துக் கொண்டு இருவரும் ஏரியின் இதயப் பகுதியை நோக்கி நகர....

இன்ஸ்பெக்டர் துடுப்பை வலிக்க, எதிரே கோபிநாத் உட்கார்ந்திருந்தார்.

''உங்களுக்கு வயசு என்ன இருக்கும்?''

''முப்பத்தைந்து.''

''பிரம்மச்சாரியாவே காலத்தை ஓட்டறதா முடிவு பண்ணிட்டீங்களா?''



''அண்ணன் உயிரோட இருந்தப்போ என் கல்யாணத்தை முடிச்சிட ஆசைப்பட்டாரு. ஆனா, நான்தான் ஒத்துக்கலே...''

''இனிமேல்?''

''சாகிற வரைக்கும் இப்படித்தான்...'' என்ற கோபிநாத், ''இன்ஸ்பெக்டர், இந்த இடம்தான்.... இங்கேதான் நித்யா விழுந்தான்!'' என்றார்.

இன்ஸ்பெக்டர் சட்டென்று துடுப்பை வலிப்பதை நிறுத்த, படகு நின்றது.

''இந்த இடத்திலா?''

''ஆமாம்.''

''அப்போ நித்யா எங்கே உட்கார்ந்திருந்தா?''

''இங்கேதான்...'' என்ற கோபிநாத் எழுந்து படகின் விளிம்பில் போய் உட்கார்ந்தார்.

''அப்ப, நீங்க உட்கார்ந்திருந்த இடத்திலே இப்ப நான் இருந்து துடுப்பு வலிக்கிறேன், இல்லையா?''

''ஆமாம் ஸார்!''

படகு நகரத் தொடங்கியது.

ஒரு காலை மடக்கிப் படகின் விளிம்பில் வைத்திருந்த கோபிநாத், மறுகாலைப் படகின் உட்புறம் தொங்க விட்டிருந்தார்.

''இப்படித்தான் நித்யா உட்கார்ந்திருந்தான்.''

''ஐ ஸீ...''

இன்ஸ்பெக்டர் தம் இடத்திலிருந்து காலை நேராக நீட்டினால், கோபிநாத்தின் காலை எளிதாகத் தொட முடியும்.

''நித்யா தண்ணீரைஅள்ளித் தெளித்தது போல் தெளியுங்களேன் பார்க்கலாம்....''

''இப்படித்தான்....'' என்ற கோபிநாத், குனிந்து ஒரு கையால் தண்ணீரை அள்ளுவதும், பின் அந்தத் தண்ணீரை ஏரியிலேயே இறைப்பதுமாக இருந்தார்.

♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦



முதல் முறை....

இரண்டாம் முறை.....

மூன்றும் முறை....

நான்காம் முறை தண்ணீரை அள்ளக் கோபிநாத் குனிந்தபோது, இன்ஸ்பெக்டர் தம் காலைச் சற்றே நேராக நீட்ட, கோபிநாத்துக்கும் படகின் சுவருக்கும் இடையே இருந்த இடைவெளியில் அந்தக் கால் எளிதாக நுழைய, சரேலென்று அவரது வலது காலைத் தம் காலால் இன்ஸ்பெக்டர் தட்டிவிட....

நிலை தடுமாறிய கோபிநாத் 'ஆ' வென்று அலறிக் கொண்டே ஏரியில் தலைக்குப்புறக் கவிழ்ந்தார்!

அதற்குள் சிறிது தொலைவு சென்றுவிட்ட படகை நிறுத்திய இன்ஸ்பெக்டர் கோபிநாத்தைப் பார்த்தார்.

''ஸாரி மிஸ்டர் கோபிநாத்... வாங்க...'' என்று அவரைப் பார்த்துக் கூவ, கோபிநாத் அழகாக நீந்திப் படகின் அருகே வர, இன்ஸ்பெக்டர் தம் கரத்தை நீட்டி, படகின் உள்ளே அவரை இழுத்தார்.

படகின் உள்ளே வந்து நடுப் பகுதியின் குறுக்குச் சட்டத்தில் உட்கார்ந்த கோபிநாத், மேலே வழிந்த தண்ணீரை மெல்லத் துடைத்துக் கொள்ளத் தொடங்கினார்.

கரையில் படகு நின்றதும் இருவரும் இறங்கினர்.

இன்ஸ்பெக்டர் கோபிநாத்தைப் பார்த்தார்.

''ஸோ, மிஸ்டர் கோபிநாத்... ஸ்டேஷனுக்குப் போவோமா?''

''ஸ்டேஷனுக்கா?''


''நீங்க நித்யாவை எப்படிக் கொலை செய்தீங்கன்னு நிரூபிச்சுட்டேன், இல்லையா?''

''என்ன... நான்.... நித்யாவை.. .இன்ஸ்பெக்டர், என்ன உளறுறீங்க?''

''உளறலே. உண்மையைத்தான் சொல்றேன் மிஸ்டர் கோபிநாத். எஸ்... நீங்கதான் நித்யாவைக் கொலை செஞ்சீங்க. ஆரம்பத்திலேயிருந்து உங்க மேலே எனக்குச் சந்தேகம் இருந்தது. உங்களுக்கு நீச்சல் தெரி

புத்தகத்துறைப் புதிர்கள்!

திடீரென்று ஒரு நாள் காலைச் செய்தித்தாள்களில், பொது நூலக இயக்குநர் திரு தில்லைநாயகம் சஸ்பெண்டு செய்யப்பட்டதாக ஒரு செய்தி வெளியாயிற்று. இதற்கு ஏதேனும் பின்னணி இல்லாமல் போகாது என்று தோன்றினாலும் 'கண்ணில் விளக்கெண்ணெய் போட்டுக்கொண்டு குடைந்து பார்க்கத் தேவையில்லாமல் செய்திகள் சில காதில் விழுந்தன.



○ கார்டூன் நன்றி: ஜெர்மன் டிரிப்யூன்

○ லக்ஷ்மி



○ பாதன்



மிக நாராசமாக இருந்த ஒன்று, நூலகத் துறையைச் சேர்ந்த பலர் 'ஆகா நமக்கு விடிவு காலம் பிறந்து விட்டது. இனி நீட்டுகிற நம் கையைக் குறுக்கே நின்று தடுக்க யாருமில்லை!' என்று இனிப்பு வழங்கிக் கொண்டாடினார்களாம்! ஆக, திரு தில்லை நாயகம் பலருக்குத் தொல்லை நாயகமாகவும் இருந்திருக்கிறார் என்று தெரிகிறது.

சரி, அவரைத் தற்காலிக வேலை நீக்கம் செய்யக் காரணம் என்னவாயிருக்கும்? கொஞ்சம் குடைந்து பார்த்தோம்.

முதலில் கேள்விப்பட்டது: சென்னை கார்ப்பரேஷன் வசூலிக்கும் சொத்து வரியை 93 சதவீதம் மாநகராட்சிக்கும் 7 சதவீதம் குடி நீர் வடிகால் வாரியத்துக்குமாகப் பிரித்தார்கள் இல்லையா? மக்களிடமிருந்து நூலக வரியாக மாநகராட்சி வசூலித்து



அன்புள்ள அத்தான்

கே. பாலசந்தரிடம் உதவியாளராய்ப் பணியாற்றிய கண்மணிசுப்பு டைரக்‌ஷனும், லோகநாதனிடம் உதவியாளராக இருந்த ரகுநாத ரெட்டி கேமராவும் நாம் எதிர்பாராத வண்ணம் ஜாலம் புரிந்துள்ளன. குருவுக்கேற்ற சிஷ்யர்கள். மிஞ்சட்டும்.

ஷோபா கதாநாயகி. பக்கத்து வீட்டுப் பையனைக் கேலி செய்து வம்புக்கிழுக்கும் குறும்பும் சரி, இடை வேளைக்குப் பின் இடிந்துபோய்ப் பேசாமல் அமர்ந்துவிடும் சோகப் பதுமையும் சரி, 'ஷோபா ஊர்வசி' என்கின்றன.

ஒரு பெண் பக்கத்து வீட்டுப் பையனைக் காதலித்து எதிர்பாராத விதமாக ஒருவனிடம் கற்பிழந்து கடைசியில் இருவரையும் ஏற்காமல் வாழ்வை முடித்துக் கொள்ளும் சாதாரணக் கதைதான்! பளிச் வசனமும், பளிச் படப் பிடிப்பும் அசாதாரணப்படுகின்றன. கதாநாயகனாய் அறிமுகமாகும் கலைவாணனுக்கு உயரமும் கவர்ச்சியும் கை-கொடுக்கின்றன.

பக்கத்து வீட்டில் டீ.வி. பார்ப்பதும், முறுக்குப் பரிமாற்றமும் ட்யூஷன் ரகளையும் காரமாய் காப்பி போடுமிடமும் மனதில் இனிமையாய் இழைகின்றன.

பிறவி நடிகர் கலாவாய் வரும் ஒய். ஜி. மகேந்திரன் சுருளியின் இடத்தைப் பிடித்து வருகிறார். விடுவார்.

ஒரு சமாசாரம்: இந்த டைரக்டர் கண்மணி சுப்புவும், நாயகன் கலைவாணனும் கவிஞர் கண்ணதாசனின் புதல்வர்கள்.

-நளினி சாஸ்திரி

விட இப்போது இரண்டு மூன்று மடங்கு ஆகிவிட்டதாகவும், இந்த லட்சணத்தில் நூலின் ஆசிரியர், பொருள், தயாரிப்புத் தரம் எதையும் பார்க்காமல், 16 பக்க ஃபாரத்துக்கு 50 அல்லது 60 பைசா என்று சகட்டு மேனிக்கு நூலகத் துறை விலை நிர்ணயிப்பது என்ன நியாயம் என்றும் குமுறினார். ஆங்கில நூல்களுக்கு இல்லாத விலைக் கட்டுப்பாடு தமிழுக்கு மட்டும் ஏன் என்று பொருமினார். குழந்தைகள் நூலகத்தை நிறுவப் போகிறோம் என்று சொல்லிவிட்டு, மத்திய நூலகக் கட்டிடத்தில் ஒதுக்கப்பட்டிருந்த மிக பெரிய கூடத்தைச் சிறுவர் நூலகம் வைக்கா

ணைப் பெருமூச்சு விட்டார். 'குழந்தைகள் நூலகம்தான் அங்கே வைக்கவில்லை. புத்தகப் பதிப்பாளர்களின் கண் காட்சிக்கோ, இலக்கிய சம்பந்தமான கூட்டங்களுக்கோ முழுக்க முழுக்க அதை ஒதுக்கினால் என்ன?' என்று ஆதங்கத்துடன் கேட்டார்.

கேரள, கர்நாடக அரசுகள் புதுதில்லியில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியில் தமது பதிப்பாளர்களுக்காக விற்பனைக் கூடங்களின் வாடகையைத் தாமே கொடுத்தது மட்டுமல்ல, செலவினங்களையும் ஏற்றுக் கொண்டார்கள். நமது தமிழக அரசும் இதுபோன்ற உதவிகளைச் செய்ய முன்வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். மத்திய அரசு நியாயமான விலையில் காகிதம் தடங்கலோ, தட்டுப்பாடோ இன்றிக் கிடைக்க உதவ வேண்டும் என்று தெரிவித்தார். அச்சிடப்படாத வெற்றுக் காகிதத்துக்கு விலை மதிப்பு அதிகம் போலும்! பாங்குகள் இதன் மீது கடன் கொடுக்கின்றன. இதில் அச்சிட்டுப் புத்தகமாகக் கொண்டு வந்தாலோ போயிற்று! புத்தக வெளியீட்டையும் ஒரு தொழிலாக மதித்து பாங்குகள் கிரடிட் கொடுக்க வேண்டும் என்று ஒரு யோசனையையும் தெரிவித்தார்.

'புத்தக விமரிசனங்களால் ஏதேனும் பயன் இருக்கிறதோ?' என்று கேட்டோம்.

''ஏதும் பிரமாதமாய்இருப்பதாகத்தெரியவில்லை. இரண்டு ஆசிரியர்கள் (ஒருவர் மிகப் பிரபலமானவர்) எழுதி, அண்மையில் வெளியான ஒரு நூல் பரபரப்பான விமர்சனப் பார்வை பெற்றும் கூட, அப்படியொன்றும் ஓகோ என்று விற்றுப் போய்விடவில்லை!'' என்றார்.

இந்தக் குறைகளை வெகு நேரம் தாங்க முடியாது போலிருந்தது. யாருடைய தோளிலாவது சாய்ந்து கொண்டு கொட்டித் தீர்ப்போம் என்று புறப்பட்டு, 'மணிமேகலைப் பிரசுரம்' ரவி தமிழ்வாணன் வீட்டில் வந்து இறங்கினோம்.

''புத்தகத்துக்கு ஃபாரத்துக்கு 50—60 பைசா வைத்து வாங்கிக்கொண்டால் என்ன? ஒரேயடியாக 600 பிரதிகளைப் பொது நூலகத் துறை வாங்கிக் கொள்கிறதே! மொத்தமாகப் பணம் கிடைக்கிறது. நிச்சயம் லாபமும் கிடைக்கிறது!'' என்றார் ரவி எடுத்தவுடன்.

''புத்தக விமரிசனங்களால் பலன் இல்லை என்று நான் சொல்லவே மாட்டேன். எங்கள் வெளியீடுகளுக்கு நல்ல மதிப்புரை மட்டுமல்ல, நல்ல விற்பனையும் இவற்றால் கிடைக்கிறது. ஏன், மோட்டார் மெகானிஸம் பற்றிய ஒரு புத்தகத்துக்குத் தினமணி கதிரில் விமரிசனம் வெளியாயிற்று. நல்ல ரெஸ்பான்ஸ்! அமோக வரவேற்பு!''

இப்படி ஒரேயடியாக எல்லா நெகடிவ் அம்சங்களையும் பாஸிட்டிவ்வாகவே சொல்கிறாரே இந்த இளைஞர், போடுவோம் ஒரு இடுக்கிப் பிடி என்று, காதில் விழுந்த இன்னொரு குற்றச்சாட்டை எடுத்துப் போட்டோம்.

''கல்கத்தாவில் இருக்கும் [illegible]

மொழியில் வெளியாகும் நூல்களையும் வாங்குவதற்கென்றே ஒதுக்கி, தமிழிலும் சில லட்ச ரூபாய்க்கு நூல்கள் வாங்கப் பணம் கொடுக்கிறது. பொது நூலக இயக்கத் துறைதான் இந்த நூல்களையும் வாங்க வேண்டும். இந்தச் சில லட்ச ரூபாய்க்கான புத்தகங்களைக்கூட வாங்காமல், கடந்த ஆண்டு இந்தப் பணத்தைத் திருப்பி அனுப்பிவிட்டதாகக் கூறப்படுகிறது. அண்டை மாநிலங்களிலிருந்துகூட இந்தத் தொகையில் சில தமிழ் நூல்கள் வாங்கும்போது தமிழ்நாட்டில் மட்டும் ஏன் இந்தத் தொகையை உபயோகிக்காமல் வீணடிக்க வேண்டும்?''

ரவி இதற்கும் பாஸிடிவ் பதில் வைத்திருந்தார்! ''எந்தப் பதிப்பாளர்களிடமிருந்து வாங்கினார்களோ இல்லையோ, எங்களிடமிருந்து 256 பிரதிகள் ஒவ்வொரு புத்தகத்திலும் ராம் மோகன் ராய் ஃபவுண்டேஷன் நிதியிலிருந்து வாங்கியிருக்கிறார்கள்.''

புத்தக வெளியீட்டுத் துறைக்குநல்ல எதிர்காலம் இருப்பதையும், நாவல்களை விட டெக்னிகல் புத்தகங்களுக்கு நல்ல வரவேற்பு இருப்பதையும் குறிப்பிட்டார் ரவி. அப்பாவின் சுறுசுறுப்பும், ஆர்வமும், துடிப்பும் தப்பாமல் வாய்த்திருக்கிறது பிள்ளையிடம்.

சரி, 'வாசகர் வட்ட'மும் மணிமேகலைப் பிரசுரமும்தான் தனியார் பதிப்பகங்கள். மத்திய அரசின் வெளியீட்டுத் துறையான நேஷனல் புக் டிரஸ்ட் எப்படி? இந்த நிறுவனத்தைச் சேர்ந்த நபர் எவராவது வலையில் சிக்கமாட்டாரா என்று பார்த்தபோது வந்து விழுந்தார் 'ஆதவன்' வசமாக. புதிய தலைமுறை எழுத்தாளர். இளைஞர். என். பி. டி. யின் தமிழ்ப் பகுதித் துணை ஆசிரியர்.

''நேஷனல் புக் டிரஸ்ட் வெளியிடும் புத்தகங்கள் அதிகமாக விற்பனை ஆவதில்லை. அதனால் பொதுப்பணம் நஷ்டமாகிறது என்று ஒரு குற்றச்சாட்டு கூறப்படுகிறதே?'' என்று அவரை மடக்கினோம்.

''இல்லவே இல்லை'' என்று மறுத்துப் பேசினார் 'ஆதவன்': ''தனியார் துறையுடன் போட்டியிடுவது அல்ல, அவர்கள் தொடாத துறைகளில் நூல்கள் வெளியிட்டு இந்திய மொழிகளில் தரமான, விஷய கனமுள்ள நூல்கள் வருவதற்கு உதவுவதும், வழிகாட்டுவதுமே என். பி. டி.யின் நோக்கம். வணிக ரீதியான வெற்றி மட்டுமே நோக்கமாயிருந்தால், நாங்களும் ஸ்தோத்திரப் புத்தகங்கள், நட்சத்திர எழுத்தாளர்களின் (தொடர் கதையாய் வந்த) நாவல்கள் என்று வெளியிட்டிருப்போம். இது ஒன்றும் சிரமமில்லையே! அமைப்பு, உள்ளடக்கம்—இரண்டு நோக்கிலும் சில லட்சியங்கள் எங்களுக்கு உண்டு. பரவலான சில மட்டமான ருசிகளுக்கு எதிராக நீச்சலிடுபவர்கள் என்ற நோக்கில் எங்கள் புத்தகங்களின் விற்பனை உற்சாகமூட்டுவதாக இருக்கிறது. இது அதிகரித்தும் வருகிறது.''

விடவில்லை அவரை. ''எந்தெந்த நூல்கள் என்று குறிப்பிடுங்கள்?''

''தமிழில் பல நூல்கள் முழுவதும் விற்றுப் போய்விட்டன. உதாரணம்: ஸலிம் அலியின் 'பறவை உலகம்'; சோமலெயின் 'தமிழ் நாட்டுமக்களின் மரபும்பண்பாடும்', மாஸ்தியின் சிக்கவீர ராஜேந்திரன்' மற்றும் தகழியின் 'ஏணிப் படிகள்' ஆகிய நாவல்களின் தமிழாக்கங்கள். அண்மையில் வந்த செம்மங்குடியின் 'ஸ்வாதித் திருநாள்' வரலாறும் நன்றாக விற்றிருக்கிறது.''

'ஆதவன்' சாமர்த்தியமாகப் பதில் சொல்லி விட்டார். பரவாயில்லை என்று சந்தோஷப்பட்டபோது, புதுசாக ஒரு குறை என். பி. டி.யின் விற்பனைத் துறையைச் சேர்ந்த நபர் ஒருவரிடமிருந்து காதில் விழுந்தது. இவர்கள் வெளியிடும் தரமான நூல்களைப் பல பள்ளிக்கூட நூல் நிலையங்களுக்கு விற்க முடிகிறதில்லையாம். காரணம், அவர்கள் எதிர்பார்க்கும் கணக்கில் வராத கமிஷன் சமாசாரம் குறுக்கே நிற்கிறதாம்! இதே குறையைக் கூட்டுறவு முறையில் நூல் வெளியிடும் பதிப்பகத்தைச் சேர்ந்த ஒருவரும் வெளியிட்டார்: 'பள்ளிக்கூடப் போட்டிகளிலும், விழாக்களிலும்,பரிசளிக்கப் புத்தகங்கள் வாங்க வேண்டும். அதற்கு இந்த 'க. வ. கமிஷன்'தான் உபயோகமாகிறது என்று பள்ளிகளில் சொல்கிறார்கள்.'

''பள்ளிக்கூடங்களில் பதிப்பாளர்கள் புத்தகங்களை எங்கே விற்கிறார்கள்? 'தள்ளி விடுகிறார்கள்'' — என்று பரவலாக எங்கள் செவிகளில் விழுந்த இந்த வார்த்தையைச் சற்று அழுத்தத்துடன் உபயோகித்தார்.

இதற்குப் பதில் எப்படி வருகிறது பார்ப்போம் என்று கல்லூரிச் சாலை காம்பவுண்டுகள் ஒன்றில் புகுந்து, சம்பந்தப்பட்ட அதிகாரியையே பார்த்துக் கேட்டு விடுவோம் என்று போய்ச் சேர்ந்து, அவர் முன் அமர்ந்து, வணக்கம் தெரிவித்து, மேற்படி கேள்விகளை எடுத்துப் போட்டோம்.

''நேஷனல் புக் டிரஸ்ட் என்று சொன்னீர்கள்? ரிடையர் ஆகிவிட்டவர்களுக்கு வேலை கொடுக்கும் சரணாலயம் என்றல்லவா

ஒருவர்: என் மகனுக்கு ஞாபகமறதி அதிகம் ஆகிப் போச்சுன்னு நினைக்கிறேன்.

மற்றவர்: எப்படி சொல்றீங்க?

ஒருவர் : சினிமாவுக்குப் போறேன்னு சொல்லிவிட்டு ஸ்பெஷல் கிளாசுக்குப் போகிறான்!

— பிரியா பாலு



நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்!'' என்று ஆரம்பித்தார். கிள்ளுகிற கேலி. ''நல்ல புத்தகம், தரமான புத்தகம், மாணவர்களுக்கு ரொம்ப உபயோகமான நூல் என்று என். பி.டி. சொல்லிக் கொண்டிருந்தால் மட்டும் போதுமா? எங்கள் காதில் விழ வேண்டாமா? எங்கள் பார்வைக்கு வரவேண்டாம்? ஏன் இங்கே சென்னையில் சமீபத்தில் யுனெஸ்கோ சார்பில் புத்தக வெளியீடு சம்பந்தமாக ஒரு கருத்தரங்கு நடத்தினார்களே. அப்போதாவது எங்களை யாராவது அழைத்தார்களா? புத்தகம் போட்டால் மட்டும் போதாது. நவீன விளம்பர, விற்பனை உத்திகளைக் கையாண்டால் நிச்சயம் என். பி. டி. நூல்கள் சிறப்பாக விற்பனை ஆகும். இல்லையென்றால் இரண்டு ஆண்டுகளுக்கு முன் எடைக்கு வாங்கினேமே, அது போல் நம்மிடம் தள்ள வேண்டியதுதான்!''

''சரி, பள்ளிக்கூடங்களில் குறுக்கிடுகிற கமிஷன் என்கிற நந்தி?''

பலமாகச் சிரித்தார் அதிகாரி.

''பள்ளி நூலகங்களுக்குப் பாட சம்பந்தமான — அகடமிக் நூல்களையே பெரிதும் வரவழைக்கிறோம். சென்ற வருஷம் மட்டும் எழுபது லட்ச ரூபாய்க்கு (அடேயப்பா!) வாங்கி, பதிப்பாளர்களே வியந்துபோய், இது போல் எந்த மாநிலமும் வாங்கியதில்லையென்று ஒருமித்த பாராட்டுக்கள் தெரிவித்தார்கள். நீங்கள் என்னடாவென்றால் நூல்களை விற்க முடிகிறதில்லை என்று மூக்கால் அழுகிறீர்கள்! புத்தகங்களைப் பள்ளிகளுக்கு வாங்க, எங்கள் துறையிலேயே ஒரு தனி அதிகாரி இருக்கிறார். அவரிடம் புத்தகப் பட்டியலையோ, புத்தகப் பிரதியையோ அனுப்பி வையுங்கள். பள்ளி நூலகத்துக்கு இது தேவை என்று அவர் தீர்மானித்தால் புத்தகம் வாங்க **எதுவுமே** குறுக்கே தடையாக இருக்காது!''

ரொம்பத்தான் மனிதரைக் கேள்வியால் குடைந்து விட்டோம் என்று அவரையே புத்தகம் விற்க என்ன வழியென்று யோசனைகள் கேட்டோம்.

''மாணவருக்கே நேரடியாக இருபது சதவிதத் தள்ளுபடி சலுகை கொடுத்து, புத்தகங்கள் வாங்க ஊக்குவிக்கலாம். வெளி நாடுகள் போல இங்கேயும் திருமண, பிறந்த நாள் விழாக்களில் மாலைகளுக்குப் பதில் புத்தக வவுச்சர்கள் பரிசளித்தால், பிடித்தமான நூல்களை அவர்களாகவே புத்தகக் கடைகளுக்குச் சென்று வாங்கிக்கொள்ள முடியும்.

''சென்னையிலேயே எல்லாப் பதிப்பாளர்களின் புத்தகங்களையும் கொண்ட 'புக்ஸ் ஆர்கேட்' என்ற புத்தக விற்பனைக் கூடம் ஏற்படுத்தப் பதிப்பாளர்கள் முன்வந்தால், அரசு சார்பில் ஒரு முக்கியமான இடத்தில் நிலத்தை வழங்குகிறோம். வங்கிகளின் உதவியுடன் புத்தக வெளியீட்டாளர்கள் நிரந்தர விற்பனை நிலையம் கட்டிக் கொண்டு அமோகமாக விற்பனை செய்யட்டும்!'' என்று கை குவித்தார் அதிகாரி.

இவையெல்லாம் கேட்ட பிறகு, நேரடியாக இரண்டு மூன்று புத்தகக் கடைகளுக்கு விஜயம் செய்து பார்த்ததில், ஆங்கிலப் புத்தகங்கள் மாதிரி தமிழ்ப் புத்தகங்களை விலை கொடுத்து வாங்குபவர்கள் அப்படி ஒன்றும் அதிகமில்லை என்று தோன்றிற்று. தமிழ்ப் புத்தகங்களை வாங்குவது கௌரவக் குறைவு என்று கருதுகிறார்களா என்ன? பொதுவாகக் கண்காட்சிகளில் புத்தக ஸ்டால் எடுத்தால், விற்பனை ஆகிறதில்லை. நஷ்டமே ஆகிறது என்றும் ஒரு குரல் காதில் விழுந்தது!

''மாத நாவல்களால் புத்தக விற்பனை பாதிக்கப்பட்டுள்ளதா?'' இதற்கு பூம்புகார் பிரசுரம் திரு பரதன் பதில்: ''நிச்சயம் இல்லை. மாறாக மாத நாவல்கள் புத்தக விற்பனையை அதிகரிக்க உதவுகின்றன. அவை மக்களிடையே படிக்கும் ஆர்வத்தை உண்டாக்குகின்றன. அப்படி ஆர்வம் தூண்டப்பட்ட வாசகர்களுக்குப் பதிப்பகங்கள் நல்ல தீனி போடுகின்றன.''

புத்தக வெளியீட்டுத் துறையின் சில முக்கியமான பக்கங்களைப் புரட்டிவிட்ட ஆறுதலுடன், மறுபடியும் திரு இல்லை நாயகம் இல்லாத கன்னிமாரா நூலகத்தை இப்போது பார்க்கப் போனால்—

புத்தகங்கள் சீராக அந்தந்த இடங்களில் இருக்கின்றன. நூலகம் அமைதியாக இயங்குகிறது. ''என்ன ஸார் வேணும்?'' என்று கேட்டு உதவப் பணியாளர்கள் முன் வருகின்றனர் சுறுசுறுப்புடன். நூலக இயக்குனர் அறை பூட்டப்பட்டிருக்கிறது.

கட்டுரையை முடிக்கு முன், திரு இல்லை நாயகம் பற்றிப் பதிப்பாளர்கள் சிலர் வெளியிட்ட கருத்துக்கள்:

மனிதர் அப்பழுக்கற்றவர் என்று சொன்னவர் சிலர். முதலமைச்சர் காரணமின்றி நடவடிக்கை எடுத்திருக்க மாட்டார் என்று ஒருவர். நூலகங்களுக்குப் புத்தகங்கள் வாங்

''ஏங்க... ப்ளேயர்ஸையெல்லாம் விட்டுட்டு அம்பயருக்கு மாலை போடுறீங்க?''

''அதுவா யாருடைய உதவியுமில்லாமல் அம்பயர் எடுத்த 100வது விக்கெட்டாம் அது-அதுக்குத் தான்''

- யசோதா



நடித்த படப்பிடிப்புத் தளம்? —ஏ. வி. எம். ஸ்டுடியோவுக்குப் பின்புற முள்ள ஒரு மாந்தோப்பு.

ஒன்று சொல்லுங்களேன்? —பத்திரிகைக்காரரிடம் சொன்னால் அதற்குப் பெயர் ரகசியமில்லை. இருந்தாலும் சொல் கிறேன். எனக்கு வயது 19!

ன இடம்? —XXX Hercules rum factory

ய எதிர்பார்ப்பது எதில்? —மனத்தில்

ன நம்பிக்கை எதன்மேல்? —என்மேல்.

ய பாத்திரம்? —வெள்ளி.

மானரிசம்? —Opportunism

ம்போது பாடுவதுண்டா? —குளிக்கும்போதும் பாடுவேன்!

ா பிடிக்குமா? டி.வி. விருப்பமா? —ரேடியோ பிடிக்கும்; டி.வி. விருப்பம்?

ல் படித்த புத்தகம்? —அது படிக்கும் புத்தகமல்ல; பார்க்கும் புத்தகம்!

கஷ்டமான காட்சி? —''வறுமை''யில் ஆப்பிள் எடுக்கும் காட்சி.

ான பாடல்? —ஜனகணமன.

வெறுப்பது? —அதிகமான கேள்விகளை.

உண்டா? —100 கேள்விகளுக்குப் பதில் சொல்வதற்குள் அது நடந்துவிடும்!

ிட்டுச் சிரித்தது? —சாதாரணமாக வாயை விடமாட்டேன்.

சிந்திப்பது எப்போது? —ஜலதோஷம் வந்தால் அடிக்கடி சிந்திப்பேன்.

வைக்க அனுமதி அளித்தால்- வைப்பீர்கள்? —கிடைத்த ஒரே வாய்ப்பை நழுவ விடாமல் எனக்கே வைத்துவிடுவேன்!

ா'' என்று யாரையாவது துண்டா? —கிடையாது! சீசீ! போ! என்றுதான் நான் சொல்வது வழக்கம்.

— இந்த வார்த்தையை ஒரு எவ்வளவு தரம் சொல்வீர்கள்? —செகண்ட் ஸண்டே தவிர பாக்கி நாட்களில் ஐம்பதுக்குக் குறைவாகத்தான் இருக்கும்.

ண்விழிக்க விரும்புவது எதில்? —என் படுக்கையில்.

ன்ன வாகனங்கள் ஓட்டத் ? —நீங்கள் என் படங்களில் பார்த்தவை எல்லாம் உண்மையிலேயே நானே ஓட்டியவைதான்.

ஆக்ஸிடெண்ட் ஆன இடம்? —முழங்கால்.

யில் விட்டால்? —தப்புப் பண்ணி விடுவேன்.

உங்களையே நீங்கள் பார்த் ணும்போது? —திரையையும் ரசிகர்களையும் பார்த்துப் பரிதாபப்படுவேன்.


பயப்படுவீர்கள்? —என் அகம்பாவத்தைக் கண்டு.

(தொடரும்) பேட்டி: **சலன்**


பல்லை உடைச்சுக் கையிலே கொடுத்துடுவேன்.... ஆமா!
ஹும்!...தைரியம் இருந்தா.. கையிலே கொடுக்காமல் இருந்துதான் பாரேன்....!


நன்கொடை கேட்டு வருகிறவர்களின் வயதைக் கேட்கிறீர்களே; எதற்கு?
வயது ஒன்பதால் மீதியில்லாமல் வகுபடுமானால் தான் நன்கொடை கொடுப்பது என்று வைத்திருக்கிறேன்....
இந்த ரகசியத்தைத் தெரிந்துகொண்டு, வேணுமென்றே ஒன்பதால் வகுபடுகிற வயதைச் சொன்னார்களானால்.....?
அதுதான் நடக்காது! வகுக்கும் எண்ணை அவ்வப்போது மாற்றிக் கொள்வேன்!


வரவர உங்கள் ஜோக்குகளில இங்கிலீஷ் – வார்த்தைகள் நிறையக் கலந்து வருகிற மாதிரி தெரியுதே....?
பூராவுமே ஆங்கிலத்திலே எழுதி விடலாம்! ஆனால், நம்ம திறமைக்கு கொஞ்சம் கூட இடமில்லாமல் போகுமே- என்றுதான், யோசிக்கிறேன்....
ஆசிரியர்


ஆதாமுக்குப் பைத்தியம் பிடித்திருந்தால், என்ன
பாவம், பின்னால் வரப் பத்துப்பேர் இல்லாமல் தவித்துப்

[redacted]






எங்க பிள்ளையாண்டான் அவனோட கிளாஸ்-மேட் ஒருத்தியை ரொம்ப







"யாரம்மா நீ?''

செய்தித் தாளில் பதிந்திருந்த கண்களை உயர்த்திக் கேட்டார் கேசவன்.

அந்தப் பெண்ணுக்கு இருபது வயதிருக்கும். சுமாரான நிறம். சுமாரான அழகு. மழை இல்லாமல் சாம்பிப்போன பயிரைப் போன்ற மெலிந்த உடல். ஆனால் முகத்தில் களை சுடர் விட்டது.

''என் பெயர் கோமளங்க. நாமக்கல்லிலிருந்து வருகிறேன். வெள்ளையப்பன் அனுப்பி வைத்தாரு...'' இவ்வாறுகூறிக் கையிலிருந்த கடிதத்தை மரியாதையுடன் நீட்டினான் அவள்.

அதை வாங்கி மேலோட்டமாக ஒரு பார்வை பார்த்துவிட்டுச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டார் கேசவன்.

''அப்ளிகேஷன்போட்டிருக்கிறாயல்லவா?''

''போட்டிருக்கேனுங்க. இண்டர்வ்யூ கார்டுகூட வந்திருக்கிறது...''

''அப்படியானால் நாளைக்கு அலுவலகத்துக்கு வந்துவிட வேண்டியதுதானே...''

அவள் தலையைச் சொறிந்தாள்.

''நான் ரொம்ப ஏழைங்க....''

''அதுதான் வெள்ளையப்பனே எழுதியிருக்கிறாரே... இண்டர்வ்யூ முறைப்படி நடக்கும். நேர்முக பரீட்சைக்குப் பிறகுதான் முடிவு தெரியும்!''

''வெள்ளையப்பன் ஐயாவுக்கு உடம்பு சரியில்லை. இல்லேன்னா என்னோடு வந்திருப்பாரு. அவர் கொடுத்த நம்பிக்கையிலேதான் கடன் வாங்கிச் செலவழித்துக் கொண்டு இவ்வளவு தூரம் வந்திருக்கிறேனுங்க...''

உனக்கு நான் உதவ வேண்டுமானால் சொல். செய்யத் தயாராக இருக்கிறேன்.''

ஏமாற்றம் தொனிக்கும் குரலில் பதிலளித்தாள் அவள்.

''வேறு எதுவும் வேண்டாங்க....''

''சரி, போய்வா...''

அதற்கு மேல் அங்கு நிற்க வில்லை அவள்.

கேசவனுக்குச் சிபாரிசுக் கடிதம் கொடுத்திருந்தது போல் சென்னையிலிருந்த உறவினர் ஒருவர் வீட்டுக்கும் அறிமுகக் கடிதம் எழுதிக் கொடுத்தனுப்பி யிருந்தார் வெள்ளையப்பன்.

அவர்கள் வீட்டில்தான் கோமளம் தங்கினாள். அடுத்த நாள் பதினொரு மணிக்கு இண்டர்வ்யூ. வேண்டா வெறுப்பாகவே போனாள் அவள்.

ஐந்தே இடத்துக்கு ஐந்நூறு பேர் வந்திருந்தார்கள். எல்லாரும் மெத்தப் படித்தவர்கள். எம். ஏ. பட்டம் பெற்றவர்கள்.

அவர்களைப் பார்த்ததும் கோமளத்துக்கு இருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும் போய் விட்டது.

இண்டர்வ்யூ முடிவு ஒரு வாரத்தில் தெரியும் என்றும் தேர்வு பெற்றவர்களுக்குக் கடிதம் வரும் என்றும் சொல்லி எல்லாரையும் அனுப்பி வைத்தனர்.

அன்று இரவே ஊருக்கு ரயிலேறி விட்டாள் கோமளம்.

உடல் நலம் தேறிய வெள்ளையப்பன் பத்து நாட்களுக்குப் பின் சென்னைக்கு வந்து கேசவனைப் பார்த்தார்.

''வாங்க வெள்ளையப்பன்... உடம்பு எப்படி இருக்கிறது... உட்காருங்கள்...''

''என்ன முதலாளி! இவ்வளவு தெரிந்திருந்தும் என் மூக்கை அறுத்துவிட்டீர்களே? நான் கடிதம் கொடுத்து அனுப்பிய பெண்ணுக்கு ஒரு வேலை போட்டுக் கொடுக்காமல் அனுப்பி விட்டீர்களே!...''

''நானா வேலை கொடுக்கவில்லை? இண்டர்வியூவில் அவள்தேறவில்லை அவ்வளவுதான்.''

''அதிலெல்லாம் அந்தப் பெண் தேற மாட்டாள் என்பதால்தான் கடிதம் கொடுத்து அனுப்பியிருந்தேன்! உங்களைக் குறை சொல்லவில்லை நான்...

கையிலிருந்த பையைப் பிடுங்கிக்கொண்டு ஓடிவிட்டது. பணத்தைப் பறி கொடுத்த மனிதனுக்கு எப்படி இருக்கும்? அலறிப் புடைத்து அதைத் துரத்திக் கொண்டு ஓடியிருக்கிறார். குரங்கோ அவரது துரத்தலுக்குப் பயந்து மரத்துக்கு மரம் தாவி மலை உச்சிக்கே போய் மறைந்து விட்டது. பணம் கிடைக்கவேயில்லை. அதைப் பறி கொடுத்த அதிர்ச்சியில் அந்த மனிதருக்கு மாரடைப்பு வந்து அதே இடத்தில் உயிரை விட்டு விட்டார். அவரை இழந்த குடும்பம் எப்படி யெல்லாம் துன்பப்பட்டிருக்கும் என்பதை நான் சொல்ல வேண்டிய தில்லை. அவர் மனைவி கூலி வேலை செய்து குழந்தைகளைக் காப்பாற்றினாள். கோமளா தான் பெரிய பெண். இவளை எப்படியோ எஸ். எஸ். எல். சி. வரை படிக்க வைத்து விட்டாள். என்னைப் பார்க்கும்போதெல்லாம் மகளுக்கு ஒரு வேலை வாங்கிக் கொடுக்கும்படி கெஞ்சுவாள்.''

அடுத்த முறை ஏதாவது சான்ஸ் வரும் போது கோமளத்துக்கு அவசியம் ஒரு வேலை போட்டுக் கொடுக்க வேண்டும் என்று கேசவனிடம் வற்புறுத்திச் சொல்லிவிட்டு விடைபெற்றுக்கொண்டார் வெள்ளையப்பன்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு கேசவனும் அவர் மனைவியும் தன்னைத் தேடிக் கொண்டு திடீரென்று நாமக்கல் வந்தது வெள்ளையப்பனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

''அப்படி என்ன அவசரமோ?''


''கோமளம் என்ற ஒரு பெண்ணை என்னிடம் அனுப்பியிருந்தீர்களே, அவள் வீடு இங்குதானே இருக்கிறது? அந்தப் பெண்ணின் தாயாரைப் பார்த்துப் பேச வேண்டும்....'' என்று கூறிய கேசவன், தாமும் தம் மனைவியும் எடுத்திருந்த முடிவை வெளியிட்டார். வெள்ளையப்பனுக்கு ஒரே வியப்பு.

பட்டணத்துப் பணக்காரர்கள் தன் வீட்டைத் தேடி வந்திருப்பதன் நோக்கத்தை வெள்ளையப்பன் வாயிலாக அறிந்த கோமளத்தின் தாயார் அப்படியே சிலையாக நின்றாள்.

''எல்லாவற்றையும் இவங்க விவரமாகச் சொன்னாங்க. என்றால் நம்பவே முடியல்லே. அடுத்த வேளைச் சாப்பாட்டுக்குத் திண்டாடுகிற எங்களுக்கு இப்படி ஒரு அதிர்ஷ்டமா? உங்க பெருந்தன்மைக்கும் தயாள குணத்துக்கும் எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை...கும்பிடறேன்.''

பதறிப்போனார் கேசவன்.

''அடடே! என்னம்மா இது? கும்பிட வேண்டியவங்க நானும் என் குடும்பத்தாருமே தவிர நீங்கள் அல்ல! இந்த முடிவுக்கு நாங்க வந்தது கூட நீங்கள் குறிப்பிட்டது போல் பெருந் தன்மையினாலும் தயாள குணத்தினாலும் அல்ல... உங்கள் கணவர் தன்னையும் அறியாமல் எங்களுக்குச் செய்த உதவியை இதற்கு மேலும் திரும்பச் செலுத்



தாமல் இருந்தால் அவர் ஆவி சும்மா விடாது என்கிற அச்சத்தினால்தான்...''

''என்ன சொல்றீங்க நீங்க?''

''பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னால் உங்கள் கணவர் அழகர் மலையிலே பறிகொடுத்த பணம் வேறு எங்கும் போய்விடவில்லை. என்னிடம்தான் இருக்கிறது.''

''என்ன! உண்மையாகவா?''

''ஆச்சரியப்படாதீர்கள் அம்மா! அந்தச் சம்பவம் நடந்தபோது நானும் மதுரையில் தான் இருந்தேன்.... சொல்ல முடியாத கஷ்டம். பெண்டாட்டி பிள்ளையை வைத்துக் காப்பாற்றக்கூட வக்கில்லை. எடுத்த காரியத்தில் எல்லாம் ஏமாற்றம், தோல்வி, அவமானம்! வாழ்க்கையே வெறுத்து விட்டது. உயிரை மாய்த்துக் கொள்ளலாம் என்று தீர்மானித்து அழகர் மலைக்குப் போனேன். கடைசி கடைசியாக முருகப் பெருமானைத் தரிசித்துவிட்டு, மலையின் ஆள் நடமாட்டமில்லாத சரிவை அடைந்தேன். அப்போது தொபீரென்று என்னவோ ஒன்று என் மேல் விழுந்தது. திடுக்கிட்டுச் சுற்றிலும் பார்த்தேன். 'ஜிப்' வைத்த ஒரு பிளாஸ்டிக் கைப்பை! அதை என் மேல் வீசி எறிந்த செம்மூஞ்சிக் குரங்கு உயரமான மரத்தின் உச்சியில் உட்கார்ந்திருந்தது. பையைத் திறந்து பார்த்தேன். மயக்கமே வரும்போலிருந்தது. கத்தை கத்தையாக நூறு ரூபாய் நோட்டுக்கள்! பையில் முகவரிச் சீட்டோ, கடிதமோ அதற்குரியவர் யார் என்பதைக் கண்டு பிடிப்பதற்கான சிறு தடயமோ கூட இருக்கவில்லை. என்ன செய்வதென்று தோன்றாமல் சுற்றும் முற்றும் பார்த்தேன். ஒருவரும் இல்லை. போலீஸில் ஒப்படைத்துவிடலாமா என்று ஒரு கணம் தோன்றியது. அடுத்த நிமிடம் அதை மாற்றிக் கொண்டேன். பணம் இல்லாத காரணத்தால்தானே உயிரை மாய்த்துக் கொள்ள அங்கு வந்திருந்தேன்! அப்படி இருக்கும்போது கையில் கிடைத்ததை இழக்கலாமா?... பணத்துக்குரியவர் தேடி வந்தாலோ, பேப்பரில் விளம்பரம் கொடுத்தாலோ திருப்பிக் கொடுத்து விடலாம் என்று முடிவு செய்து கொண்டு ஊர் திரும்பினேன். பதினைந்து நாட்கள் வரை காத்திருந்தேன். ஒருவரும் வரவில்லை. அதன் பிறகு அவ்வளவு பணமும் என்னுடையதாகிவிட்டது. மனைவியையும் ஒரே மகனையும் அழைத்துக் கொண்டு சென்னைக்குப் போனேன். ஒரு பிரபல கம்பெனியில் நிறைய 'ஷேர்' எடுத்து அதன் டைரக்டர்களில் ஒருவனாகவும் இருக்கிறேன்.''

ஒரே மூச்சில் இவ்வளவும் கூறி நிறுத்தினர் கேசவன். கோமளமும் அவள் தாயாரும் திறந்த வாய் மூடாமல் கேட்டுக் கொண்டிருந்தனர். வியப்பும் அதிர்ச்சியும் நிறைந்த அமைதி! அதைக் கலைத்துக் கொண்டு மறுபடியும் பேசினார் அவர்.

''வெள்ளையப்பனுடைய சிபாரிசுக் கடிதத்துடன் உங்கள் மகள் வேலை கேட்டு வந்தபோது கொடுத்து உதவ முடியவில்லை என்றால்... அது ஒரு விதத்தில் நல்லதற்காகவே நடந்திருக்கிறது. இல்லாவிட்டால் உங்கள் கணவரைப் பற்றி நான் தெரிந்து கொள்ள முடியாமல் போயிருக்குமே. வெள்ளையப்பன் வாயிலாக நீங்கள் யார் என்பது பின்னால் தெரிய வந்தபோது மனத்துக்கு மிகவும் வேதனையாக இருந்தது. அதை என் மனைவியிடம் சொல்லி, வேலை கொடுக்காமல் போன தற்குப் பரிகாரமாக என்ன செய்யலாம் என்று கேட்டேன். அவள்தான் இந்த யோசனையைச் சொன்னாள்....''

''ஆமாங்க. இரண்டு நாட்களாக அவர் சாப்பிடவேயில்லை. கடைசியில் நான்தான் இந்த யோசனையைச் சொல்லி அவரை இங்கு அழைத்து வந்தேன். எங்கள் அருமை மகன் மோகனுக்கு உங்கள் மகளைக் கல்யாணம் செய்து வைத்துவிடலாம். என்ன சொல்கிறீர்கள்?''

மகிழ்ச்சி மிகுதியால் கோமளத்தின் தாயாரால் பேசமுடியவில்லை. ஆனந்தக் கண்ணீர் வடித்தாள்.

வெள்ளையப்பன் சொன்னார்:

'' 'சம்மதம்' என்று சொல்வதைத் தவிர வேறு என்ன சொல்லப் போறாங்க அவங்க? பெற்றோர்களுடைய லட்சியம் பிள்ளைகளின் நல்வாழ்க்கைதானே!... அடுத்த முகூர்த்தத்திலேயே கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்துவிடுங்க நீங்க....''

''பெரியவங்க நீங்க சொல்வதை மறுத்துப் பேச முடியுமா என்னால்? நல்ல காரியமாக எல்லோரும் இந்த ஏழை வீட்டைத் தேடி வந்திருக்கீங்க. விருந்து வைக்க முடியவில்லை என்றாலும் வீட்டிலிருக்கிற கூழையோ, கஞ்சியையோ கொடுக்க முடியும் என்னாலே. தயவு செய்து வேண்டாமென்று சொல்லாமல் ஒரு வாய் சாப்பிட்டு விட்டுத்தான் போக வேண்டும் நீங்கள்....''

இவ்வாறு சொல்லிக் கோமளத்திடம் தண்ணீர் கொடுத்தனுப்பினாள்.

''சம்பந்தி வீட்டில் கிடைக்கிறது கூழானாலும் அமிர்தம்தான் எங்களுக்கு! நீங்களாகச் சாப்பிடச் சொல்லா விட்டாலும் நாங்களே கேட்பதாகத்தான் இருந்தோம்.'' என்று பளிச்சென்று கூறினாள் கேசவனின் மனைவி.

மணமகன் தேவை!

தலைமுதல் நெடும் ரேஷனில் அரிசி, கோதுமை, சர்க்கரை ஆகியவைகளை வாங்க, வரிசையில் நிற்கும் அளவிற்குப் பொறுமை கொண்ட 'மணமகன்' தேவை!

- எஸ். வி. ராஜசேகர்



கண்ணையும் காதையும் திறந்து வைத்துக் கொண்டிருந்ததில் கிடைத்த தகவல்கள்:



பேல்பூரி

● நண்பர் ஒருவரைச் சந்திக்க (வக்கீல்) மதுரை நீதி மன்றத்துக்குச் சென்றிருந்தேன். நீதி மன்றத்தின் காம்பவுண்டுக்குள் நுழைந்ததும் அமர்ந்துள்ள விநாயகருக்கு வைத்துள்ள பெயர்: ''நீதி விநாயகர்''.

● ● ●

● '81 ஜனவரி, பிப்ரவரி ஆகிய இரண்டு மாதங்களில் மட்டும் இராமநாதபுரம் மாவட்டத்தில் நடந்த கொலைகள் ''32'' வழக்கிற்கு வந்துள்ளதாக (குலை நடுங்குகிறது) நண்பரிடம் பேசியதில் தெரிந்து கொண்டேன் கடந்த சில வருடங்களில் இந்த வருடம்தான் அதிகமான அளவு கொலை வழக்குகள் இந்த இரு மாதங்களில் பதிவாகியுள்ளதாகத் தெரிவித்தார்.

—சக்தி நாயனார்

● ● ●

● கோவையில் உள்ள சென்ட்ரல் தியேட்டரில் வெளியாகும் ஆங்கிலப் படங்களின் கதையைக் கரும்பலகையில் எழுதிவைக்கிறார்கள். கதையைப் புரிந்துகொண்டுபார்க்க வசதியாக இருக்கிறது. —எல். ஜி. சங்கர்

● ● ●

● நங்கநல்லூரில் ஒரு கடை வாசலில் இடைவெளி இல்லாமல் கீழ்க்கண்ட வாக்கியங்கள் எழுதப்பட்டிருந்தன:

"Since Man to Man is
Un Just I donot
Know Whom to Trust
I Have Trusted
Many to My Sorrow
Please Pay Today
And Trust Tomorrow"

—எஸ். மது

● ● ●

● யாரிடமும் இல்லாத ஸ்பெஷாலிட்டி ரஜினிகாந்திடம் இருக்கிறது. இவர் ஆரம்பத்தில் 'பைரவி'யில் ஸ்ரீகாந்துடன் இரண்டாவது கதாநாயகனாக நடித்தார். ஆனால் சிறிது காலத்துக்குள்ளாகவே ஸ்ரீகாந்தை 'இறைவன் கொடுத்த வரத்'தில் இரண்டாவது கதாநாயகனாக்கி விட்டார். ஆறு புஷ்பங்கள், மாங்குடி மைனரில் துணை பாத்திரமாக இருந்த ரஜினி, அதில் கதாநாயகனாக நடித்த விஜயகுமாரை 'காளி'யில் துணைக் கதாநாயகனாக்கினார்.

● ● ●

● சமீபத்தில் எங்கள் ஊரில் நடந்த பூப்பந்து விழாப் போட்டியில், போட்டியை நடத்தும் அம்பயர் பயந்துவிட்டார். ஏனெனில் பங்கு கொண்ட அணிகளில் ஒன்றின் பெயர் ''காட்டேரி'' டீம். நேர விசாரித்ததில் அப்படி ஒரு நெசவாலேயே இருக்கிறதாம்!

● ● ●

● தமிழாசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்த வகுப்பில் ஒரு மாணவன் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான். அதை ஆசிரியரும் கவனித்து விட்டார். உடனே அம்மாணவனை எழுப்பி, மற்ற மாணவர்களை நோக்கி, ''தூங்கிக் கொண்டிருக்கும் இம்மாணவருக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்'' எனக் கேட்டார். அதற்கு ஒரு குறும்புக்கார மாணவன், ''ஐயா! நீங்கள் நடத்திய பாடத்தையே மறுபடியும் நடத்துங்கள்! அதுவே போதும்!'' என்றானே பார்க்கலாம். ஒரே அப்ளாஸ். —எம். ரமணி

● ● ●

● ஞானசம்பந்தர் புகழ்ந்து பாடிய ''திருவலிதாயம்'' எனும் அழகிய பெயர்கொண்ட ஊர் இன்று ''பாடி'' என வழங்கப்படுகிறது!

● ● ●

● நகராட்சி ஏடுகளில் ''திருவள்ளுவர் தெரு'' எனப் பெயர் இருந்தும், செங்கோட்டையில் (நெல்லை மாவட்டம்) பொதுமக்களும் பஸ் ஊழியர்களும் ஏகோபித்து வழங்கும் பரபரப்பான ஒரு பஸ் ஸ்டாப்பின் பெயர்: ''வம்பளந்தான் முக்கு''.

● ● ●


● வட ஆர்க்காடு வேலூர் அருகில் ஒரு பஸ் ஸ்டாப்பின் பெயர்: ''டாக்டர் வாட்ச்மேன் பங்களா!''

● ● ●

● சென்னைக்கும் திருப்பதிக்குமிடையே ஓடும் ஆந்திரா போக்குவரத்து பஸ்ஸில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் பெயிண்ட் அடையாளம் வைத்துள்ளனர்.

சர்ச்சைக்குரிய அரை டிக்கட் நபர்களை அவ்விடத்தில் நிற்கவைத்து அதில் குறிப்பிட்ட அளவுக்கு மேல் உயரமான நபர்களுக்கு வயதைப் பற்றிக் கவலைப்படாமல் முழு டிக்கட் வசூலிக்கப்படுகிறது.

—கே. வி. கோபால்



கர்ப்பமும் குழந்தைப் பிறப்பும்

சமீபத்தில் சென்னையில் வெளியாகியுள்ள படம் 'கர்ப்பமும், குழந்தை பிறப்பும் (Pregnancy and child Birth) தியேட்டரில் இந்தப் படம் பார்த்துவிட்டுத் திரும்பும்போது ஒரு சிலரைச் சந்தித்து, 'இந்தப் படத்துக்கு எதற்காக வந்தீர்கள்? இந்தப் படத்திலிருந்து புதிதாக ஏதாவது தெரிந்து கொண்டீர்களா? இந்தப் படம் பற்றி உங்கள் கருத்து என்ன? என்று கேட்டபோது அவர்கள் சொன்ன பதில்கள்:

ரூ. 4.50 டிக்கட்டில், தம் மனைவியுடன் படம் பார்த்த திரு ஜி. ரமேஷ் (அயனாவரம்)

''எங்களுக்குத் திருமணமாகி, இப்போது என் மனைவி தாயாகவிருக்கிறாள். இந்தப் படம் இளம் தம்பதிகள் பார்க்க வேண்டிய படம் என்றார்கள். வந்தோம், பார்த்தோம். ரொம்பவும் பிடித்தது. தாயாகப் போகிற பெண் எப்படி யெல்லாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என்றும், குழந்தை பிறக்கையில் அவள் படும் கஷ்டங்களையும் மிக அழகாகக் காட்டியிருக்கிறார்கள். மணம் செய்துகொள்ளப் போகும் ஆண்கள், பெண்கள், மற்றும் இளம் தம்பதிகள் கண்டிப்பாகப் பார்க்க வேண்டிய படம் இது என நான் நினைக்கிறேன்.''

ரூ. 2.90 டிக்கட்டில் நண்பர்களுடன் படம் பார்த்த திரு நரேந்திரன் (கல்லூரி மாணவர் நுங்கம்பாக்கம்.)

''என்னதான் சொல்லி இருக்கிறார்கள் என்று பார்க்கலாமே என்று ஓர் ஆவல். அதே சமயம் 'டாக்குமெண்டரி' படமாயிருந்து அறுத்தெடுத்துவிடுமோ என்ற பயம். கடைசியில் படம் பார்த்தேன். It is an educative movie தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் இருக்கின்றன. எதையுமே கொச்சைப்படுத்தாமல் கதை போலச் சொல்லியிருப்பது குறிப்பிடத்தக்க அம்சம். காமிராவைப் பற்றி ஒரு வார்த்தை—அருமை. ஒவ்வொரு மாணவனும், மாணவியும் கண்டிப்பாகப் பார்க்க வேண்டிய படம் இது. கல்லூரிகளில் திரையிடவும் ஏற்பாடு செய்யலாம்.

ரூ. 2.90 டிக்கட்டில் சிநேகிதிகளுடன் படம் பார்த்த மிஸ் நந்தினி: (மருத்துவக் கல்லூரி மாணவி, சென்னை !)

''ப்ரெக்னன்ஸி, குழந்தை பிறப்பு பற்றிய படம். அதனால்தான் படம் பார்க்க வந்தேன். இந்தப் படத்திலிருந்து புதிதாக எதையோ தெரிந்து கொண்டேன் என்று சொல்ல முடியாது. கல்லூரியிலேயே, பாடப் புத்தகங்களிலும், டாக்குமெண்டரிகளிலும், இதைவிட ரொம்ப விளக்கமாகப் படித்திருக்கிறோம், பார்த்திருக்கிறோம். கர்ப்பம், குழந்தைப் பிறப்பு இரண்டு பற்றி மட்டும் தான் சொல்லி இருக்கிறார்கள். ஆண், பெண் அனாடமி பற்றியும் சொல்லி இருக்கலாம். குடும்பக் கட்டுப்பாடு – இட் ஈஸ் ஆல்ஸோ ஈக்வலி இம்பார்ட்டெண்ட். அதுபற்றியும் சேர்த்திருக்கலாம். அப்போது தான் படம் முழுமையானதாக இருக்கும் என்பது என் அபிப்பிராயம்.

ரூ. 2.00 டிக்கெட்டில் படம் பார்த்த ராஜு (சைதாப்பேட்டை)

''போஸ்டர்கள் ஒரு மாதிரியாக இருந்ததால் சில காட்சிகளை எதிர்பார்த்துப் படத்துக்கு வந்தேன். டிக்கட் கிடைக்கவில்லை. பிளாக்கில் வாங்கினேன். நான் எதிர்பார்த்த காட்சிகளும் இருந்தன. ஆனால் அதே சமயம் கர்ப்பிணிப் பெண்களை எவ்வளவு பத்திரமாப் பார்த்துக்கணுமுன்னும் சொல்லியிருக்காங்க. முழுக்க முழுக்க இங்கிலீஷ்ல பேசறதைப் புரிஞ்சுக்க முடியாட்டிப் போனாக்கூட, என்ன சொல்ல வர்றாங்கங்கிறதை ஓரளவு தெரிஞ்சுக்கலாம். மொத்தத்தில் கொடுத்த காசு சேரிக்கும்.''

பேட்டி: எஸ், சந்திரமௌலி

கோடை வாழ்க!

ஒரு மூட்டைப்பூச்சி வயிறு முட்ட இரத்தத்தைக் குடித்தால், அது 22 நாட்களுக்குப் போதுமானது.

கோடை காலத்தின் வெப்பம் தாங்காமலும் வியர்வையான உடம்பில் ஏறி ரத்தம் குடிக்க முடியாததாலும், பல்லாயிரக் கணக்கானவை இறந்து போகின்றன. எனவே கோடை காலத்தில் மூட்டைப்பூச்சி மருந்தைப் பயன்படுத்தி விட்டைச் சுத்தமாக வைத்துக்கொண்டால் பிறகு மூட்டைத் தொல்லையே வராது. -தேனப்பன்




ஆரோக்கியம், ஆனந்தம், ஒன்றுக்கொன்று ஆதாரம்
போர்ன்விடா பருகுங்கள். உங்கள் வாழ்வில் ஆரோக்கியமும் ஆனந்தமும் மலரச்செய்யுங்கள். அன்றுடம் உங்கள் குடும்பத்தினருக்கு இன்சுவைமிக்க போர்ன்விடா வழங்குங்கள். போர்ன்விடாவில் கோகோ, மால்ட், பால் மற்றும் சர்க்கரையின் நற்பண்புகள் நிறைந்துள்ளன. நூறு ஆண்டுகளுக்கும் மேலாக உணவுப்பான நிபுணர்கள் காட்பரி தயாரித்து அளிப்பது.
காட்பரிஸ்
போர்ன்விடா
அளிப்பது அத்தனையும் நலம்
Cadbury's
Bournvita
The tastiest food drink
இப்போது! பெரும் சேமிப்பு
ஒரு முழு ரூபாய்
ரீ:பில் பேக்குடன்
OBM 6450 TM

"நீ யார்?''

முதல் வகுப்புப் பெட்டியை விட்டுஇறங்கிய சாந்தி நிமிர்ந்தபோது அங்கே கௌரி இருந்தாள். ''கௌரிதானே நீ? என்னடி இப்படி மாறிட்டே?''

''உன் கேள்வி நியாயமானதுதான். எத்தனே வருஷம் கழித்துச் சந்திக்கிறோம். கன்னிப் பெண்ணாகப் பார்த்ததுதான். இப்ப என்னைப் பதினெட்டு வயசு மகனோட பார்க்கிறே.''

பக்கத்தில் நின்ற பையனின் முகத்தில் கௌரிஇருந்தாள். பார்வையிலேயே'யார்?' என்று அம்மாவைக் கேட்டான்.

''என் கிளாஸ்மேட். அப்ப பேர் மிஸ் சாந்தி. இப்ப என்னவோ தெரியாது.''

''இப்பவும் அதேதான்.''

வியப்பாகப் பார்த்தாள் கௌரி.

பெங்களூர் ஸிட்டி ரயில் நிலையம் அலட்டியப்படுத்த – பிருந்தாவன் எக்ஸ்பிரஸில் ஏறவேண்டியவர்கள், இறங்க வேண்டியவர்களுக்காகக் காத்து நிற்கிறார்கள்.

கூட்டம் நெருக்கித் தள்ளியது.

''கொஞ்சம் இப்படி வந்துடுடி சாந்தி. கூட்டம் கூழாக்கிடும். ஆமாம்! நீ எங்கே இருக்கே? என்ன பண்றே?''

''மெட்ராஸ்லே ஒரு எக்ஸ்போர்ட் கம்பெனியிலே வேலை பார்க்கிறேன். கை நிறைய காசு வருது. ஆனா மனசுதான் சரியில்லே.''

''சரி விடு. இங்கே என்ன விஷயமா வந்தே. யாரைப் பார்க்க வந்தே?''

''தற்கொலை செய்துக்க.''

மெதுவாக அவள் சொன்னதன் அர்த்தம் உறைக்க நேரமாயிற்று. கௌரிக்கு.


''அது சரி.'' சிரித்தாள். ''ஏன்டி தற்கொலைக்கு மெட்ராஸிலே வசதியில்லையாக்கும்! இங்கே வந்துட்டே?''

''அதுக்கு முன்னலே நான் தீர்க்க வேண்டிய கணக்கு ஒன்று இந்த ஊரிலே இருக்கு''

''விலாசம் தெரியுமா? இதுக்கு முன்னலே போயிருக்கியா?''

''இடம் தெரியாது. ஆனல் விலாசம் தெரியும். ராஜாஜி நகர்.''

''அது சரி. அந்த ஏரியாவிலே விலாசத்தைக் கண்டு பிடிக்கிறது அவ்வளவு சுலபமில்லே. ஒண்ணு செய்யலாம். மகனே அனுப்பிவிட்ட பிறகு என் கூடவே ஜெய் நகருக்கு வா. என் வீட்டிலே குளிக்கச்



பிரியமான தோழிக்கு.....

ராஜேந்திரகுமார்

சாப்பிட்டுக் கொஞ்சம் ஓய்வு எடு. சாயங்காலம் ரெண்டு பேருமாக ராஜாஜி நகர் போய்த் தேடலாம் என்ன?''

''மம்மீ....'' ஜன்னலைத் திறந்து கையாட்டினான் அவன். ''இங்கிருக்கேன்.''

''வா.'' அந்த ஜன்னலை நோக்கி அவள் நகர—

'மறுப்போமா?' என்ற நினைப்பை மாற்றிக்கொண்டாள் சாந்தி.

''தற்கொலை என்கிறது மிகப் பெரிய விஷயம். தகுந்த காரணம் இருக்கும்'' காரை ஓட்டியவாறு கௌரி கேட்டாள். ''அதை என்ன ஏதுன்னு விசாரிக்கிறது நாகரிகமில்லே. ஆனாலும் ஒரு ஆர்வம். அது பைத்தியக்காரத்தனமாகவும் இருக்கலாம். இருந்தாலும் கேட்கிறேன். என்னடி விஷயம்? ஏன் இந்த முடிவுக்கு வந்தே?''

''நான் ஏமாந்து போயிட்டேண்டி.''

''அது சரி. ஏமாந்தவங்க எல்லோரும் தற்கொலை செய்துக்கணும்னு ஊரிலே ஜனத்தொகை எப்பவோ ஜீரோ ஆகியிருக்கும். யாராவது ஏதாவது விஷயத்திலே ஏமாந்து



தான் போயிருப்பாங்க. அதைவிடு. உன் ஏமாற்றம் கனிசமாகத்தான் இருக்கணும். இல்லேன்னா இப்படி ஒரு முடிவுக்கு வந்திருக்க மாட்டே. சொல்லுடி. காதல் தோல்வியா?''

''நான் — நான் அவரை நம்பினேண்டி.''

''எதுவரை? மனசை மட்டும் ஒப்படைச்சியா? அல்லது உடம்பையே—''

தலை குனிந்தாள்.

''நீ பதில் சொல்ல வேண்டாம். எனக்கே புரிஞ்சு போச்சு. ஆக இரண்டாவது தப்பையும் நீயே பண்ணி இருக்கே.''

''கௌரி....'' அழுதாள். ''ஏண்டி என்னையே குற்றம் சாட்டறே. நடந்த தப்பிலே அவருக்கு எந்தப் பொறுப்பும் இல்லையா?''

''பழைய பழமொழிதான் உனக்குப் பொருந்தும். 'முள்ளு மேலே சேலை பட்டாலும் சேலை மேலே முள்ளு பட்டாலும்— நஷ்டம் நமக்குத்தாண்டி.''

ஜெய்நகர் எக்ஸ்டென்ஷனில் வீட்டுக்கு முன்னால் கார் கிரீச்சிட்டு நின்றது.

''கார் ஓட்டறதிலேயும் பிரேக் போடறதிலேயும் நல்ல லாகவம் இருக்குடி உனக்கு.''

''மனசிலே தன்னம்பிக்கை இருந்துட்டா கார் ஓட்டறதிலே மட்டுமில்லே சொந்த வாழ்க்கையை நடத்தறதிலேயும் லாகவம் ரொம்ப அலட்சியமாக வரும். ஓட்டறதிலே இருக்கிற சாமர்த்தியம் அவசியம் ஏற்பட்டா பிரேக் போடறதிலேயும் இருக்கணும்.... என்ன நின்னுட்டே? உள்ளே வாடி. இது உன் வீடு மாதிரி.''

ஹால் துடைத்து விட்டாற்போல் பளிச்சென்றிருந்தது. சலவை மணம் வீசும் சோபா உறைகள் இப்போதுதான் துடைத்தாற் போல் பளீரென்ற குட்டை மேஜை மீது அடுக்கி வைத்த புத்தகங்கள். மூன்று கோணம் காட்டும் நிலைக்கண்ணாடி அருகே போட்டோ.

எடுத்து நீட்டினாள் கௌரி. ''கல்யாணத்துக்குத்தான் வரலே. கல்யாணப் போட்டோவையாவது பாரு — என்னடி இவ்வளவு தள்ளி வைச்சுப் பார்க்கிறே? சாலேஸ் வர கேஸா?''

''எட்டப் பார்வை.''

''சரிசரி. குளியலறை அங்கே இருக்கு. குளி. அதுக்குள்ளே சமையலைச் சூடு பண்ணிடறேன்.''

''எதுக்குடி சிரமப்படறே? ஆறிப் போனதைத் தின்னு பழக்கப்பட்டவ தானே?''

''எப்படியும் எனக்காகச் சூடாக்கத்தானே. வேண்டும்? அவர் உத்தரவு போட்டிருக்கார். எதையும் சூடா சாப்பிடு. இல்லேன்னுசதை விழும்னு.''

''பரவாயில்லையே. சுவாரஸ்யமானவராகத்தான் இருப்பார் போலிருக்கு.''

''சிரிக்கச் சிரிக்கப் பேசுவார்டி. நான் கொஞ்சம் வாடினாலும் அவருக்குப் பொறுக்காது. இன்னைக்குச் சனிக்கிழமை இல்லையா? இன்னிக்கு ராத்திரி மெயில்லே புறப்பட்டு வந்து நாளைக்கு ராத்திரி மெயில்லே புறப்பட்டுப் போயிடுவார். வாரத்திலே ஒரு நாள் என்னைப் பார்க்கலேன்னு அவருக்கு மெட்ராஸே நரகமாயிடும்.''

பெட்டியிலிருந்து துவாலையை எடுத்த சாந்தி நிமிர்ந்தாள். ''மெட்ராஸிலா இருக்கார்?''

''ஏண்டி? உனக்குத் துரோகம் செய்தவர் இவரா இருக்குமான்னு நினைக்கிறியா?''

''ஸில்லி'' துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு குளியலறைக்குப் போனாள்.

''சாப்பிடச்சே என்னடி யோசனை?'' கௌரி கேட்டாள். ''எப்படித் தற்கொலை செய்துகொள்றதுன்னு? கவலைப்படாதே. நான் சொல்லித் தரேன். செய்து பழக்க மில்லேன்னாலும் படிச்ச அனுபவமுண்டு.''

நிமிர்ந்து பார்த்தாள் சாந்தி.

''என்ன பார்க்கிறே? நிஜமாச் சொல்லித் தருவேன். ஆனா ஒண்ணு, சொல்லித் தந்த தோஷம் என் வீட்டுக்குள்ளேயே முயன்று பார்க்காதே. என் கணவருக்கு ரொம்பப் பயந்த சுபாவம். துர் மரணம் நடந்த வீடுன்னா உள்ளேயே வர மாட்டார். என்னை யும் இருக்க விடமாட்டார்.''

''கொடுத்து வைச்சவடி நீ.''

''எல்லாம் இதோட மகிமை.'' மஞ்சள் கயிற்றை எடுத்துக் காட்டினாள். ''காலா காலத்திலே நீயும் இது மாதிரி ஒண்ணைக் கட்டிக்கிட்டு இருந்தா இன்னைக்கு இந்த முடிவுக்கு வந்திருக்க மாட்டே.'' ஏறிட்டுப் பார்த்தாள்.

''சும்மா சாதத்தைப் பிசையாதே சாப் பிடு.''

சாந்தி சாப்பிடத் துவங்கினாள்.

''எதனாலே இப்படி ஒரு முடிவுக்கு வந்தே சாந்தி? ஏமாந்த கதையைத்தான் கேட் கிறேன்.''

''படிக்கறச்சேயே அப்பா அம்மாவை இழந்துட்ட கதை உனக்குத் தெரியும். சித் தப்பா வீட்டிலே இருந்து படிச்சேன். அந்த உரிமை மூணாந் தாரமா என்னைக் கொடுக் கப் பார்த்தார். சரியாச் சொன்னா விற்கப் பார்த்தார். பிடிவாதமா மறுத்துட்டேன்.''

''அப்புறம்?''

''ஒரு வேலை தேடிக்கிட்டு ஹாஸ்டல்லே தங்கினேன். தனிமை என்னை வாட்டிச்சு. மூணு வருஷத்துக்கு முன்னாலே நான் அவ ரைச் சந்திச்சேன். — ஒரு விசித்திரமான சூழ்நிலையிலே—''

''சஸ்பென்ஸிலே நிறுத்தாதேடி. சுவா ரஸ்யமாத்தானிருக்கு. சொல்லு.''

''எனக்கு மூணாவது மாடியிலே ஆபீஸ். அவருக்கு அஞ்சாவது மாடி. ஒரு நாள் ரெண்டு பேரும் லிப்டிலே போய்க்கிட்டிருக் கிறப்போ இரண்டாவது மாடிக்கும் மூணா வது மாடிக்கும் நடுவே லிஃப்ட் நின்னு போச்சு. நான் பயந்து போய்க் கூச்சல் போட்டேன். அவர் என்னை அமைதிப் படுத்தினார். மூச்சு முட்ட ரெண்டு மணி நேரம் நரகத்திலே இருந்தோம். மத்தவங்க லிஃப்டை உடைச்சுக் காப்பாத்தினாங்க. ஆனா அவருடைய அந்த அமைதியான பேச்சும் அந்தப் பயமே இல்லாத கண்களும் — மாறாத சிரிப்பும் என்னை ரொம்பக் கவர்ந்துடுச்சி.''

''அப்புறம்?''

''அப்புறம் தினம் லிஃப்ட் ஏறும்போ தெல்லாம் என்னையும் மீறி அவரைத் தேட ஆரம்பிச்சேன். அப்புறம் அவரைத் தேடி அவர் ஆபீசுக்கே போக ஆரம்பிச்சேன். எந்த ஆண் பிள்ளைகிட்டேயும் நான் உண ராத தனித் தன்மையை — ஒரு அன்பை— பண்பை அவர் கிட்டே உணர முடிஞ்சுது. அதை மறக்க என்னாலே முடியலே.''

''உனக்கு எதிலேயும் அவசரம். சாப்பிடற திலே — காதலிக்கிறதிலே — சாகிறதிலே.''

''நான் என்ன செய்யட்டும்டி? என்னாலே ஏமாற்றத்தைத் தாங்க முடியல்லியே.'' விம்மினாள். ''கூப்பிட்ட எல்லா இடத்துக் கெல்லாம் வந்தாரே — சினிமா —பீச் — நாடகம்—''

''பின்னே ஏண்டி இந்த முடிவுக்கு வந்தே?''

''நானும் அவரும் பழகறது அவங்க ஆபீஸ்லே ஒரு சின்னக் குழப்பத்தை ஏற் படுத்தி விட்டது. மத்தவங்க பேச்சு எங்கே அவர் மனைவிகாதுக்கு எட்டுமோன்னு பயந்து என்னோட பழகறதையே விட்டுட்டார். மெல்ல அவர் விலக ஆரம்பிச்சதும் துடிச் சுப் போயிட்டேண்டி.''

''எல்லாம் இருக்கட்டும். இப்ப பெங் களூர் வந்திருக்கயே. யாரைப் பார்க்கப் போறே? என்ன பண்ணப் போறே?''

''அவர் மனைவி இங்கேதான் இருக்கா. அவள் கிட்டே நானே விஷயத்தைச் சொல்லிட்டு அவரோட பழக அனுமதி கேட்கப் போறேன்.''

''அவ மறுத்துட்டா?''

''என்னை நிரந்தரமா முடிச்சுக்கப் போறேன். ராத்திரி மெயில்லே ஸ்லீப்பர் புக் பண்ணி இருக்கேன். ஏறிப் படுத் தேன்னா நான் தின்ன தூக்க மாத்திரைகள் மெட்ராஸ் போய்ச் சேருகிறதுக்குள்ளே என்னை நிரந்தரமாத் தூங்க வைச்சுடும்!''

கார் போய்க் கொண்டிருந்தது.

''இதான் ராஜாஜி நகர். விலாசத்தைச் சொல்லு.''

''மிஸஸ் வைதேகி ராஜாராமன்.''

அதிர்ச்சியுடன் திரும்பிப் பார்த்தாள். கௌரி. ''விலாசம்?''

சொன்னாள்.

கொஞ்ச நேரம் உதட்டைக் கடித்தவாறு இருந்த கௌரி நவ்ரங் தியேட்டர் எதிரே



ரேடியத்தைக் கண்டுபிடித்து நோபல் பரிசு பெற்ற மேடம் கியூரி அம்மையாரின் கணவர், 1906ம் ஆண்டு ஏப்ரல் 19ம் தேதியன்று பாரிஸ் நகரின் தெருவில் நடந்து சென்று கொண்டிருந்தபோது அவர்மீது பார வண்டி ஒன்று ஏறி அவ்விடத்திலேயே அவர் இறந்து போனார். மேடம் கியூரி மனமுடைந்து பிரமை பிடித்தவள் போல் ஆனாள். இருந்தாலும் மனத்தைத் தேற்றிக்கொண்டு ஆராய்ச்சியில் ஈடுபடுவதே தம்கணவருக்குத் திருப்தி அளிக்கும் செயல் என உறுதி யுடன் மீண்டும் ஆராய்ச்சியில் ஈடுபட்டாள். பகல் முழுவதும் ஆராய்ச்சி களை நடத்துவாள். இரவில் தனியாக உட்கார்ந்து தன் கணவரை எண்ணி, பகலில் செய்த வேலைகள் எல்லாவற்றையும் பற்றி அவருக்கு விவரமாகக் கடிதம் எழுதுவாள். பாசத்தின் உச்ச நிலை இது.

- பி. நாராயணன்



பணத்தை ஏன் விரயமாக்குகிறீர்கள்
எவ்விதத்திலும் சிறப்பில்லாத 'விலையுயர்ந்த'
துலக்கும் பவுடரை வாங்கி
வாங்குவீர்
பிஜ்
மற்றதைவிட விலையில் 25% குறைவு
இருப்பினும் நன்றாகவே துலக்குகிறது
உங்களுடைய சிறந்த பீங்கான், சமையலறைப் பாத்திரங்களுக்கு நம்பகமானது
5-refill pack
BIZ
multipurpose
CLEANING POWDER
WITH SUPER DETERGENT
MADE IN INDIA
BIZ
CLEANING POWDER
கோத்ரெஜ்
தயாரிப்பு

அரை வட்டம் போட்டு வண்டியைத் திருப்பியதும் சாந்தி புரியாமல் கேட்டாள். ''என்ன திரும்பிட்டே?''

''அவங்க இப்ப ராஜாஜி நகர்லே இல்லே''

''உனக்கெப்படித் தெரியும்?... ஆமா... உனக்கேன் இப்படி வியர்க்கிறது?''

''நான்தான் அது'' என்றது சாந்தியை மிகவும் பாதித்தது.

''என்னடி சொல்றே?... கௌரி!''

''நோ. அது என் பிறந்த வீட்டுப் பெயர். எங்க கன்னட கம்யூனிட்டிலே கல்யாணத் தப்ப புருஷன் பெயருக்கேத்த மாதிரி மாத்திடுவாங்க. அந்த வகையிலே இப்ப நான் வைதேஹி ராஜாராமன்.'' கௌரி லேசாக விம்மினாள். ''ஏண்டி! அப்ப இவ்வளவு நேரமும் சொன்னது என் கணவரையா? போட்டோவைப் பார்த்தப்போ கூடவா உனக்குத் தெரியலே— எப்படித் தெரியும்? ஏற்கனவே சாலேஸ்வரக் கண்ணு. படமும் எடுத்துப் பதினெட்டு வருஷம் பழைசு.''

''என்னை மன்னிச்சுடுடி கௌரி.''

''உன்னை மன்னிச்சாலும் அவரை மன்னிக்க மாட்டேண்டி.'' காரை ஓரமாக நிறுத்தி அவள் கைப் பையைப் பிடுங்கினாள். ''தூக்க மாத்திரை இதிலேதான் இருக்கா?'' மாத்திரைப் பட்டையை உருவினாள்.

''கௌரி அதைக் கொடு.''

''உன் நோஞ்சான் உடம்புக்கு ஆறு போதும்.'' பாதியாகக் கிழித்தாள். ''மீதி ஆறு எனக்கு.''

விதிர்த்தாள்.

''ஆமாண்டி. என் கணவர் எனக்கு மட்டும்தான் சொந்தம்னு நினைச்சேனே. ஆனா அவர் பேச்சும் பார்வையும் இன்னொரு பெண் சிநேகிதத்தைச் சம்பாதிக்கக் கொடுத்திருக்குங்கிறதினைப்பேஎன்னைக் கொல்லுது.'' விம்மினாள். ''அவர்எனக்குத் துரோகம் செய்திருக்கார். காலேலே அவர் வர்றச்சே அவர் வீட்டிலே இரண்டு பொணம் வரவேற்கட்டும்.''

''வேணாண்டி கௌரி!''

''நான் பொஸஸிவ் டைப். எனக்கு உரிமைப்பட்ட பொருளை யாரோடும் பங்கு போட்டுக்க மாட்டேன். உனக்கு அக்கறை இருந்தா நீ உயிரோடு இரு.''

''முடியாது கௌரி. நீ இல்லாமப் போயிட்டா அவர் முகத்திலே சிரிப்பையே பார்க்க முடியாது. அப்படி ஒரு வாழ்க்கை எனக்குத் தேவையில்லே. கொடுடி அதை.''

மாத்திரைப் பட்டையைப் பிடுங்கி எறிய அது காணாமல் போயிற்று.

''நடந்ததை மறந்துடறேன். இனிமே அவரைச் சந்திக்க மாட்டேன். சத்தியமா சொல்றேண்டி. நினைச்சுக்கூடப் பார்க்க மாட்டேன்.''

அவள் இரவு மெயிலில் கிளம்பினாள்.

''அடிக்கடி லெட்டர் போடு. தோழிக்குக் கடிதம் எழுதினாலே மனச் சுமை குறையும். ஏமாற்றத்தைத் தாங்கச் சக்தி பிறக்கும்.''

''சரிடி.''



உயரமில்லையா!
பரவாயில்லை!
ஹை ஹீல்ஸ் இருக்கிறது!
ஓடமுடியாதா!
பரவாயில்லை!
உனக்காக 'பிலிம்' ஓடும்!
சண்டை போடத் தெரியாதா!
பரவாயில்லை!
உனக்காக 'டூப்' சண்டைபோடும்!
பேச்சு சரிவர வராதா!
பரவாயில்லை!
உனக்காக 'டப்பிங்' பேசும்!
உடல் பருத்திருக்கிறதா!
பரவாயில்லை!
காமிரா 'லாங் ஷார்ட்' எடுக்கும்!
நடிக்கத் தெரியாதா!
பரவாயில்லை!
டைரக்டர் சொல்லித் தருவார்!

—மதிவண்ணன்

''**வா**ங்க.''

விடிய விடிய வீட்டுக்குள் வந்த கணவனைப் பார்த்துச் சிரித்தாள் கௌரி. ''வாங்க மிஸ்டர் ராஜாராம்.''

சிரிப்புடன் கண்ணாடியைக் கழற்றினார் அவர். ''என்ன கௌரி? பேரை மாத்திட்டே?''

''நான் கௌரி இல்லே. வைதேகி ராஜாராம்.''

''போன வாரம் கூட நல்லாத்தானே இருந்தே? என்ன ஆச்சு என் கௌரிக்கு?''

சிரித்தாள். ''சமயத்திலே பெயர் மாற்றம் கூட ஒரு உயிரைக் காப்பாற்றுதுங்க.''

புரியாமல் பார்த்தார்.

''நேத்து பையனை ரயிலேத்த ஸ்டேஷனுக்குப் போனேனா — அங்கே என் பழைய சிநேகிதி சாந்தியைப் பார்த்தேனா...''

கதை சொல்ல ஆரம்பித்தாள் கௌரி.

நாராயணசாமி நீக்கம் பற்றி எதிரொலி





சென்னை டி.வி.யில் நேயர்கள் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் 'எதிரொலி' நிகழ்ச்சி ரொம்பப் பிரசித்தி. அதைவிடப் பிரசித்தி அதில் பதில் சொல்லும் நாராயணசாமி. நேயர்களால் 'தாடிக்காரர்' "மழுப்பல் ஆசாமி' என்று செல்லமாக வர்ணிக்கப்படும் இவர் ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் இந்த நிகழ்ச்சியிலிருந்து நீக்கப்பட்டு விட்டார்.

இதன் உச்சக்கட்டம் சென்ற ஒன்பதாந் தேதி நடந்தது. எதிரொலி நிகழ்ச்சி நடத்திய வெ. நல்லதம்பி ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது "டி.வி யில் நிகழ்ச்சிதான் முக்கியம், அதை நடத்தும் நபர் அல்ல" என்றார்!

இதைத் தொடர்ந்து பலரைச் சந்தித்தோம்.

நீதிபதி மோகன்

நாராயணசாமியை நீக்கியது என்னைப்பொறுத்தவரை சரியில்லை என்றே சொல்வேன். அவரது 'எதிரொலி' பதில்கள் கூர்மையாகவும், அதே நேரத்தில் சுவையாகவும் இருக்கும். ஆனால் யார் மனத்தையும் புண்படுத்தாது. மக்களது கிண்டலான கேள்விகளுக்குக் கூட. கோபப்படாமல் பதிலளிப்பார்.

எழுத்தாளர் லக்ஷ்மி

எதிரொலியென்றாலே நாராயணசாமி தவிர யாரையும் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. என் வீட்டில்கூட நான் ஏதாவது தட்டிக்கழிக்கப் பார்த்தால், குழந்தைகள் 'நாராயணசாமி மாதிரி மழுப்புகிறாயே' என்று என்னைக் கிண்டல் செய்வார்கள். டி.வி. யில் நடந்துவிட்ட சில தவறுகளை நேயர்கள் சுட்டிக் காட்டும்போது நாராயணசாமி சாமர்த்தியமாகச் சமாளிப்பார். அப்ரஹாம் லிங்கன் தாடி மாதிரி, இவர் தாடியும் இவருக்கு ஒரு இமேஜ் கொடுத்து வந்தது.

நடிகர் முத்துராமன்

மாற்றங்கள் அவசியம்தான். அதனால் மக்களிடையே · அந்த மாற்றத்துக்கு வரவேற்பு இருக்க வேண்டுமல்லவா? ஒரு நிகழ்ச்சியை எல்லோரும் ஒப்புக்கொள்ளும்படி நல்ல முறையில் அமைத்துக் கொடுத்துக் கொண்டிருந்தவரை மாற்றும்போது அவரைவிடச் சிறப்பான முறையில் அதனைச் செய்பவராக இருக்க வேண்டும். இல்லையென்றால் ஒப்புக்கொள்வது கடினம்.

'அபஸ்வரம்' ராம்ஜி

ஒவ்வொரு நாளும் சமையலில் வெரைட்டி வேண்டும். ஒரு நாள் கத்தரிக்காய், மறுநாள் வெண்டைக்காய்மாதிரி மாறுதல் இருக்கலாம். ஆனால் டி. வி.க்காரர்கள் சமையல்காரரையே மாற்றி விட்டார்கள்.

மாணவி ஷோபனா

'உஷ்....குழந்தை தூங்குகிறது' என்ற நாடகத்தில் நடித்த எல்லோரையும் பல கடிதங்கள் பாராட்டியபோது, அதில் நடித்த சின்னக் குழந்தையை இவர் பாராட்டி, அது நடித்த பகுதியை மீண்டும் திரையிட்டது இதயத்தை நெகிழ்வித்தது.

வீணை பாலசந்தர்


இவர் பதில் எந்த நபரையும் துன்புறுத்தாது. அழகிய தோரணையோடு சுவையாகச் சொல்வார். அதில் இலக்கியச் சுவையோடு அவரது நுண் அறிவும் வெளிப்படும். டிவி யைப் பொருத்த மட்டில் விஷயங்களைப் போல அதைச் சொல்லும் நபரும் ரொம்ப முக்கியம்.

தொலைக்காட்சி காண்போர் சங்க நிர்வாக உறுப்பினர் மூர்த்தி

நல்லதம்பி சொன்னது சரியென்றால் யார் வேண்டுமானால் செய்தி வாசிக்கலாமே! செய்தி வாசிப்பவருக்கு நல்ல தோற்றம், தெளிவான குரல், உச்சரிப்பு முதலியன தேவை என்று டிவி நிலையம் ஏன் கருதுகிறது? தாடிக்காரரைத் திரும்பவும் கொண்டு வாருங்கள்! அவரைப் போல வேறு யாரால் டி.வி. தவறுகளைப் பூசி மெழுக முடியும்?

பேட்டி : சிக்கி

மோகன், லக்ஷ்மி, ராம்ஜி, முத்துராமன் ஷோபனா, வீணை பாலசந்தர், ஆர். கே. மூர்த்தி


கன்னத்தில் என்னம்மா சிவப்பு!
அது, சின்னக் கொசு கடிச்ச தடிப்பு!
கொசுக்களைத் 'தலை தெறிக்க' ஓடவைக்கும் டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்.
ஐயா...சாமி...தயவு செஞ்சு ஒண்ணே ஒண்ணு, டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள். பட்டினியாக்கூட இருப்பேன், ஆனா கொசுக்-கடியை மட்டும் தாங்க முடியலே...
நல்லதைச் செய்வீர்............வாங்குவீர் டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
விபத்து இன்ஷூரன்ஸா? முதல்ல, கொசுக்கடிக்கு ஏதாவது இன்ஷூரன்ஸ் இருக்கா?
இன்ஷூரன்ஸ்
கொசுத் தடை இன்ஷூரன்ஸ் டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
கொளுத்துவீர் டார்டாய்ஸ்-விரட்டுவீர் கொசுக்களை!
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருளினால்.
தயாரிப்பாளர்:
பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
:.போர்ட், பம்பாய்-400 023. :.போன்: 273831



வட்ட மேஜை

● ''பிராமணர்களின் வீழ்ச்சி'' என்ற தலையங்கத்தைப் படித்து மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். தலையங்கத்தில் தாங்கள் கூறிய கருத்துக்களை நான் பெரிதும் வரவேற்கிறேன். ஏனைய பிராமணர்களும் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

திருமங்கலம் வெ. ராமராவ்

● தலையங்கம் கண்டேன். மிக்க மகிழ்ச்சி. ஆனால் தலைப்பு 'பிராமணர்களின் வீழ்ச்சி' என்று போட்டிருந்தது மனத்தை மிகவும் புண்படுத்துகிறது. 'பிராமணர்களின் எழுச்சி' என்றே போட்டிருக்கலாம்.

நெய்வேலி ஆர்.வி. உமாநடராசன்

● பிராமணர்கள் இன்று பின்தங்கிய நிலைக்கு வரக் காரணம் சமுதாயத்திலிருந்து அவர்கள் தனிப்பட்டவர்கள் என நினைத்துத் தாமே ஒதுங்கிக் கொண்டதுதான். கண் முன்னே நடக்கும் அக்கிரமங்களை நமக்கென்ன என நினைத்துத் தட்டிக் கேட்காமல் ஒதுங்கி இருந்ததன் விளைவுதான். இதனை மனத்தில் கொண்டு இன்றைய இளைஞர்களாவது சமுதாய விழிப்புணர்ச்சியுடன் சாதி மத பேதங்களைக் கடந்து எல்லோருக்கும் நன்மை செய்ய வேண்டும். சமுதாயத்தில் நடக்கும் அக்கிரமங்களைத் தைரியமாகக் கண்டிக்க வேண்டும். அப்போதுதான் சமுதாயத்தில் அவர்களும் ஒரு பங்கு என்பதனை எல்லோரும் உணர்வார்கள்.

திண்டுக்கல் ம. நாராயணன்

● தெருவுக்கு இரண்டு பேர் என உட்கார்ந்து கொண்டு திண்ணைப் பேச்சு, ஊர் வம்பு பேசும் நம்மவர்கள் தலையங்கத்தை அவசியம் படிக்க வேண்டும்.

நாகப்பட்டினம் வி. அனந்தராமய்யர்

● எஸ். சிவராமகிருஷ்ணன் என்ன சொன்னார்? பிராமணர்கள் ஆசார ரீதியில் தவறி விட்டார்கள் என்று. அது உண்மைதானே? டாக்டர்களாகவும், விஞ்ஞானிகளாகவும் வருவதற்கும், மூக்குப் பிடிப்பதற்கும் என்ன சம்பந்தம்? பின்னது முன்னதற்கு எப்படித் தடையாகும்? ஜட்ஜ் முத்துசாமி ஐயர் தமிழ்த் தாத்தா இவர்கள் எல்லாம் மூக்கைப் பிடித்துக்கொண்டு பெரிய பதவி வகிக்கவில்லையா?

பொள்ளாச்சி பி.எஸ்.ஏ. சர்மா

● அட்டையைத் தொடர்ந்து சில அறுவைகளில் கடைசி அறுவையில் பையன் தலையில் எழுதப்பட்டுள்ளது தவறு. காப்பி அடிக்கக் கூட விடையைத் தவறாக எழுதிக்கொண்டு

● 29-3-81 இதழில் 'பார்த்தோம் சொல்கிறோம்' என்ற தலைப்பில் தென் காசிக்கு அருகில் மீனாட்சிபுரம் பற்றிய செய்தி தொடர்பாக:

மீனாட்சிபுரம் ஊரில் 400 அரிசனக் குடும்பங்களே இருந்து வருகின்றன. அவர்களில் சுமார் 250 குடும்பங்கள் முஸ்லீம்களாக மாற்றப்பட்டனர். அவர்களில் பலர் மீண்டும் தாய் மதமான இந்து மதத்துக்குத் திரும்ப விஸ்வ ஹிந்து பரிஷத் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது.

மேலும் ஊரின் பெயரும் மீனாட்சிபுரமாகவே இருந்து வருகிறது.

பண்மொழி கே. சிவசங்கரன்

● ஸ்ரீதேவி உடம்பில் எங்கே மச்சம் இருந்தால் எங்களுக்கு என்ன சார்? வர வர நீங்கள் சினிமாவுக்கும், சினிமா நடிக, நடிகைகளுக்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கிறீர்கள். தயவு செய்து குறைத்துக் கொள்ளுங்கள்.


ஆதம்பாக்கம் எஸ். உதயகுமார்

● பிரியா பாது ஏ.டி. 2000க்கு பிப்ரவரி மாதத்தில் 30 நாட்கள் என்று கொடுத்த தகவலுக்கு (கல்கி 5-4-81) ஆதாரம் இல்லை. 1700, 1800, 1900



வஸந்த்!

சுஜாதா



17 மர்மக் கடிதம்

கணேஷ் தன் பையிலிருந்து அந்த ரிப்போர்ட்டை எடுத்துக் கொடுக்க, வஸந்த் அதை ஆர்வத்துடன் பார்த்தான். சிக்கலான சங்கேத பாஷையில் ஏகப்பட்ட ரசாயன பதங்கள் சேர்த்து எழுதப்பட்டிருந்தது அந்த ரிப்போர்ட். ''கொடுக்கப்பட்ட சாம்பிளை இன்ன தேதியில் அலசிப் பார்த்தபோது அதிலிருந்து கண்ட விவரங்கள் வருமாறு:

'கொடுக்கப்பட்ட துண்டு சுமார் அரை அங்குல நீளமும் கால் அங்குல பருமனும் சற்றே வெண் பழுப்பு நிறத்தில் இருந்தது. அதை அடையாளம் கண்டுகொள்ள ரசாயனப்பரிசீலனை செய்தபோது அந்தத்துண்டு ஆர்கானிக் வகையைச் சேர்ந்தது என்பதும் அது ஒரு வகை ஃபைப்ரஸ் மரத்தின் துண்டாக இருக்கலாம் என்பதும் தெரிகிறது. மரத் துண்டின் மேல் சில இன்-ஆர்கானிக் வகை ரசாயனப் பொருட்களும் தென்பட்டன. குறிப்பாக ஸோடியம் ஹைட்ராக்ஸைட், ஸோடியம் சல்ஃபேட், ஸோடியம் மானோ சல்ஃபைட், மிகத் துளி டைட்டேனியம் ஆக்ஸைடையும் பார்த்தேன். ஆர்கானிக், இன்-ஆர்கானிக் பொருட்கள் கலவை ஒரு செயற்கைக் கலவை என்றுதான் படுகிறது...''

வஸந்த் அந்தக் காகிதத்தைத் திருப்பிக் கணேஷிடம் கொடுத்துவிட்டு, ''தத்! ஒரு அட்சரம் புரியலே பாஸ்! எனக்குத் தெரிஞ்ச ஒரே ஒரு ரசாயனம் பாட்டரி காச்சறதும் சல்பேட்டாவும்தான். பாஸ் உங்களுக்கு ஏதாவது புரியுதா?'' என்றான்.

''இல்லே.''

''பின் சம்திங் இண்டரஸ்டிங்குன்னு சொன்னீங்க? தொடரும்னு போடறதுக்கா''

''இல்லே வஸந்த். இதிலே ஒரு க்ளு கிடைச்சிருக்கு. அதான் இண்ட்ரஸ்டிங்குனு சொன்னேன்.''

''என்ன?''

''உக்கல் கிராமத்தில் சோடியம்சல்பேட்டுக்கும் ஹைட்ராக்ஸைடுக்கும் டைட்டேனியத்துக்கும் என்ன வேலை?''

''என்ன வேலே? அதானே!''

''அதுக்குப் பதில் கண்டு பிடிச்சா கண்ணைக் கட்டிக் காட்டில விட்டாப் பல இருக்கே அது கொஞ்சம் குறையும்னு தோணுது. எப்படி இருக்கு உடம்பு? இனியா வந்தப்புறம் சரியாப் போயிருக்கணுமே?''

இனியா: ''என்கிட்ட என்னமோ ராத்திரியே செத்துப் போகப் போற மாதிரி பேசினார்.''

''ராத்திரி என்ன, இப்பவே கூட செத்துப் போனதாய் நடித்திருப்பானே!''

''என்ன பாஸ்! எத்தனை வாந்தி எடுத்துக் குத்துயிரும் குலையுயிருமாகக் கிடந்தேன்! நீங்கதானே பாத்தீங்க.''

''ஆமா இனியா, அதென்னவோ வாஸ் தவந்தான்.''

''எல்லாம் யாருக்காக? சொல்லுங்க பாஸ்.''

இனியாவஸந்தைப் பரிவுடன் பார்த்து, ''வஸந்த்! எல்லாம் என்னாலதான் வந்தது ஒப்புத்துக்கிறேன். அதுக்காக என் மனசு கிடந்து அல்லாடுது. பத்தியா நம்மால வஸந்துக்கு கஷ்டம், எதுக்காக அவரை ஊர் ஊரா அனுப்பிச்சு அவஸ்தைப்பட வைச்சு... உங்களுக்கும்தான் சொல்றேன். போதும் இந்தக் கேஸ். யார் என்ன செய்யறுங்கன்னு தெரியலே. கட்டுரை கிடைக்காட்டிப் பரவாயில்லே. அப்பா கிட்ட அடிச்சுச் சொல்லிட்டேன். வேணும்னு இன்னொரு கட்டுரை எழுதிக்கிங்க. பாவம், அவங்களை அனுப்பிச்சு ஒண்ணு வெட்டப் பூதம் கிளம்பினாப்பல ஆயிடுச்சு பாருங்கன்னு கோபமாவே பேசிட்டேன். கணேஷ் போதும் விட்டுத் தள்ளுங்க!''

''அந்த நிலைமையிலே நாங்க இல்லே இனியா. சாட்சி சொல்லவாவது அங்க நாங்க திரும்பிப் போகணும். வஸந்துக்குக் குணமானதும் ஒரு நடை போயிட்டு வருந்துருவோம். அதுக்குள்ள இந்த விநோதமான நிகழ்ச்சியைப் பற்றி நினைச்சுக்கிட்டே அசை போட்டுக் கிட்டே இருந்தா...''

''திடீர்னு பாஸுக்கு இன்ஸ்பிரேஷன் வந்துரும். அட! அதாண்டான்னு கண்டு பிடிச்சுடுவார். இனியா லேட்டஸ்ட் கேட்டியோ? ஒரு அப்பா பையன்கிட்ட அம்பது ரூபாய் கொடுத்துடவுனுக்குப்போய் என்ன வேணு பண்ணிட்டு வாடான்னாராம். பையன் காலேஜ் பையன்.....

அங்கு வந்த நர்ஸ் ''அய்யோ அந்தக் கதையைக் கேக்காதீங்க. ரொம்ப மோசம். என்ன வஸந்த் இது!'' என்றாள்.

''ஏய்! ஜோக்கெல்லாம் வேண்டாம். பேசாமப் படு.''

''குட் நைட் வஸந்த்! ஸ்லீப் வெல்!''

''இரு இரு. ஒரு புதுக் கவிதையாவது கேட்டுட்டுப்போ!''

''அதும் நல்லால்ல'' என்றாள் நர்ஸ்.

''போச்சுடா. ஸிஸ்டர்! தர்மா மீட்டரை ஒளிச்சு வச்சுருவேன்'' என்றான் வஸந்த்.

''அப்ப காலைல பார்க்கலாம்.''

''இனியா போறயா? பாஸ் டிராப் பண்ணிடுவார். பின் சீட்ல உட்கார்ந்துண்டு போ.''

அவர்கள் சென்றதும் வஸந்த் தலையணைக்கு அடியிலிருந்து சிகரெட் எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான்.

தன் கட்டிலில் தலைமாட்டில் இருந்த ஆஸ்பத்திரிக் காகிதத்தில் ஒரு வெள்ளைத்



வஸந்த்!

தாளைக்கிழித்துக் கொண்டு நர்ஸிடம் பேனவை வாங்கி எழுத ஆரம்பித்தான்.

''பத்துக்கு நாற்பது! என்ன அர்த்தம்? நீ பத்து ரூபாய் கொடு நான் நாற்பது ரூபாய் கொடுக்கிறேன் என்ரு? இந்த வியாபாரம் யார் செய்வார்கள்? மட்கா? இல்லை அபத்தம். ஏதோ ஒரு பொருளுக்கு நாற்பதாயிரம்? நாலாயிரம் ரூபாய் விலை மதிக்கக் கூடிய பொருள் என்ன? இப்படி இருக்கலாம். பத்து கிராம் விலை நாற்பது ரூபாயா? அல்லது நாற்பதாயிரம் ரூபாயா? அது என்ன ஒப்பியம்? சே! துப்பறியும் கதைகள் நிறையப் படிப்பதால் வரும் யோசனை இது. பாஸ் ஏன் அந்த பஸ் ஸ்டாண்டு சம்பவத்துக்கு அவ்வளவு முக்கியத்துவம் தருகிருர்? மரத் துண்டு. சோடியம் ஹைட்ராக்ஸைடு. ராஜ ராஜன் கிணறு. என்ன சம்பந்தம்? ஏதாவது சின்ன விஷயத்தை ஆனல் முக்கியமான விஷயத்தை விட்டு விட்டேனு? மரத்துண்டு! மரத் துண்டை வைத்துக் கொண்டு என்ன என்ன செய்யலாம்? எரிக்கலாம், ஆயுர்வேத மருந்து செய்யலாம். இல்லை இல்லை. மரத் துண்டு. அந்த ரசாயனப் பொருட்களின் பட்டியல். பத்துக்கு நாற்பது. இவை எல்லாவற்றுக்கும் பொதுவானது எது?

ஒரு மண்ணும் புரியலே...''

வஸந்த் தூங்கிப் போனன்.

அதே சமயம் கணேஷ் தன் அறையை அடைந்து படித்துக் கொண்டிருந்தான். புத்தக வார்த்தைகளில் அவன் கவனம் நிலைத்திருக்கவில்லை. பிளாஸ்கிலிருந்து பால் ஊற்றிச் சாப்பிட்டான். பேனவைக் கடித்துக் கொண்டு யோசித்தான். சதாசிவத்திடம் விடை இருக்கலாம். ஆனல் அவன் சொல்ல மாட்டான். உயிருக்கு ஆபத்து என்று தெரியும்போது எப்படிச் சொல்வான்?

கணேஷுக்கு நடந்த எல்லா சம்பவங்களுக்கும் மறைமுகமாக ஒரு சங்கிலித் தொடர்பு இருக்க வேண்டும் என்று பட்டது. இப்போது அந்தச் சங்கிலி அறுந்து சிதறியிருந்தது. எடுத்துக் கோக்க வேண்டும். எப்படி என்பது தெரியவில்லை.

ஸாம்பிள்! 'ஸாம்பிள் கொண்டு வந்திருக்கிருயா?'

அவர்கள் என்ன சாம்பிளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்?

பஸ் நிலையத்தில் இரண்டு சம்பவங்கள். முதல் சம்பவம் தஞ்சாவூர்க்காரனிடமிருந்து பெட்டி பறிக்கப்படுகிறது. பெட்டி திருப்பிக் கொடுக்கப்படுகிறது. இல்லை தெருவில் எறியப் படுகிறது. பணம் பாதிக்கப்படவில்லை. பத்துக்கு நாற்பது. பணம் இல்லை. ஸாம்பிள் போதைப் பொருளாக இருக்கலாம். இது ஒரு முக்கியமான சாத்தியம். மரத் துண்டு சோடியம் வகை ரசாயனப் பொருட்கள்.

ம்ஹூம். கணேஷுக்கும் புரியவில்லை. சோடியம் பற்றிப் படி!

காலை எழுந்ததும் நர்ஸிங் ஹோமுக்குப் போன் செய்து வஸந்தை விசாரித்தான்.

கடுகு பதில்கள்!

✖ சந்திரேயேந்திரன், தாராபுரம்

கே. ஓசை கேட்டால் இறந்து விடும் அகணம் என்னும் பறவை என்கிருர்கள். ஓசை இல்லாத உலகம் ஏது? ஆகவே அகணம் என்கிற பறவையே இருந்திருக்க முடியாது. சரிதானே?

ப: பலத்த ஓசை கேட்டால்தான் இந்தப் பறவை இறந்து விடுமாம். மலைச் சாரலிலே நிலவொளி வீசும் வேளையில் புல்லாங்குழல் போன்றவற்ருல் இனிய இசையை எழுப்புவார்களாம் குறிஞ்சி நில மக்கள். இந்த மெல்லிய இசையினுல் கவரப்பட்டு அகணங்கள் அங்கு கூடிவிடுமாம். இச்சமயம் திடீரென்று பலமான பறை ஓசையை எழுப்புவார்களாம். இந்த ஓசையினுல் அவை உயிரிழக்குமாம். இதுஒரு தமிழாசிரியர் தந்த விளக்கம். எனவே, அகணம் என்ற பறவை இருக்கிறதோ இல்லையோ; அது இல்லை என்பதற்கு நீங்கள் கூறும் காரணம் சரியில்லை.

✖ மைதிலி கண்ணன், அரக்கோணம்

கே. உங்களுக்கு ஜெயாஸ் ட்ரபிள் உண்டா?

ப: ஜெயாஸ் ட்ரபிள் பற்றிய நீளமான விளம்பரங்களைப் படித்து முடிப்பதற்குள் இந்த ட்ரபிள் வந்து விட்டது!


✖ பொ. பாண்டியன், கும்மிடிபூண்டி

கே. கொடைக்குப் பெயர் போனவன் கர்ணன். அப்படியிருக்க, 'கர்ண கடூரம்' என்று சொல்லப்படுகிறதே, கர்ணனை அவமதிப்பதாகாதா?

ப: அடாடா, கர்ணனைக் குறிக்காது அந்தச் சொல். 'கர்ண' என்ருல் காது என்று பொருள். (சம்ஸ்கிருதச் சொல் அது) காதுக்குக் கடூரமாக இருப்பதைக் கர்ண கடூரம் என்கிருர்கள். கர்ண பரம்பரைக் கதை, கர்ணம்ருதகானம், கஜகர்ணம், கோகர்ணம் போன்றவைகளைக் கேட்டிருப்பீர்களே. இதெல்லாம் காது சம்பந்தப் பட்ட விஷயங்கள்.

✖ வி. நாகபூஷணம், உச்சிப்புளி

கே. மேலதிகாரிகளைத் திருப்திப் படுத்தவே முடிவதில்லையே?



மேலதிகாரிகளைத் திருப்திப் படுத்துவது எப்படி?

ப: கஷ்டமான காரியம்தான். இருந்தாலும் இங்கிலாந்தின் பிரதமராக இருந்த டிஸ்ரேலி ஒரு சமயம் தம் நண்பரிடம் சொன்னதை நீங்களும் படித்துப் பாருங்களேன். ''இங்கிலாந்து அரசியிடம் நான் பிரதமர் என்ற முறையில் பேசச் செல்லும்போது ஒருசில சின்ன விஷயங்களைக் கடைப்பிடிக்கிறேன். எதையும் மறுப்பதில்லை. எதையும் எதிர்ப்பதில்லை. சில சமயம் மறந்து விடுவேன்.

※ ஆர். திருநாவுக்கரசு, திருமருகல்

கே. பெண்கள் வாடையே எனக்குப் பிடிப்பதில்லை. என்னைப்பற்றித் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: உலக் மகா·பொய்யர் என்று. ஏன் என்றால் உங்களுடைய அடுத்த கேள்வி: ப்ளூ பிலிம் பார்ப்பதுண்டா?உங்கள் பெயரைத் திருநாவுக்கரசு என்பதிலிருந்து இரு நாவுக்கு அரசு என்று மாற்றிவிடலாம்!

※ வி. வெங்கடராமன், மின்பாறை

கே. கஉரு பதில்கள் சேர்த்து வருகிறேன் 'ஏன் இந்தக் குப்பை எல்லாம் சேர்க்கிறீர்கள்' என்று என் சகதர்மிணி கேட்கிறாள். இதற்கு ஒரு தீர்வு சொல்லக் கூடாதா?

ப: விவாகரத்து!

※ இ. வஸந்தகுமார், ஆறுமுகனேரி

கே. கோவிலில் சென்று பிரார்த்திப்பதற்கும் வீட்டிலிருந்தே பிரார்த்திப்பதற்கும் வித்தியாசம் உண்டா? (கடவுள்தான் எங்கும் நிறைந்திருக்கிறாரே)

ப: இலை போட்டு மூக்கைப் பிடிக்கச் சாப்பாடு சாப்பிடுகிறீர்கள். அந்தச் சாப்பாட்டில் உள்ள வைடமின் முதலியவைகளை யெல்லாம் ஒரு சின்ன காப்ஸ்யூலாகப் பண்ணிச் சாப்பிட்டால் வயிறு நிறைந்த மாதிரி இருக்குமா? இரண்டு வித சாப்பாட்டிலும் ஒரே அளவு போஷாக்குச் சக்தி இருந்தும் இலைச் சாப்பாட்டைத்தானே நாம் விரும்புகிறோம். வீட்டுப் பிரார்த்தனை காப்ஸ்யூல் மாதிரிதான்.

※ ஆர். அரிகோபி, குடியாத்தம்

கே. வாரி வழங்கும் வள்ளல் குணம் நல்லதா?

ப: நல்லதா கெட்டதா என்று எனக்குத் தெரியாது. என் குணம் அப்படி!

பரிசு பெறுபவர் :

வஸந்த குமார்,
35 எஸ். எஸ். அம்மன் கோயில் தெரு,
ஆறுமுகனேரி-628 202

தூங்குகிறான் என்று தெரிந்தது. மனம் சற்றுத் தெளிந்திருந்தது. இன்று கோர்ட்டுக்குப் போக வேண்டும். கொஞ்ச நாள் கிணற்றை மறந்து விட்டுக் கோர்ட்டைக் கவனிக்க வேண்டும். வஸந்த் பூர்ண - குணமாவதற்கு இன்னும் இரண்டு தினங்கள் ஆகலாம். இரண்டு தினங்களுக்கு இந்த விவகாரத்தை மூட்டை கட்டி வைத்துவிடலாம். அதன்பின் யோசிக்கலாம்.

கணேஷ் தன் ப்ரீஃப்கேஸைப் பார்வையிடத் துவங்கினான்.

பத்து மணிக்குக் கோர்ட்டுக்குக் கிளம்புவதற்கு முன் டெலிபோன் அடித்தது.

''கணேஷ்! நா அப்பாதுரை பேசறேன்!''

''ஓ! புரொபஸர்! எப்படி இருக்கீங்க?''

''பரவாயில்லை. வஸந்துக்கு உடல் நலமில்லேன்னு இனியா சொல்லிச்சு.''

''பரவால்லிங்க.''

''உயிருக்கு ஒண்ணும் ஆபத்தில்லேயே?''

''இல்லீங்க. இதை விசாரிக்கத்தான் போன் பண்ணிங்களா?''

''உங்க குரல்லே ஆயாசமும் கோபமும் தெரியுது. உங்களுக்கு நிகழ்ந்து போனது எல்லாம் கேள்விப்பட்டேன். அதற்காக ரொம்ப வருத்தப்படறேன். ஏதோ விளையாட்டா ஒரு கட்டுரையைத் தேடறதில ஆரம்பிச்சது இவ்வளவு தூரத்துக்குப் போகும்னு கனவிலேயும் நான் நினைக்கலே. நான் எதுக்கு போன் பண்ண வந்தேன்னு அந்த ராஜ ராஜன் கிணற்றைப் பற்றி இன்னும் சில சரித்திரத் தகவல்கள் கிடைச்சிருக்கு. அதைப் பத்தி உங்ககிட்டச் சொல்லலாம்னு உத்தேசித்து.''

''ப்ரொபஸர்!எனக்குஇப்ப கோர்ட்டுக்குப் போக வேண்டிய அவசரம் இருக்கு. இப்ப நீங்க சொன்னீங்கன்னு எதுவும் புரியாது. சாயங்காலம் வரட்டுமா? ஃபிரீயா இருப்பீங்களா?''

''வாங்க! அதுக்கு முன்னுடி நான் கண்டு பிடிச்ச புதிய தகவலோட சாரத்தை மட்டும் சொல்ல விரும்பறேன். இல்லேன்னு எனக்கு மண்டை வெடிச்சுப் போகும்.''

''சொல்லுங்க'' என்று கணேஷ் கைக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டான்.

''அந்தக் கிணற்றில ஒரு பெரிய செல்வத்தை மறைச்சு வச்சதா சரித்திர பூர்வமா இப்பத் தகவல் கிடைச்சிருக்கு.''

''செல்வம்னு?''

''நிறையத் தங்கங்கள், நாணயங்கள் குடம் குடமா!''

''இஸ் இட்! இண்ட்ரஸ்டிங்! சாயங்காலம் விவரமாச் சொல்லுங்க. தாங்க்ஸ். வெச்சுரட்டுமா?''

கணேஷுக்கு பியட்டின் ஸ்டியரிங்கில் மனம் பதியவில்லை.

குடம் குடமா தங்கக் காசுகள்! இப்போது புரிகிறது. பத்துக் காசுகளுக்கு நாற்பதாயிரம். அதுதான் வியாபாரம் போலும். ராஜராஜன் கிணற்றைத் தோண்டி எடுத்துப் பார்க்க

லாம்...' தாவாதே! முதலில் பேராசிரியரின் புதிய தகவலைப் பார்க்கலாம்.....

கணேஷ் கோர்ட்டில் நுழைந்தபோது தாமதம் ஆகிவிட்டது. அவசர அவசரமாக கருப்புகவுன் பறக்க காரிடாரில் விரைந்தான். ''மிஸ்டர் கணேஷ்! ஐ வாஸ் எபவுட் டு அட்ஜர்ன் தி கேஸ்.''

''ஸாரி! ஸாரி! யுவர் ஆனர்... ஒரு ஸிவில் கோர்ட்டுக்கு பேனுமி டைட்டில்களில் ஜூரிஸ்டிக்ஷன் உண்டா என்று மதிப்புக்குரிய நண்பர் கேட்டது எனக்கு வியப்பாக இருக்கிறது. செக்ஷன் 66(1)ஐ மறுபடி பரிசீலிக்க அவரை அழைக்கிறேன். சதத்மான் கான் புல்கர் வழக்கில்.....''

கோர்ட்டின் பின்னல் பாதைகளில் மாக்னு கார்ட்டா காலத்திலிருந்து வாரிசாக வந்திருக்கும் சட்டப் புத்தகங்களின் சிக்கலான வாக்கியங்களில் கணேஷ் பரிபூர்ணமாகத் தன்னை ஆழ்த்திக் கொண்டு முன் தினம் நடந்த எல்லா சம்பவங்களையும் மறந்து போனான் கொஞ்ச நேரத்துக்காவது!

வஸந்துக்கு மத்தியானம் பதினொரு மணிக்குள் சரியாகிப் போய்விட்டது. ஆஸ்பத்திரியிலிருந்து டெலிபோன் செய்தான். ''பாஸ்! எப்படி இருக்கீங்க?''

''நீ சொல்லுடா.''

''பேனுமி கேஸ் எடுத்துட்டாங்களா இல்லே அட்ஜர்ன்மெண்டா?''

''எடுத்துக்கிட்டாங்க. ஜூரிஸ்டிக்ஷனே கிடையாதுன்னு வாதாடுறு! ஏண்டா வஸந்த்! ஸிக்ஸ்ட்டி ஸிக்ஸ்ல அப்படி ஏதாவது இருக்கா?''

''66(22-இ) யைப் பாருங்க. மெட்ராஸ் ஸ்டேட்டுக்கு அமெண்ட்மெண்ட் இருக்கு.''

''பத்தியா? அதை மிஸ் பண்ணிட்டேன். எப்படி இருக்கே? வர முடியுமா? இன்னிக்கு ரெஸ்ட் எடுத்துக்க. பேராசிரியர் போன் செய்தார். அந்தக் கிணத்துலே ட்ரெஷர் இருக்கிறதா இன்னொரு சரித்திரக் குறிப்பு கிடைச்சிருக்காம். சாயங்காலம் வரதாச் சொல்லியிருக்கேன்.''

''பாஸ் தனியாப் போகாதிங்க. ஏதாவது ஆபத்துக்கள் நிகழலாம்!''

''மெட்ராஸ்லேயா?''

''சொல்ல முடியாது. வெத்துக் குண்டங்க எல்லா ஊர்லயும் இருக்காங்க. அப்ப பாஸ்! ஒரு வழியாப் படம் பளிச்சுன்னு தெரியுது''

''உனக்குத் தெரியுதா?''

''பின்னே? எல்லாரும் கிணத்துல போட்டிருக்கிற தங்கச் சொத்துக்கு அலையறாங்க!''

''அப்படின்னு பத்துக்கு நாப்பதுன்னு என்ன வியாபாரம் அது?''

''அது ஏதாவது சங்கேத பாஷையா இருக்கலாம்.''

''பார்க்கலாம். லெட்டஸ் நாட் ரஷ்!''

''எனக்கு ஏதாவது வேலே? நான் ஆஸ்பத்திரியை விட்டு இன்னும் அரை மணில கிளம்பிடுவேன். நர்ஸை மாத்திட்டாங்க. சுத்தளவு ஜாஸ்தியா ஒரு பெரியம்மாவைப் போட்டிருக்காங்க. பார்த்தா எங்க...''

''சரி சரி வஸந்த்! எனக்கு ஒரு காரியம் பண்ணு. லைப்ரரிக்குப் போய் சோடியம் அதன் உபயோகங்கள் பற்றி அதன் இண்டஸ்ட்ரியல் யூஸஸ் கெமிக்கல் யூஸஸ் எல்லாத்தையும் பத்தி ஒரு சின்னக் குறிப்பு தேவை. சுமார் நாலு அஞ்சு பக்கம் போதும். வளவளன்னு எழுதாதே!''

''டன்! அப்புறம்?''

''ராரா கிணத்தைப் பத்தி வேறே யாராவது ஆராய்ச்சி செஞ்சு வச்சிருக்காங்களா? இருந்தா என்ன அது? என்ன கண்டு பிடிச்சிருக்காங்க?''

''டன். கிணத்தையே தலை கீழா கவுத்துர்றேன். அப்புறம்?''

''ஒரு விநோதமான கேள்வி. பேராசிரியர் நிஜமாவே சரித்திரப் பேராசிரியரா, இல்லே ஃபிராடா?''

''பாஸ்! என்ன அடி மடியிலயே கையை வைக்கிறீங்க?''

''எதுக்கும் யூனிவர்ஸிட்டிக்குப் போய் ஒரு நடை விசாரிச்சுட்டு வந்துரேன்.''

''அவரைச் சந்தேகப்படறீங்களா?''

''அவரையும் சந்தேகப்படறேன்.''


''நான் உண்டா உங்க பட்டியல்லே?''

''இல்லே. உன்னை எனக்குத் தெரியும். இன்னிக்கு இந்த மூணு விஷயங்களையும் பாத்துரு போதும். நான் கோர்ட்டு முடிஞ்சதும் பேராசிரியரைப் பார்த்துட்டு ராஜேந்திரனைப் போய்ப் பார்க்கலாம்னு இருக்கேன். வஸந்த் இந்தக் கேஸ் எனக்குப் பெரிய சவாலா இருக்கு. பைத்தியமா அடிக்குது. ஒண்ணுக்கொண்ணு சம்பந்தமில்லாத எத்தனையோ விஷயங்கள் இருக்கு. யார் செய்யறா? என்ன செய்யறாங்க? எதுவுமே இல்லாம ஒரே ஒரு பாழுங் கிணறு மட்டும்தான் கான்ஸ்டண்டா இருக்கு. அதைச் சுத்தி என்னவோ பித்தலாட்டம் நடக்குது. கண்டு பிடிக்கலேன்னு தூக்கம் வராது போல இருக்கு.''

''கண்டுபிடிக்காம விட்டுர்றதாவது, தா... பாத்ரலாம்!''

கணேஷ் மாலே அறைக்குத் திரும்பியபோது அவனுக்கு வந்த கடிதங்களில் மேல் விலாசம் எழுதப்படாத கடிதம் ஒன்று கலந்திருந்தது. பிரித்தால்...


''மேல் விவரம் தெரிந்து கொள்ள வேண்டுமா? அருணாவுக்கு வா.'' (தொடரும்)



''ஏண்டா ராமு... நம்ம பாலு அடிபட்டு எந்த வார்டில் அட்மிட் ஆகியிருக்கான்?...''

''நேரா போனின்னு மாநிறத்தில் நல்ல களையா ஒரு நர்ஸ் நெற்றியில் சின்ன குங்குமப் பொட்டு வச்சுகிட்டு, காதில் வளையம் மாட்க்கிட்டு இடது கையில் ஸ்டீல் கேஸ் வாட்ச் கட்டிக்கிட்டு உட்கார்ந்திருப்பாள்... அவள் முதுகுக்குப் பின்னால் இடது கோடி பெட்டில் படுத்திருக்காண்டா..''

- என். எஸ். வி. குருமூர்த்தி



21. நோயில் ஒரு கண்; களத்தில் ஒரு கண்

இந்தியாவின் மிகச் சிறந்த வழக்குரைஞர்களில் ஒருவர் தோழர் மோகன் குமார மங்கலம். எந்த வழக்கிலும் அவர் அதிக நேரம் எடுத்துக் கொள்வதைப் பெருமையாகக் கருதுவதில்லை. கையில் உள்ள நன்றாவேஜில் ஆறு பக்கத்தில் அடங்கியுள்ள விஷயத்தை ஆறு வரியில் அவர் நீதிபதிக்குக் கூறுவார். அதிலும் அவர் நம்பர் ஒன்று, இரண்டு என்று சொல்லிக் கொண்டு வருகிற பாவனையில் நீதிபதிக்கு வழக்கின் மையம் பாடமாகவே ஆகிவிடும்.

நார்ட்டன், கிராண்ட் போன்ற வெள்ளைக்கார வக்கீல்களைத்தான் மோகனுக்கு ஒப்பிடலாம்.

அவனது மிஷின் வழக்கின் தன்மை பற்றியும், இதில் அவன் சேர்க்கப்பட்டது பற்றியும் மோகன் தெளிவாக இருந்தார்.

கோர்ட்டுக்குப் புறப்படும் முன்னரே அவனது 'விடுதலை உறுதி' என்றும், 'பஞ்சு அருணாசலம், ஏ. ஆர். கண்ணப்பன் விஷயம் சொல்ல முடியாது'என்றும் அவர் சொல்லியிருந்தார்.

உயர்நீதி மன்றத்தில் வழக்கு ஆரம்பமாயிற்று.

நீதிபதி சதாசிவம் வழக்கை விசாரித்தார்.

அரசாங்கத்தின் சார்பில் வழக்குரைஞர் வேங்கடரத்தினம் ஆஜரானார்.

'அவனைத் தண்டித்தே ஆக வேண்டும்' என்று விரும்பும் சிலரும் அங்கே வந்திருந்தார்கள்.

மோகன் முப்பத்தைந்து நிமிஷங்கள்தான் பேசினார். முன்பு சொன்னது போல் அடுக்கடுக்காக நடந்தவற்றைச் சொன்னார். அவ்வளவுதான்.

பிறகு நீதிபதி சதாசிவம் அரசாங்க வக்கீலைப் பேசவிடவில்லை. ஒரே கேள்விதான் சதாசிவம் கேட்டார்: "Can you Prosecute a man who is not a licensee?''

இந்தக் கேள்விக்கு அரசாங்க வக்கீல் திணறினார்.

'' 'தென்றல் திரை' லைசென்ஸி, கே. ஆர். பாலன் லைசென்ஸி – இதில் கண்ணதாசன், கண்ணப்பன், பஞ்சு அருணாசலம் எங்கே?'' என்று கேட்டார் சதாசிவம்.

வழக்கு தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்டது. ''டேய், கண்ணதாசன்'' என்று கூப்பிட்டார் மோகன் குமார மங்கலம்.

அவனும் மோகனும் ''டேய்'' என்றுதான் பேசிக் கொள்வார்கள்.

''வழக்கு விடுதலை'' என்று முன்கூட்டியே சொன்னார்.

அன்று மாலை அவன் மோகன் குமார மங்கலம் வீட்டுக்குச் சென்றபோது, நிரப்பப்படாத 'செக்' ஒன்றை எடுத்துச் சென்றான். அதைக் கல்யாணி குமாரமங்கலத்திடம் கொடுத்தான். ''எவ்வளவு வேண்டுமோ நிரப்பிக் கொள்ளுங்கள்'' என்றான்.

அந்த வகையில் கல்யாணியோ, மோகனோ பேராசைக்காரர்கள் அல்ல. கட்சிக்காரர்களுக்குப் பணம் வாங்காமல் ஆஜரானவர் தானே மோகன். ஆயிரம் ரூபாய்தான் நிரப்பிக் கொண்டார்.

மோகன் சொன்னது போலவே வழக்கு விடுதலையாயிற்று. அவனுக்கு உடனடியாகக் காமராஜரைப் பார்க்கத் தோன்றிற்று.

நேரே அவரது இல்லத்துக்குச் சென்று, ''பாருங்கள், வழக்கில் நான் ஜெயித்துவிட்டேன்'' என்றான்.

''எனக்கு முன்பே தெரியுமப்பா, கோசல் ராம் வழக்கு ஜெயிக்கும்போது நீ ஏன் ஜெயிக்க மாட்டாய்?'' என்றார் அவர்.

''நான் மத்திய அரசின் மீது நஷ்டஈடு வழக்குத் தொடரப் போகிறேன்'' என்றான், அவன்.

''அதெல்லாம் எதற்கு? நீ ஜெயித்துவிட்டாய்; அதோடு விட்டுவிடு'' என்றார் அவர்.

✖ அமெரிக்காவில் அண்ணா



சாயங்காலம் பத்திரிகைகளைப் பார்த்த போதுதான் அவனது சகோதரர் ஏ. எல். எஸ்.ஸுக்கு நிம்மதி.

அதற்கடுத்து பத்தாவது நாள் சென்னை பெரியார் திடலில் நடந்த ''இந்தோ-சோவியத் கலாசாரக் கழக ஆண்டு விழா வில் அவன் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்று மோகன் கேட்டுக்கொண் டார். அவர் இந்தோ-சோவியத் கலாசாரக் கழக தமிழ் நாட்டின் துணைத் தலைவரல்லவா!

அந்த விழாவில் முதலமைச்சர் அறிஞர் அண்ணாவும் கலந்து கொள்வதாக ஏற்பாடு.

அவன் நீண்ட நாட்களுக்குப் பிறகு அண் ணாவைச் சந்திக்கப் போகிறான்.



● பகலில் குடை இன்றி வெளியே கிளம்ப முடியாத கோடை நாட்கள் இவை. ஆனால் நண்பரிடமோ தோழியிடமோ பேசிக் கொண் டிருந்து விட்டு வெய்யில் தாழப் புறப்படும் போது குடையை மறந்து விடுவதும் சகஜம். அப்படி மறக்காமலிருக்க:

1 பூஜை நேரத்தில் ஸ்ரீராமஜெயத்துக்குப் பதில குடை, குடை என்று 108 தரம் ஜபிக்கவும்.

2 காலை தேகப்பயிற்சிக்குப் பதில் குடையை விரிப்பது போலும் மடக்குவது போலும் விரைப்பாகக் கையை நீட்டி மடக்கவும்.

3 கணவனை அல்லது மனைவியை முன்னிலும் அதிகமாகக் குடையோ குடை என்று குடைந்தெடுக் கவும்.

4 இந்த வாரக் கல்கி அட்டைப்படத்தைக் கத்த ரித்து அடிக்கடி கண்ணில் படுகிற இடத்தில் ஒட்டி வைத்துக் கொண்டு அதைப் பார்க்க நேரும் போதெல் லாம் ''குடையை மறக்கமாட்டேன், இதுசத்தியம்!'' என்று வீர சபதம் பண்ணவும்.

5 உங்கள் வீட்டருகே உள்ள நாட்டிய நிகேதனத் தில் சினைச் சிங்காரிகளும், சீமான்களும் ஆடும் குடை டான்ஸ் கற்றுக் கொள்ளவும்.

6 விரலில் சும்மாவாவது ஒரு கட்டுப் போட்டுக் கொண்டு யாராவதுகேட்டால் குடையை மடக்கியபோது சதையைக் கிள்ளிவிட்டது என்று பொய் சொல்லி வரவும்.

இவ்வளவுக்குப் பிறகும் நீங்கள் குடையை மறந்தால் அதற்குத் தண்டனையாக உச்சி வெயிலில் காலில் செருப்பும் இல்லாமல் ஐந்து நிமிஷம் நிற்கவும்.

மேலட்டையில் குடையுடன்: சுஜாதா
வண்ணப்படம் எடுத்தவர்: யோகா

தி. மு. க.வினர் பலபேர் முன்னாலேயே வந்து உட்கார்ந்திருந்தார்கள். அண்ணா குறிப்பிட்ட நேரத்துக்கு வந்துவிட்டார். அவரது உடம்பு உற்சாகத்தில் லேசாகப் பருத்திருந்தது. ஆனால் அது இயற்கை யான பருமனாக அவனுக்குத் தோன்றவில்லை.

அப்போதும் அவன் தி. மு. க. கூட் டணியைக் கொஞ்சம் கிண்டல் செய்து தான் பேசினான்.

அவன் பேசியபோது. அண்ணா அவனையே பார்த்துக் கொண்டிருந்ததாகச் சொன் னார்கள்.

விழா முடிந்து புறப்படும்போது, அண்ணா மேடையில் இருந்த எல்லோருக்கும் கை கொடுத்தார். அவனிடம் கை கொடுக்காமல் அவனது தொந்தியில் லேசாகத் தட்டி ''குழந்தைகள் எல்லாம் சௌக்கியமா?'' என்று கேட்டார். ''சவுக்கியம்'' என்றான். ''அப்புறம் வீட்டுக்கு வா; மறந்துவிடாதே'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

ஒரு மாதம்கூடச் சென்றிருக்காது. அவன் தலைவர் காமராஜர் வீட்டில் உட்கார்ந் திருந்தான். தலைவர் வெளியே சென்றிருந் தார். பகல் ஒன்றரை மணிக்கு காரில் வந்து இறங்கிய அவர், டாக்டர்களுக்கு அர்ச்சனை செய்து கொண்டே உள்ளே நுழைந்தார்.

''அறிஞர் அண்ணாவுக்குத் தொண்டையில் வந்திருப்பது புற்று நோய்'' என்று அப்போது தான் சொன்னார்களாம். அதுவும் காமராஜர் போய்ச் சத்தம் போட்ட பிறகுதான் சொன் னார்களாம். ''இதிலென்ன ஒளிவு மறைவு?'' என்றார் அவர்.

நாடு எதிர்பாராத வண்ணம் பதவி ஏற்ற பதினெட்டு மாதங்களுக்குள்ளாகவே அண் ணாவை அந்தக் கொடிய நோய் பற்றியது.

அவர் வைத்தியத்துக்காக அமெரிக்கா செல்ல வேண்டும் என்று முடிவாயிற்று. அந்த ஏற்பாட்டை முன்னின்று நடத்தியவர் திரு சி. சுப்பிரமணியம்.

எல்லா ஏற்பாடுகளையும் அவருக்குச் செய்து கொடுக்கும்படி கட்டளை இட்டிருந் தவர் தலைவர் காமராஜர்.

அறிஞர் அண்ணா அவர்களும், அவரது குடும்பத்தினரும், திரு கா. ராஜாராமும் அமெரிக்காவுக்குப் பயணமானார்கள்.

பாதிக்கப்பட்டவர் அண்ணா ஆனதால், எல்லாக் கட்சிக்காரரிடமும் ஒருமித்த அனு தாபம் இருந்தது.

பத்து நாட்களுக்குப் பிறகு நாஞ்சில் மாவட்டக் காங்கிரஸ் தலைவர் திரு நேசமணி அவர்களின் மறைவால், காலியான நாகர் கோவில் பாராளு மன்றத் தொகுதிக்கு மறு தேர்தல் வரப்போவதாக அறிவிப்பு வந்தது.

அந்தத் தொகுதியில் நிற்க காமராஜர் விரும்புவார் என்றுகூட அவன் எதிர்பார்க்க வில்லை. அந்த உட்கிடக்கையை காமராஜர் யாரிடமும் அறிவிக்கவில்லை.

மதுரை தோழர் ப. நெடுமாறனை மட்டும் ரகசியமாக அழைத்து, ''நாகர்கோவில் தொகுதி எப்படி இருக்கிறது?'' என்று பார்த்து வரும்படி அனுப்பினார்.

ஏற்றுக்கொண்ட வேலையைச் செம்மையாக செய்து முடிப்பதில் நெடுமாறன் நிகரற்றவர்.

நாகர்கோவில் சென்று, நேசமணியின் குமாரரைச் சந்தித்து நாற்பது ஊர்களில் பிரமுகர்களைச் சந்தித்துத் திரும்பிய நெடுமாறன், 'காமராஜர் நாகர்கோவிலில் நிற்க வேண்டும்' என்று அறிக்கை விட்டார்.

அதைத் தொடர்ந்து நூற்றுக் கணக்கான அறிக்கைகள் வெளிவந்தன.

'காமராஜர் அந்தத் தேர்தலில் நிற்பது பற்றி இந்திரா அவ்வளவு ஆரோக்கியமாக இல்லை' என்று பரவலாகப் பேசிக் கொண்டார்கள். ஆனால் தொலைபேசியில் இந்திராவே காமராஜரை அழைத்து நிற்கும்படி கேட்டுக் கொண்டார்.

தலைவர் காமராஜர் போட்டியிடுவதென முடிவாகி விட்டது.

தமிழ்நாடு காங்கிரஸ்காரர்கள் அதனை அசோகனின் கலிங்க யுத்தத்துக்கு இணையாக எதிர்பார்த்தார்கள்.

கருணாநிதி சும்மா இருப்பாரா! 'காமராஜரை அங்கும் தோற்கடிப்போம்' என்று அறிக்கை விட்டார்.

அவர் அறிக்கை விட்ட ஆறாவது நாள் ஆபரேஷன் முடிந்து, அறிஞர் அண்ணா அவர்கள் சென்னை திரும்பினார்கள்.

ஊர்வலமாக அவரை அழைத்து வரும் போதே அவன் பார்த்தான். 'நோயிலிருந்து மீளவில்லை' என்பதையே அவரது முகக் குறிகள் காட்டின. நகரம் அவரை உயிருடன் பார்த்ததிலேயே அமைதியடைந்தது.

அண்ணா அவர்கள் சென்னைக்குத் திரும்பியதும், கருணாநிதியின் சார்பாக அவர் முன்னால் வைக்கப்பட்ட முதல் பிரச்னை நாகர்கோயில் தேர்தல்.

''கழகம் போட்டியிட வேண்டும். இல்லை என்றால் சுதந்திரா கட்சி மத்தியாஸை ஆதரிக்க வேண்டும்'' — இந்த இரண்டையுமே அறிஞர் அண்ணா அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் பிரத்யட்ச உணர்ச்சி உள்ளவர்.

''நீங்கள்சற்று ஒதுங்கியிருங்கள்; நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்'' என்று கருணாநிதி அவரிடம் சொல்லிவிட்டு நாகர்கோவில் படையெடுப்புக்கு ஆயத்தமானார்.

கருணாநிதி வரிந்து கட்டிக் கொண்டு நிற்பதைப் பார்த்த அவனுக்கு ஆத்திரம் பீறிட்டுக்கொண்டு வந்தது.

உடனே அவனுக்குத் தலைப்பா கட்டி, சங்கு முழங்கி, தாரை தப்பட்டை எழுப்பி, ஆவேசத்தை உண்டாக்கினார்கள் காங்கிரஸ்காரர்கள்.

'மரணமே பெறுவதானாலும் அது நாகர்கோவிலிலே நடக்கட்டும்' என்று அவனும் இறங்கி விட்டான். (வளரும்)



விட்டில் அணைத்த விளக்கு

● பாராட்டுகிறேன்... பாராட்டுகிறேன்... சுமங்களாவை — இறுதிவரை உறுதியாக இருந்ததற்கு. எங்கே பழைய பஞ்சாங்கம் போல் கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்று இறுதியில் விட்டுத் தந்து விடுவாளோ என்று பயந்தேன். நல்ல வேளையாக உறுதியாக இருந்துவிட்டாள்.
சென்னை பாலாஜி

● கொடூரமும், பொல்லாத்தனமும், பலவீனமும் கொண்ட ஆண் பாத்திரங்களை நாவல்களின் நாயகர்களாக்கி, அவர்களுக்கு Male Chauvinism பட்டயமும் கட்டி, ஆண் வர்க்கத்தை மட்டந்தட்டி மலிவு படுத்தி வரும் எழுத்தாளர்களின் வரிசையில் 'விட்டில் அணைத்த விளக்கு' வழியாக 'மகரிஷி'யும் சேர்ந்திருக்கிறாரே! சினிமாப் பாணியில் சில சம்பவங்கள் அமைந்திருந்தாலும் Characterizations pecialist ஆன மகரிஷியின் பிரம்ம படைப்பில் பாத்திரங்கள் ஜீவ களையுடன் வித்தியாசமான வெளிச்சங்களில் நின்றிருக்கிறார்கள்.
சென்னை ராமாபுரம் சந்துரு

● விளக்கில் விழுந்து மடியும் விட்டில் பூச்சியைத்தான் இதுவரை பார்த்திருக்கிறோம். ஆனால் விளக்கையே அணைத்த விட்டில் பூச்சியைச் சுமங்களா என்ற உருவில் பார்த்தேன். நெஞ்சை விட்டு அகலாத காவியம் விட்டில் அணைத்த விளக்கு.
சென்னை-44 பாரத்வாஜன்

● குறுகிய வட்டத்துக்குள்ளேயே சுற்றிச் சுற்றி வரும் நமது திரைப்படத் துறையினர் ''விட்டில் அணைத்த விளக்கை'' திரைப்படமாக எடுத்தால் அபரிதமான வெற்றி பெறும்.
குலசேகரப்பட்டினம் இசை முத்து மீரா

● மகரிஷியின் வழக்கமான கதை சொல்லும் திறமை இதிலும் சோபித்தது. ஆனால் உறுதியும், தன்னம்பிக்கையும்கொண்ட சுமங்களாவை விட்டிலாகவும், சுயமையின் மொத்த உருவமான பரமேசுவரனை விளக்காகவும் உருவகப்படுத்தும் தலைப்பை மட்டும் நான் ரசிக்கவில்லை.
தஞ்சை இ. கண்ணன்

● பெண்களைப் போகப் பொருளாக மட்டும் நினைத்து அனுபவித்துவிட்டு, பிறகு ஏமாற்றிக் கைவிடும் கயவர்களுக்குச் சரியான பாடம் புகட்டியிருக்கிறார் ஆசிரியர். சுமங்களாக்கள் போன்று பெண்கள் தைரியசாலிகளாக மாறினால் ஆண்களின் கொட்டம் அடங்கும்.
சென்னை-18 பத்மாமணி

● 23 வாரங்கள் போனதே தெரியவில்லை. ஓவியர் உமாபதியின் படம் கதைக்கு மேலும் மெருகூட்டியது.
தஞ்சாவூர் பாபு ராஜேந்திரன்

Kalki Shopping Page



அன்புள்ள அம்மாவுக்கு

பி. ரங்கநாயகி

சங்கரன் எழுதிய கடிதத்தை இன்னொரு முறை எடுத்துப் பார்த்தாள். டெல்லியில் ஒரு பெரிய உரத் தொழிற்சாலையில் உதவி மானேஜராக இருக்கும் ஒரு வரனை வித்யாவுக்குத் தான் பார்த்து ஏற்பாடு செய்திருப்பதாகவும், சென்னைக்குத் தான் அடுத்த வாரம் வரும்போது பெண்ணைப் பார்ப்பதற்காக அந்தப் பிள்ளையாண்டானை அழைத்து வருவதாகவும் எழுதியிருந்தார்.' பையன் மிகவும் பரந்த மனப்பான்மை உள்ளவன் ஆதலால் வரதட்சிணை வாங்க மாட்டான். மற்ற விஷயங்களிலும் எந்தவிதமான நிபந்தனையும் இருக்காது என்று அவர் கோடிட்டுக் காட்டி எழுதியிருந்தது விசாலத்துக்கு அந்தப் பையனிடத்தில் அதிகப்படியான மதிப்பைக் கொடுத்தது. சங்கரனுக்காக விசாலத்தின் மனத்தில் ஓர் உயர்ந்த ஸ்தானம் உண்டு. அவர் முனைந்து பார்த்து ஏற்பாடுகள் செய்வதால் இட்ம் நல்லதாகத்தான் இருக்கும் என்று திடமாக நம்பினாள்.

சென்ற மாதம் விசாலம் அவருக்குக் கடிதம் எழுதியிருந்தபோது வருகிற தை மாதத்துக்குள் வித்யாவுக்குத் திருமணம் செய்ய முடிவு செய்திருப்பதாகவும், ஒரு நல்ல இடமாக டில்லி பக்கத்திலேயே குதிருமானால் அவளுடைய திருமணத்தை முடித்துவிட்டுத் தானும் டெல்லிக்கே மாற்றல் வாங்கிக்கொண்டு அங்கேயே 'செடில்' ஆகிவிடுவதாகவும் எழுயிருந்தாள்.

ஒரு பளுவும் இறங்கிப் பிறகு வாழ்க்கையில்

தனித்தியங்க வேண்டிய தக்கைதானே அவள்!

இந்த ஆவணியோடு வித்யாவுக்குப் பத்தொன்பது வயது முடிந்து இருபதாவது வயது பிறந்தாகி விட்டது. விசாலத்தின் பதினொரு மாத இல்வாழ்க்கையின் ஒரே நடயம் தான் வித்யா.

ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் வாழ்க்கையை அவள் எதிர்பார்த்து ஓட்டிய நாட்களைவிட ஏமாந்து போய் ஓட்டிய நாட்கள் தான் இன்று அதிகம்!

தான் நன்றாக இருந்தால்தானே அந்தப் பெண்ணுக்கு ஒரு நல்ல எதிர்காலம் அமையும் என்கிற ஒரே காரணம்தான் அவளை இன்று வரை சோர்வடையாமல் நடமாடச் செய்து கொண்டிருக்கும் தூண்டுகோல். அதுவும் இல்லையேல் அவள் என்றோ மக்கிப் போயிருப்பாள்.

கடந்த பத்தொன்பது வருடங்களாக அவளது நினைவு, சூழல், உலகம் எல்லாம் வித்யாவைச் சுற்றித்தான் இருந்து வருகின்றது. இன்னும் சில மாதங்களில் வித்யாவுக்கென்று புதிதான உறவுகளை ஏற்படுத்திக் கொடுத்து விட்டால் பொறுப்பில் பெரும் பகுதி குறைந்து விடும்.

நினைத்துப் பார்த்தால் அவளது வாழ்க்கை ஒரு வேடிக்கையான வேதனையாகும்.

தாய் தந்தையரின் ஆஸ்தி, அன்பு ஆகிய வற்றை ஏகபோகமாக அனுபவிக்கப் பிறந்த ஒரே மகள் விசாலம். 'ஓஹோ' என்று சொல்லும்படியான அளவு செல்வம் அவளுடைய பெற்றோருக்கு இல்லாவிட்டாலும் கூட, அவளுடைய தந்தை தேவைக்கு அதிக அளவு சம்பாதித்துக் கொண்டிருந்தார். விசாலம் எஸ். எஸ். எல். சி.யில் நல்ல மார்க்குகள் வாங்கித் தேர்ச்சி பெற்றதும், காலேஜில் சேர்ந்து படிக்க வேண்டும் என்று எவ்வளவோ முரண்டு பிடித்தாள். ஆனால் பலன்தான் இல்லை.

வித்யாவுக்கு நல்லதொரு வரன் பார்த்து இருப்பதாக லெட்டர் போட்டிருக்கும் சங்கரன் வேறு யாருமல்ல. விசாலத்தின் சொந்த அத்தை பிள்ளை. அந்தக் காலத்தில் அவளை மணந்து கொள்ளத் தயாராக இருந்த முறை மாப்பிள்ளை. ஒரு இங்கிலீஷ்காரன் மருந்துக் கம்பெனியில் அப்போதே ஐநூறு ரூபாய்க்கு மேல் சம்பாதித்துக் கொண்டிருந்தார். அவளுடைய அத்தைக்கும் சங்கரனுக்கும் விசாலத்தைத் தங்கள் வீட்டுப் பெண்ணாக ஆக்கிக் கொள்வதில் கொள்ளை ஆசை. ரவி வர்மாவின் சித்திரம் போன்ற அழகும், கை நிறையக் காரியமுமாகப் பம்பரமாய் அவள் வேலை செய்யும் பாங்கைக் காணுகின்ற எவருக்குத்தான் அவளைப் பிடிக்காமல் போகும்?

அந்த விதத்தில் சங்கரனுக்கும் எவ்விதக் குறைவும் இல்லைதான். அழுத்தி வாரிவிடப் பட்ட கருட்டை முடி, பட்டைக் கண்ணாடி, அதன் பின்னே தீட்சண்யமான பார்வை, கையிலே லெதர் பை ஆகியவற்றுடன் சங்கரன் ஆபீஸ் செல்வதைப் பார்க்கும்போதெல்லாம் விசாலத்துக்கு அவரிடம் ஒருவித பயம் கலந்த மதிப்பு உண்டாகும். திருமணத்தைப் பற்றித் தனக்கென்று எந்தவித அபிலாஷையும் இல்லாத நிலையில் சங்கரனை மணந்து கொள்வதில் பரிபூர்ண இருப்திதான். ஆனால் இத்திருமணத்துக்கு விசாலத்தின் தாத்தா நாணு அய்யர் குறுக்கே நின்றார். சங்கரனது ஜாதகப்படி அவரது நாற்பதாவது வயதில் ஆரம்பமாகும் ஏழரை ஆண்டு தசை மிகவும் தீவிரமாக இருக்குமாதலால் சங்கரன் நாற்பத்தி இரண்டு வயதுக்கு மேல் பிழைத்திருப்பது மிக மிக அரிது என்று சொன்னார்.

இன்று, தனது நாற்பத்தெட்டாவது வயதில் எந்தவித உடற்கோளாறுமின்றிச் சகல விதமான சம்பத்துக்களுடனும் சங்கரன் அமோகமாக வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார். யார் யாருக்கு எங்கெங்கு பிராப்தமோ அங்குதானே வாழ்க்கை கிடைக்கும்!

அவ்வூரின் போர்ட் ஹைஸ்கூல் ஹெட் மாஸ்டராக வந்தான் பிச்சுமணி. எம். ஏ. எல். டி. படித்து விட்டுச் சின்ன வயதிலேயே ஹெட் மாஸ்டராக வந்தான் என்பதால் ஊரில் அவனுக்கு ஏகப்பட்ட மதிப்பு, மரியாதை. யதேச்சையாக அவனிடம் பழகுவதற்கு வாய்ப்புக் கிடைத்தபோது பிச்சுமணியின் அறிவுத் திறமையிலும் வாக்கு சாதுர்யத்திலும் மயங்கிப் போனார் நாணு அய்யர். உடனே அவனை விசாலத்துக்குப் பார்த்து மணம் முடித்து வைத்தால் என்ன என்கிற ஆசை எழுந்தது. முயன்று பார்த்தார். ஜாதகம் அமோகமாகப் பொருந்தி இருக்கிறது என்றும், தெய்வ சங்கல்பப்படி



ஸ்ரீராமஜெயம்

பரிசு ரூ 500/=

ஒரு தபால் கார்டின் முன் பக்கத்தில் அதிக பட்சமாக எத்தனை தடவை உங்களால் ஸ்ரீ ராமஜெயம் என்று எழுத முடியும்?

மிக அதிகமான அளவில் எழுதி அனுப்பு கிறவருக்கு பரிசு ரூ. 500.

தபால் கார்டின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும். பின்புறம் கல்வி காரியாலய விலாசமும் எழுதியவர் விலாசமும் எத்தனை முறை ஸ்ரீ ராமஜெயம் எழுதப் பட்டுள்ளது என்ற எண்ணிக்கையும் மிகத் தெளிவாக இடம் பெற வேண்டும். இந்த விதியை மீறினால் போட்டியில் அந்தக் கார்டு சேராது நிராகரிக்கப்படும்.

குறிப்பிட்ட ஒரே அதிகபட்ச எண்ணிக்கையில் ஒருவருக்கு மேல் எழுதினால் பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்படும்.

முடிவு தேதி மே 13.

இத்திருமணம் நடந்தே தீரும் என்று வாதிட்ட அவர் விடாப்பிடியாகத் திருமணத்தை முடித்து வைத்தார்.

அந்த நாட்கள் விசாலத்தின் வாழ்க்கையில் வசந்தமாக விளங்கின. பிச்சுமணி வாழ்க்கையை நன்கு அனுபவிக்கத் தெரிந்தவன். விசாலம் எனும் வீணையில் சிருங்கார தந்தியை மீட்டி இன்ப லாகிரியை நாத வெள்ளமாய் வெளிப்படுத்தி அங்கு அவர்களுக்கென்று ஒரு சாம்ராஜ்யம் அமைத்து, சொர்க்கத்தைப் பற்றிய கற்பனைகளைப் பூவுலகிலேயே நினைவாக்கி அவளைத் திக்குமுக்காட வைத்தான். சிறிய விஷயங்களில் கூடத் தன் தனித் தன்மையை வெளிப்படுத்தும்படி முத்திரை பதித்தான். யாரோ துரத்துவது போன்று குதித்தோடி மறைந்தது அந்தப் பதினெட்டு மாதம்.

அது ஒரு ஆடி மாத இளங் காலை. மசக்கையின் கிளர்ச்சியில் எத்தனை முறை எழுப்பியும் சிணுங்கிக் கொண்டே படுக்கையில் மயங்கி மயங்கி விசாலம் புரண்டு கொண்டிருந்தாள். அந்தச் சிணுங்கல்களைச் சமாதானம் செய்வது போல் அவளை மீண்டும் சீண்டிவிட்டு வேடிக்கை பார்த்த பிச்சுமணி பள்ளிக்கு அன்று சீக்கிரம் செல்ல வேண்டும் என்ற காரணத்தால் துண்டு, சவுக்காரத்துடன் குளிப்பதற்காகக் காவேரிக்குப் போனான்.

விசாலம் எவ்வளவு நாழிகைதான் அம்மாதிரிப் படுக்கையில் புரண்டபடி படுத்திருந்தாளோ தெரியாது. வாசலில் ஏதோ பெரிதாகக் கூக்குரல் கேட்கவும், எழுந்து என்னவென்று பார்த்தாள். நாலு பேர் பிச்சுமணியைச் சுமந்து கொண்டு வந்து ரேழியில் போட்டதைப் பார்த்துவிட்டுக் கதறினாள். ஊரே புலம்பியது. பிச்சுமணி ரேழியிலிருந்து உள்ளே வராமல் அப்படியே ஒரு வழியாகப் போய்ச் சேர்ந்தான்.

ஆடிப்பெருக்கு, அவளது வாழ்க்கையைப் பெரிதாக ஒரு ஆட்டம் ஆட்டி, தரை மட்டமாக்கிவிட்டு, ஓடி மறைந்து விட்டது. நாணு அய்யரின் பிரசித்தி பெற்ற ஜோசியத்துக்கு அவளது வாழ்க்கை ஒரு பெரிய சவாலாக அமைந்தது.



''என்னய்யா புதுமுகம் தேஜஸ்ரீயைப் பற்றி 16 விதமாக கிசுகிசு பேசறாங்களாமே!''
''என்ன 16 விதமாகவா?''
''ஆமாம்! நாலு பேர் நாலு விதமாகப் பேசறாங்க!'' -ஸ்ரீராஜ்

உணர்ச்சிக் குவியல்கள் ஆர்ப்பாட்டம் போட்டு, பிறகு சிறிது சிறிதாக அடங்கி, இறுகி, மரக் கட்டையாக அவளது உணர்வுகளை மாற்றிய பிறகு ஜீவனில்லா பிம்பமாய் விசாலம் நடமாடத் தொடங்கினபோது ஜீவன் பெற்று வயிற்றில் வளைய வர ஆரம்பித்தாள் வித்யா.

மூக்கும் முழியுமாகத் தகப்பனையே உரித்தெடுத்துப் பிறந்தாள் வித்யா. இல்வாழ்க்கையின் ஒரே தடையமான வித்யாவுக்காகத்தான் தன்னைச் சரிப்படுத்திக் கொண்டு வாழ்ந்தே தீர வேண்டும் என்கிற வைராக்கியம் அவளிடம் பிறந்தது. பெற்றோர்களிடம் வித்யாவை விட்டு விட்டு, கல்லூரியில் சேர்ந்து அவள் பட்டம் வாங்கியது, சங்கரனுடைய சிபாரிசினால் அவர் வேலை செய்யும் கம்பெனியின் சென்னைக் கிளையில் ஒரு வேலையில் சேர்ந்தது ஆகியவை யெல்லாம் நடுவில் நடந்த நிகழ்ச்சிகளாகும்.

'தந்தை இல்லாத பெண்' என்று நாலு பேர்கள் நடுவில் ஒரு பச்சாதாபத்தை வித்யாவின் உள்ளத்தில் ஒரு ஏக்கமாய் அண்ட விடாமல், வித்யாவின் ஆசைகளை, அபிலாஷைகளை எவ்விதக் குறைவுமின்றி நிறைவேற்றி அவளை வளர்த்து ஆளாக்கி நல்லதொரு இடத்தில் மணமுடித்து வளமான எதிர்காலத்தை உருவாக்கித் தருவதைத் தனது ஜீவ லட்சியமாகக் கொண்டு விசாலம் இயங்க ஆரம்பித்தாள். டெல்லியிருந்து எப்போதாவது வந்து அவளைப் பார்த்துவிட்டுப் போகும் சங்கரனைத் தவிர வேறு துணையில்லாத நிலையில் ஆண்மையின் நெஞ்சுரத்தை வெளியுலகப் பார்வைக்கும், ஓர் இளம் கைம்பெண்ணின் கேவல்களைத் தன் உள்ளத்தின் அடித்தளத்திலும் ஒரு தாயின் பாசத்தை பரிவை, கொஞ்சல்களுடன் கலந்த கண்டிப்பை வித்யாவிடமும் தனது வாழ்க்கையில் விசாலம் கைப்பிடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

தன்னுடைய தந்தை இறந்து விட்டார், தனக்கென்று இனிமேல் அவர் வரவேமாட்டார் என்ற உணர்வை வித்யாவுக்குப் புரிய வைக்க முடியாத பருவத்தில் வித்யா தந்தையைப்பற்றிக் கேட்கும் கேள்விகளுக்குத் தனது உள்ளக் குமுறல்களைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு, அவளுடைய அப்பா எப்போது வருவார், அவளுக்கு 'என்னவெல்லாம் வாங்கிக் கொண்டு வருவார் என்று கற்பனையை வாரி இறைத்தாள். வித்யா கை கொட்டிச் சிரித்துத் தனது மனநிறைவை வெளிப்படுத்தும் அளவுக்குப் பதில் சொல்லக் கற்றுக் கொண்டாள்.

தந்தையின் பாசக்குவியல்களை, முரட்டுத்தனம் கலந்த அன்பு ஊற்றை, அனுபவிக்கும் வாய்ப்பு தனது வாழ்க்கையில் எப்போதுமே கிடைக்காது என்று வித்யா புரிந்து கொண்ட பருவத்தில், அவளுக்கு ஆறுதல் கூறி, மனத்தைத் தேற்றினாள்.

இதற்கிடையில் ஆண் துணை இல்லாமல், தனியாக இருக்கிறளே ஒரு இளம் பெண் என்று எவரும் அவளிடம் வாலாட்ட முடியாத அளவுக்குத் தனது உணர்ச்சிகளையும், செயல்களையும், சொற்களையும் வரையறுத்துக்கொண்டாள்.

ஆக, விதம் விதமான சோதனைகளைக் கொடுத்து அவளை வாட்டி எடுத்த பருவங்கள் ஒன்றன் பின் ஒன்ருக மறைந்து கொண்டே வந்தன.

பூத்துக் குலுங்கும் பருவத்தில் வித்யா இன்று செழிப்புடன் வளர்ந்து விசாலத்தை விட ஒரு படி உயர்ந்து நிற்கிறள். அவளைப் பார்க்கும் போதெல்லாம் விசாலத்துக்குப் பெருமிதமாகவும் பிரமிப்பாகவும் இருக்கிறது. வித்யாவின் பேச்சில், பாவனைகளில், பழகும் தன்மையில் ஒரு துள்ளல். இளமையின் கொப்பளிப்பு தெறிக்கிறது. தந்தை பிச்சுமணியின் சாயல் அவ்வப்போது பளிச்சிடுகிறது. வித்யாவின் உள்ளத்தோடு, உருவத்தையும் பாதுகாக்க வேண்டிய பருவம் வந்துள்ளதை நினைத்து விசாலம் கவலைப்படுகிறள். சில சமயங்களில் வித்யா தனக்கே பிடிபடாத வகையில் நடந்து கொள்வதைக் காணும் போது விசாலத்துக்குச் சற்று வருத்தமாகக் கூட இருக்கிறது. சில நேரங்களில் தன் தோழிகளுடன் சகஜமாக அவள் பேசிக் கொண்டிருக்கும் சமயம் யதேச்சையாக விசாலம் கலந்து கொண்டாலும் கூட வித்யாவிடம் ஒருவித மருட்சி உண்டாகிறது. ஆயிற்று தை மாதத்துக்குள் அவள் கல்யாணம் எப்படியும் முடிந்து விடும். பி. எஸ்ஸி. இறுதி ஆண்டு அவள் படிப்பதால் கல்யாணத்துக்குப் பிறகு மூன்று மாதங்கள் படிப்பு இருக்கும். வித்யாவின் கணவனிடம் அனுமதி பெற்றுச் சித்திரை மாதம் பரீட்சை முடிந்ததும் அவர்கள் வீட்டில் கொண்டு விட்டு விடலாம்!

'வித்யா ஏன் இன்னும் வரவில்லை? எப்படியும் ஐந்தரை, ஐந்தே முக்கால் மணிக்கு மேல் ஆகாதே அவள் வருவதற்கு!' என்ற கவலை மனத்தில் நெருட, 'சௌந்தர்ய லஹரியை' முணு முணுத்தபடி அம்பாள் சன்னதியில் குத்துவிளக்கை ஏற்றி வைத்துவிட்டு, வாசற்படியில் வந்து நின்று கொண்டு, தெருக் கோடியில் வித்யாவின் முகம் தென்படுகிறதா என்று சற்று நேரம் கால் கடுக்க நின்று பார்த்தாள். 'ஆகாசவாணி, செய்திகள், வாசிப்பது....' என்று பக்கத்து வீட்டு ரேடியோ அலறவும் மணி ஏழேகால் ஆகிவிட்டது என் பதை உணர்ந்தபோது அவளது மனம் இருப்புக் கொள்ளவில்லை. வீட்டைப் பூட்டிக் கொண்டு மகாலக்ஷ்மி தெருவில் உள்ள வித்யாவின் தோழி பானுமதியைப் பார்த்து, விஷயத்தைத் தெரிந்து கொண்டு வரலாம் என்று எண்ணிப் பூட்டை எடுக்கப் போனபோது, 'அம்மாவுக்கு' என்று முகப்பில் வித்யாவின் கையால் எழுதப்பட்ட ஒரு 'கவரை'க் கண்டு அதனை அவசரம் அவசரமாப் பிரித்தாள். எட்டாக மடிக்கப்பட்டிருந்த ஒரு கடிதம் கீழே விழவும் துடிக்கும் மனத்தைத் தைரியப்படுத்திக் கொண்டு அதைப் பிரித்துப் படிக்கலானுள்.

'அன்புள்ள அம்மாவுக்கு வித்யா எழுதிக் கொண்டது.

இந்தக் கடிதத்தைப் படித்த பிறகு என்னை உன் மகள் என்று சொல்லிக் கொள்ளக்கூட நீ விரும்ப மாட்டாய் என்று எனக்குத் தெரியும். ஆனாலும் நான் உன்னை 'அம்மா' என்று அழைப்பதை உன்னால் தடுக்க முடியாதல்லவா?

சுற்றி வளைத்து எழுத எனக்கு இஷ்டமில்லை. இக்கடிதத்தை நீ படித்துக்கொண்டிருக்கும் நேரம் நானும் என் கணவரும் மதுரையை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருப்போம். ஆம்! நானும் என் கணவரும்தான்! தாய் தந்தையரின் ஏற்பாடுகளுடனும், ஆசிகளுடனும் நடக்கக் கொடுத்து வைக்காத எங்களது திருமணம்

முறைப்பெண்ணை ஒருவன் கஷ்டப்பட்டு, ஊரை எதிர்த்து, கொலையும் செய்து, படிக்க வைக்கிறன். அவன் ஜெயிலிலிருந்து வருகையில் அவள் கலெக்டராக அவனை வரவேற்கிறள். படிக்காத அவனை மணம் செய்து கொள்கிறள். கலெக்டர் என்ற பதவி அவளிடம் அவன் இணையாமல் தடுக்கிறது. கடைசியில் பதவி துறந்து அவளும் அவனும் இணைகிறர்கள். அவன் சிவகுமார். பாமரத்தனம் பஞ்சமின்றி வருகின்றது. அவள் சரிதா. கலெக்டருக்கான கம்பீரம், கனிவு, கணவன் அன்பு வேண்டி ஏக்கம் எல்லாம் சரிதா. பயன்படுத்தப்படாத பூர்ணம் விசுவநாதன். சொல்ல வந்ததைத் தடுமாருமல் கூறும் டைரக்டர் கே.விஜயன். நிறைய கைதட்டல்கள் பெறும் வசனம். அப்பாவையே பாஸ்டர்ட்' என்று திட்டும் சரிதாவின் பணக்காரத் தோழியும், பஞ்சு உடையில் நடனமும் தேவையற்றவை.

— களிளிசாஸ்திரி



ஆணி வேர்

இன்று காலே முருகனது சாட்சியாக வடபழனி கோவிலில் நடந்து விட்டிருக்கும். என் கணவர் சமுதாயப் பிரிவில் நமது வகுப்பைச் சேர்ந்தவரில்லேதான். ஆனால் என்னே வைத்துக் காப்பாற்றி, எனது உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்கத் தெரிந்த உயர்ந்த மனம் படைத்தவர். சென்ற ஆண்டுவரை எங்களது கல்லூரியில் துணைப் பேராசிரியராகப் பணியாற்றிய அவருக்கும் எனக்கும் சென்ற இரண்டு ஆண்டுகளாகப் பரஸ்பர அன்பும் ஈடுபாடும் உள்ளன. தற்போது அவர் மதுரையில் பணியாற்றுவதால், 'ராமனிருக்கும் இடம் அயோத்தி' என்ற நமது பண்பாட்டின்படி கட்டின புடவையுடன் திருமணமானவுடன் அவருடன் புறப்பட்டு விடுகிறேன். என் இறுதியாண்டுத் தேர்வுகளே எழுத விரைவில் சென்னேக்கு வருவேன். நீ அனுமதி அளித்தால் என் கணவருடன் வந்து உன்னிடம் ஆசி பெறவேண்டும் என்கிற தாபம் என்னுள் நிறைந்துள்ளது.

உனக்குத் தெரியாமல் நானுக ஏற்பாடுகள் செய்து திருமணம் செய்து கொண்டது தவறுதான்! என்ன செய்வது? சந்தர்ப்பமும் சூழ்நிலேயும், நீ என்னிடம் காட்டிய அளவுக்கு மீறின கண்டிப்பும், கட்டுப்பாடும் இதனே உன்னிடம் முன்பே சொல்லி அனுமதிகோரக் கூட முடியாத அளவுக்கு என்னுள் அதைரியத்தைக் கொடுத்து விட்டன. இளமையில் ஏற்பட்ட துயரச் சுமைகளினுல் உன்னுள் ஏற்பட்ட வைராக்கியம், 'தந்தையில்லாமல் வளர்க்கப்பட்ட பெண்' என்று நாலு பேர் சொல்லும் வண்ணம் ஏதும் நிகழக் கூடாது என்கிற நினைப்பைச் சற்று அதிகமாகவே உன்னுள் வளர்த்து, என்னுடைய ஆசைகளேயும், அபிலாஷைகளேயும் புரிந்து கொள்ளக் கூட முடியாத அளவுக்கு உனது கண்களேத் திரையிட்டு விட்டன. என்னே ஒரு சிறுமி போல் நடத்தி எனது உணர்வுகளேப் பற்றிச் சற்றேனும் கவலேப்படாமல் நீ நடந்துகொண்டது உனக்குச் சாதாரணமாக இருந்திருக்கலாம்! ஆனல் நான் எவ்வளவு வேதனேயும், ஏமாற்றத்தையும், அவமான உணர்ச்சியையும் அனுபவித்துள்ளேன் தெரியுமா? இளவயதில் கணவனே இழந்தது மிகவும் துர்ப்பாக்கியமான விஷயம்தான். ஆனல் பிறப்பதற்கு முன்பே தந்தையை இழந்துவிட்டு,

வைகாசி அனுஷம் 19–5–81 அன்று பெரியவாளுக்கு 88-வயது பூர்த்தியாகிறது.

பெரியவாள் ஜயந்தியையொட்டி 17-5-81 கல்கி பெரியவாள் சிறப்பிதழாக வெளிவரும்.

நமது நேயர்களில் ஆயிரக் கணக்கானவர்கள் பெரியவாளேத் தரிசிக்கச் சென்று மறக்க முடியாத அனுபவங்களேப் பெற்றிருப்பார்கள். தங்கள் அனுபவத்தை மற்ற கல்கி நேயர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புவோர் ரத்தினச் சுருக்கமாக எழுதி அனுப்பலாம்.

பிரசுரமாகும் அனுபவக் கட்டுரைகளுக்குப் பரிசு உண்டு. பெரியவாளேப் பற்றி எழுதி சன்மானம் பெற விரும்பாதவர்கள் பரிசுத் தொகையைத் தங்களுக்கு அண்மையில் உள்ள கோயில் உண்டியலில் காணிக்கையாகச் செலுத்திவிடலாம்.

பிரசுரத்துக்கு ஏற்காதவற்றைத் திருப்பி அனுப்ப இயலாது. கடிதப் போக்குவரத்து இல்லே. உறையின் மேல் ''பெரியவாள் ஜயந்தி'' என்று குறிப்பிடவும்.

முடிவு தேதி: 30–4–81

'நாலு பேர் இப்படி நினேக்கக் கூடாது, அப்படிச் சொல்லக் கூடாது' என்று அளவுக்கு அதிகமான கட்டுப்பாடும், வறட்டுத்தனமான கொள்கைகளும் கொண்டு தாயால் அடக்கி, ஒடுக்கி வளர்க்கப்பட்ட நான் இது வரை பெற்றதும் மற்றெரு வகையான துர்ப்பாக்கியமே! திருமணத்துக்குப் பின் பாவது சுதந்திரமான ஒரு குடும்ப அமைப்பு வேண்டும் என்கிற காரணத்தால்தான் எனது எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றதோர் எதிர்காலத் துணையை நானே தேர்ந்தெடுத்தேன்.

உன்னேக் குறை சொல்ல வேண்டும் என்ற உணர்வுடன் நான் இவற்றை எழுதவில்லே. உன் நிலேயில் எவர் இருந்தாலும் இப்படித் தான் நடந்து கொண்டிருப்பார்களோ என்னவோ. ஆனல் எனது தீர்மானத்தின் அடித்தளத்தில் உள்ள மன ஓட்டங்களே நீ புரிந்து கொண்டு என்னே மன்னிக்க வேண்டும் என்று தான் இவற்றை எழுதினேன்.

என்னே எதுவுமே கேட்காமல் எனது திருமணத்துக்கான ஏற்பாடுகளேச் செய்ய நீயாக முனேந்தபோது, நிலேமை மீறுவதற்கு முன்பு செயல்பட வேண்டும் என்கிற துடிப்பில் முடிந்ததே எங்கள் திருமணம்.

இப்போதும் ஒன்றும் நடந்துவிடவில்லே. நீ மனம் ஒப்பினல் நமது உறவு என்றும் நீடித்து இருக்க முடியும். எங்களுடனே வந்து நீ தங்கிவிடுவதை ஆவலுடன் நாங்கள் எதிர்பார்க்கிறேம். அதற்கேற்ப உனது மனத்தை நீ பக்குவப்படுத்திக் கொள்வதைப் பெறும் பேருக நாங்கள் எடுத்துக் கொள்வோம்.

உனது பதிலே ஆவலுடன் எதிர் நோக்கிக் காத்திருக்கும் உனது மகள் –வித்யா''

கனக்கும் உள்ளத்துடன் கடிதத்தை முடித்த விசாலம் கல்லாய்ச் சமைந்து நின்ருள். கடிதத்தின் வார்த்தைகள் பிழம்பை வாரி இறைக்கும் எரி நட்சத்திரமாய் அவளேத் தாக்கின. ஆகாயத்தை அண்ணுந்து வெறித்துப் பார்த்தாள். கடித வாக்கியங்கள் மறுபடியும் தாக்கின. இதயத்துள் ஓர் இடி; ஒரு மின்னல்; ஒரு வலி. கடித வாக்கியங்கள் கூக்குரலிட்டன. ஒரு வலி ஒரு பூகம்பம்; ஒரு பிரளயம். கடித வாக்கியங்கள்... பிரளயத்தின் விஸ்வரூபம்... ராமனிருக்கும் இடம் அயோத்தி.....

பாரததேவி:

பாரதியின் பாஞ்சாலி



ம.பொ.சி

பாரதியாருடைய பாஞ்சாலி சபதத்தின் முதல் பாகம் வெளியானது 1912ஆம் ஆண்டில். பாரதி தங்கியிருந்த புதுவையில்தான் அச்சிடப்பட்டு வெளியாகியிருக்கிறது.

பாஞ்சாலி சபதம் வெளியான நேரத்தில் தேசத்தில் திலகர், வ. உ. சி. போன்ற தீவிரவாதிகள் எல்லாம் சிறையில் அடைக்கப் பட்டிருக்கிறார்கள்.

காங்கிரசை ஆக்கிரமித்துக்கொண்டிருந்த மிதவாதக் கூட்டமோ இதை ஆட்சேபிக்கவும் துணிவு பெறவில்லை. உதைத்த காலுக்கு முத்தமிடுவது போல, ஆண்டு தோறும் கூடும் மகாசபையிலே பிரிட்டிஷ் அரசருக்கு ராஜ வாழ்த்துப் பாடுவதும், அவருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் போடுவதுமாக இருந்து கொண்டிருந்தது.

விடுதலை வீரர்கள் வேட்டையாடப்படுவதைப் பொதுமக்களும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் நினைத்து நினைத்துத் தனது நெஞ்சம் புண்ணாகியிருந்த நேரத்திலே பாரதியார், ''பாஞ்சாலி சபதம்'' படைக்கிறார். அதனாற்றான், அந்தக் குறுங் காப்பியத்திலே, ஆங்காங்கு பாரதிக்கு இருந்த விடுதலை ஆவேசம் வெளிப்படுகிறது. அந்த மகா கவியால் பாரத தேவியின் வடிவமாகவே பாஞ்சாலியைக் காண முடிகிறது.

துச்சாதனக் கொடியோன் பாஞ்சாலியின் கூந்தலைப் பிடித்து இழுத்த வண்ணம் அஸ்தினாபுரத்து வீதி வழியே அவளைக் கொண்டு செல்கிறான்.

அதைக் கண்ட மக்கள் மனம் வெதும்புவதைக் கூறுகின்ற பாரதியார், தாம் பாத்திரங்களைப் பேச வைக்கும் ஆசிரியர் என்பதையும் மறந்து, தாமே ஒரு பாத்திரமாகி, சொந்தக் குரலில் பேசத் தொடங்கி விடுகின்றார். இதுவரை அவர் பேசியது பாத்திரங்களின் குரலில்தான். இப்போதோ சொந்தக் குரலில் தமது நொந்த மனத்தின் வேதனையை வெளிப் படுத்துகின்றார். வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் அஸ்தினாபுரத்து மக்களை வசை பாடுகின்றார்.

''ஊரவர் தங் கீழ்மை
உரைக்குந் தரமாமோ?
வீரமிலா நாய்கள்,
விலங்கா மிளவரசன்
தன்னை மிதித்துத்
தராதலத்தில் போக்கியே,
பொன்னை யவளையந்தப்
புரத்தினிலே சேர்க்காமல்,
நெட்டை மரங்களென
நின்று புலம்பினார்
பெட்டைப் புலம்பல்
பிறர்க்குத் துணையாமோ?''

அஸ்தினாபுரத்து மக்கள், மனித ஜென்மம் எடுத்தும் — இளவரசுப் பதவியை வகித்தும் மனிதப் பண்பற்றவனாகி அந்தப்புரத்து அரசியை வீதி வழியே இழுத்துச் செல்லும் மிருகமாகிவிட்ட துச்சாதனனைக் காலால் உதைத்து வீதியோரத்தில் உள்ள சாக்கடையில் எறிந்திருக்க வேண்டுமாம்! அந்தக் கொடியவனிடமிருந்து பாஞ்சாலியை மீட்டு, அந்தப்புரத்தில் கொண்டு போய்ச் சேர்த்திருக்க வேண்டுமாம்! அதைச் செய்யாமலே வேடிக்கை பார்த்து நிற்கும் மக்கள் கூட்டத்தை ''வீரமில்லா நாய்கள்'' என்கிறார் மகா கவி. நாய்களிலும் வீரம் உள்ளவை உண்டுதானே! ஆம்; நாய்களிலும் கேடுகெட்ட நாய்கள் என்ற நினைப்பிலே, ''வீரமிலா நாய்கள்'' என்கிறார் பாரதி.

பாஞ்சாலி சபதத்திலே பாரதி வெறிபிடித்துப் பேசும் இடமெல்லாம் காப்பியம் படைக்கும் கவிஞனாகவன்றி, தேச பக்தி படைத்த வீரனாகவே எனக்குக் காட்சியளிக்கிறான்.

(மயிலை இலக்கிய வட்டம் - பாரதீய வித்யா பவன் சொற்பொழிவிலிருந்து)

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press,

இரண்டே வருடங்களில்
விற்பனையில் முதல் இடம்

JOHNSON®

மிக்ஸர் கிரைண்டர்

25 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமும், இந்தியாவிலே சமையலறைச் சாதனங்களில் ஏராளமான வகைகளும் கொண்ட ஜான்சனின் சீரிய படைப்பு ஜான்சன் மிக்ஸர்—கிரைண்டர். எங்கெங்கும் அறிமுகப் படுத்தினதால் ஐயமின்றி தலை சிறந்ததென இரண்டே வருடங்களில் பீடு நடை போடுகிறது.

ஏன் எனக் கேட்பின் :

இலவசம் ! தனி எவர்சில்வர் கிண்ணம்!
உலர்ந்த அரவைக்கென தனியான எவர்சில்வர் கிண்ணமிருப்பதால் ..ஊலாக்களின் மணமும், ருசியும் மில்க் ..டிக்குகளில் கலக்காமல் பாதுகாப்பு அளிக்கிறது.






அதிக சுகாதாரம் பாகங்களை எளிதாக கழட்டும்படி தயாரிக்கப் பட்டிருப்பதால் நீங்கள் துப்புரவாகக் கழுவ முடிகிறது. உணவுப் பண்டங்களின் துகள்கள் உள்ளே நின்று விடும் சந்தர்ப்பம் இல்லை.

முழுமையான பாதுகாப்பு. பிளேட் பாகங்கள் இரு கிண்ணங்களிலும் உறுதியாக இணைக்கப் பட்டிருப்பதால் இயக்கத் தில் பிளேட் பறந்து விடாமல் பாதுகாப்பு அளிக்கிறது.






கன ரக ஓட்டம் அதிக உறுதியான 450 வாட் மோட்டார் நமது இந்திய சமையலுக்கென்றே சிறப்பாக அமைக்கப் பட்டிருக்கிறது. 45 நிமிடங்கள் நிறுத்தாமல், தடையின்று ஓட்டலாம்.

மற்ற சிறப்பு அம்சங்கள்:

- மோட்டார் குளிர்ச்சியாக இருப்பதற்கென தனியான காற்றோட்டம்
- சீரிய கலவை மற்றும் அரவைக்கென மேம்படுத்தப்பட்ட பிளெட் அமைப்பு
- ஒரு வேகத்திலிருந்து மற்றொரு வேகத்திற்கு செம்மையாக மாற்ற இஞ்சர் ஸ்விட்ச்
- ஒரு வருடத்திற்கு உத்திரவாதம் ஜான்சன்



JOHNSON®

இயக்கத்திலும், ஆற்ற லிலும் இணையிலாச் சிறப்பு கொண்டது

BE-8001A

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

